

குண்டூசி
அக்டோபர் 1958...75 சதம்
மொராக்-ஸ்ரீனிவாஸ் பிலிம்ஸ்
பாண்டித் தேவன்
டைரக்ஷன்: K. சுப்ரமண்யம் B.A.B.L.,

இப்பொழுது நடைபெறுகிறது

அக்டோபர் வெளியீடு
ஏவி எம் புரொடக்ஷன்ஸ்
மாமியார் மெச்சின மருமகள்
தயாரிப்பு & டைரக்ஷன் :
கிருஷ்ணன் பஞ்சு
AVM
புரொடக்ஷன்ஸ்

134163

நவம்பர்...... 11 ......வெளியீடு
RAJESWARI FILMS
MADRAS-2
ராஜேஸ்வரி பிலிம்ஸ்
சுமங்கலி
K. துரைசாமி அய்யங்கார்
நடராஜன்
S.S. நாதன் | ராங்கா ராவ் | M.K.R. நம்பியார் | V. தாண்டவம்..
ஸ்டுடியோ: விஜயா, நரசு, நியூடோன்
BHARAT STUDIO



திடீர் என்று ஒருவருக்குப் புகழ் வரும்; வந்த வேகத்திலே மறைந்தும் போகும். இது தமிழ்ப் பட உலகிலே சகஜமாக நடந்து வரும் ஒரு ஜால வித்தை.

இந்த வித்தைக்கு விலக்கான மனிதர் கே. சுப்பிரமணியம். மௌனப் பட காலத்திலேயே படத் துறையில் புகுந்த இவர் இன்று வரை என்றுமே மறக்கவும், மறுக்கவும் முடியாத ஒருவராக இருந்து வருகிறார். திரைத் தொழிலுக்குக் கடுமையான பிரச்னைகள் ஏற்பட்ட போதெல்லாம் "எங்கே நம்ம ஸார்" என்று, இந்தப் பட உலக சாலிவாகனனைத்தான் தேடிப் போனார்கள்; போகிறார்கள்; போவார்கள்.

எத்தனையோ நட்சத்திரங்களையும் கலை நுணுக்க நிபுணர்களை சிருஷ்டித்து, நம் தமிழ்ப் பட உலகிலே உலவ விட்டிருக்கிறார் இவர்.

அவரது கற்பனைச் சித்திரமான **பாண்டித் தேவன்** அவரது முந்திய படங்களை யெல்லாம் விட பல விதத்திலும் சிறப்புற்று விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த ஊசியில்

அக்டோபர் '58

மாலை - 1] [மலர் 7

அவமானச் சின்னம் ... 5
சினிமா உலகில் ... 8
பாரதிக்கு சிவாஜியின் அஞ்சலி ... 12
எனக்குப் பிடித்த வேஷங்கள் ... 16
நுனிப்புல் ... 21
கலைக் கூடங்களில் கடந்த மாதம் ... 25
பொதுஜனம் பேசுகிறார் ... 30
வளரும் படங்கள் ... 33
ஜிம்போ ... 37
கடல் விடு தூது ... 41
வாழ்க்கை (வி)சித்திரம் ... 49
பரதமுனி பாதையிலே ... 52
கேளுங்கள் ... 60
நீலக் கவர் ... 64
நேயர் விமர்சனம் ... 72
பாண்டித் தேவன் ... 77
வட நாட்டில் ... 83
நிகழ்ந்தகால நினைவுகள் ... 86
காற்றினிலே நக்ஷத்திர பேட்டி ... 88
இப்படிப் பேசுவார்களா? 92
நடனம் ஆடினர் ... 94
புதுப் படங்கள் ... 97
சபாஷ் மீனா ... 99
நிருபர் படம் பார்க்கிறார் ... 103
நட்சத்திரத்துடன் ஒரு நாள்—கே. ஏ. தங்கவேலு ... 105
மாமியார் மெச்சின மருமகள் ... 112
இது செய்தி ... 115

★

வர்ணப் படங்கள்:

சுப்பிரமணிய, ஆங்கில, செம்படவ, சமூக உடைகளில் குமாரி வனஜா, ஈ. வி. சரோஜா.

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. யாரையும் குறிப்பிடுபவன அல்ல.

வியாபாரத்தின் வெற்றி

விளம்பரத்தில்தான் இருக்கிறது

★

விளம்பரத்திற்கு வேண்டிய அழகான
கலர், ஆப்டோன் பிளாக்குகள், போட்டோ
ஆப்ஸெட் போஸ்டர்கள் முதலியவைகள்
தயாரிக்க

இந்தியாவிலேயே
இணையற்ற இடம்

★

பிரசாத் பிராஸஸ் பிரைவேட் லிமிடெட்,

சந்தமாமா பில்டிங்ஸ், சென்னை - 26.

அவமானச் சின்னம்

சென்னை நகரில் சில இடங்களில் வெள்ளைக்கார துரைகளின் சிலைகள் இருந்தன. "நம்மை அடக்கி ஆண்ட வெள்ளைக்காரர்களின் சின்னம் நம் நாட்டில் இருப்பதா? கூடாது" என்று எண்ணிய நம் சென்னை சர்க்கார் அவைகளை அப்புறப்படுத்தி, பாராட்டுதலைப் பெற்றது.

ஆனால், கேவலம், வெள்ளைக்காரர்கள் சிலையை வேண்டாத சின்னம் என்று ஒதுக்கிய நம் சென்னை சர்க்காரின் பார்வையில் ஒரு அவமானச் சின்னம் படாமல் போனதே என்பதை எண்ணி வருந்தாமல் இருக்க முடியவில்லை.

இந்த இதழில் "பொதுஜனம் பேசுகிறார்" பதியில் வெளியாகியுள்ள கடிதங்களைப் படித்துப் பாருங்கள். ''சாரங்கதரா'' பட போஸ்டர் சம்பந்தமாக கடிதம் எழுதியுள்ளவர்களின் உள்ளம் எவ்வளவு வேதனைப் பட்டிருக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள். அந்த போஸ்டரைத்தான் நாம் அவமானச் சின்னமாகக் கருதுகிறோம்.

இடத்தேவை காரணமாக நமக்கு வந்துள்ள நூற்றுக் கணக்கான கடிதங்களில் சிலவற்றை மட்டுமே நாம் அப்பகுதியில் பிரசுரித்திருக்கிறோம். முக்கியமாக சகோதரிகள் எழுதியுள்ள கடிதங்கள்தான் அதிகம்.

அந்த போஸ்டரை போட்டோ எடுத்து இங்கே பிரசுரித்து இந்தத் தலையங்கத்தை எழுதுவது என்பதுதான் முதலில் நாம் நினைத்தது. ஆனால், அந்த அறுவெறுக்கத்தக்க போஸ்டரைப் பிரசுரித்து எங்கள் பத்திரிகையையும், அதைப் பார்த்திராத பல்லாயிரம் வாசகர்களின் உள்ளங்களையும் பாழடிக்க விருப்பமின்றித்தான் அந்த யோசனையைக் கை விட்டோம்.

இப்படிப்பட்ட ஒரு போஸ்டரை எழுதிய சைத்ரீகர், எழுதச் சொன்ன படாதிபதி இவர்களெல்லாம், தங்கை தமக்கைகளுடன் பிறக்க வில்லையா என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

இப்படியான போஸ்டர்களால்தான் படத்திற்கு விளம்பரம் தேடி, ரஸிகர்கள் கூட்டத்தைச் சேர்க்க முடியுமா? சமபந்தப்பட்டவர்கள் அப்படி நினைத்தால் அது பெரிய தவறு. 'படத்தின் போஸ்டரே இவ்வளவு ஆபாசம் என்றால் படம் எவ்வளவு ஆபாசமா யிருக்குமோ?' என்று சொல்லி தன் மனைவி மக்களைப் படத்திற்கு அனுப்பமாட்டான் மானமுள்ள மனிதன். இதைப் படத் தயாரிப்பாளர்கள் நன்றாக உணரவேண்டும்!

இப்படிப்பட்ட, அவமானத்தின் சின்னங்களான, போஸ்டர்கள் சென்னை சர்க்கார் கண்களில படாததுதான் ஆச்சரியம். பட்டும் படாதது போல இருக்கிறார்களென்றால் அது மிகப் பெரிய அநீதி.

ஆபாசமாக எழுதுவதையும், ஆபாசமாகப் பேசுவதையும் கண்டிக்கவும், தண்டிக்கவும் சட்டங்கள் போடும் அரசாங்கம் பார்வைக்கு ஆபாசமாக உள்ள போஸ்டர்கள் விஷயத்திலும் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

பரஸ்பரம்

வாசகர்கள் அளித்து வருகிற ஆதரவிற்கு எமது நன்றி கலந்த வந்தனத்தைத் தெரிவித்துக் கொண்டு, மகிழ்ச்சிகரமான செய்தி ஒன்றையும் கூற விரும்புகிறேன்.

உங்கள் அபிமானப் பத்திரிகையின் அடுத்த இதழ் தீபாவளி விசேஷ இதழாக வெளிவர விருக்கிறது. விஷயதானத்திலும், படங்களிலும் பல விசேஷங்கள் இருக்கும். புதுமையான அம்சங்களும் இடம்பெற விருக்கின்றன. இந்தக் குறிப்பை மட்டும் முன் கூட்டியே சொல்லி வைக்கிறோம். தீபாவளி அன்று எல்லா வாசகர்களையும் மகிழ்விக்கும் என்றும் உறுதி கூறுகிறோம். ஏமாற்றத்தைத் தவிர்க்க இன்றே உங்கள் ஊர் ஏஜண்டிடம் பதிவு செய்து கொண்டுவிடுங்கள்.

கத்தியைக் கண்டு மிரளுகிறாரா? அல்லது பரம்பரைத் திருடன் போல் ஜெமினி கணேசன் கத்தியைக் கையாளுவதைக் கண்டு பிரமிக்கிறாரா? — ''அதிசயத் திருடனி''ல்.

இந்திராணி
சிவகுருநாதன்
திருமண



படாதிபதி ப. நீலகண்
டன் புத்திரியின் தி
மணம் வெகு சிறப்பா
சென்னையில் நடந்த



"சினிமாவினால் கிழவி கூட கெட்டுப் போகிறாளே" —
ஈ. வே. ரா.
மணி


கொடியது. சினிமா போகாதே!
சினிமாத் தொழிலுக்கு எல்லா உதவிகளும் அளிப்போம்.
அரசியல் தலைவர்கள் ஒரு பக்கம் சினிமாவை ஆதரித்தும் ஒரு பக்கம் தாக்கியும் வருகிறார்கள்.

"ஓசி சினிமாவை (ஐந்தாண்டு திட்டம் படம்) பார்க்க வரமாட்டேன் என்கிறார்களே" என காங்கிரஸ் எம். எல். ஏ. ஒருவர் வருத்தம் தெரிவித்தார்.
CINEMA
இலவச சினிமா காண்பிக்கப்படும்
"மாணவர்கள் சினிமாப் பார்த்தால் படிப்பில் கவனம் போகாது" என நிதிமந்திரி கூறுகிறார்.
மணி

சினிமா உலகில்

[நமது நிருபர் சரடு]

எம்ஜியார் பிலிம்ஸ் கட்டடத்தில் எம். ஜி. ராமச்சந்திரன் தனது கதை இலாகாவினர் மத்தியில் உட்கார்ந்திருந்தார். சுற்றிலும் பெரிய பெரிய புஸ்தகங்கள் இருந்தன.

"வணக்கம்!" என்று குரல் கொடுத்தபடி உள்ளே நுழைந்தேன்.

"வாருங்கள், அமருங்கள்" என்று வரவேற்றார் புரட்சி நடிகர்.

புத்தகங்களில் ஒன்றைப் புரட்டிப் பார்த்தேன். சோழ மன்னர்கள் பற்றிய சரித்திர ஆராய்ச்சி நூல் அது. "எல்லாமே..."

"இவைகள் எல்லாமே பிரபல அறிஞர்களின் சரித்திர ஆராய்ச்சி நூல்கள் தான்" என்று விளக்கினர் அந்தக் கதைக் குழுவைச் சேர்ந்த ஒருவர்.

"ஓ, 'பொன்னியின் செல்வனு'க்காக சரித்திர ஆராய்ச்சி நடக்கிறது போலும்! எந்த ஆராய்ச்சி நூலை எடுத்தாலுமே வந்தியத்தேவன், ஏன் சோழ மன்னர்கள் எல்லோருமே தெய்வ பக்தி மிகுந்தவர்கள் என்ற ஆதாரம்தானே கிடைக்கும்" என்று சொன்னேன்.

"பார்த்தாயா? இதற்குத்தான் பத்திரிகைக்காரர்களை அண்டவிடக் கூடாது என்று நான் சொல்வது" என்று கூறுவதுபோல தன் தம்பி எம். ஜி. ராமச்சந்திரனைப் பார்த்தார் எம். ஜி. சக்ரபாணி.

"யதார்த்த வாதி வெகு ஜன விரோதி" என்று கூறிவிட்டு, "நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்" என்று நான் பாட ஆரம்பித்தேன்.

"ஓ, பாரதி விழாவுக்குப் போய் வந்தவனில்லையா நீ? விழாவெல்லாம் எப்படி?" என்று அதில் அதிக அக்கறை யில்லாதவர் போல் சுவாரஸ்யமாகக் கேட்டார் எம். ஜி. ஆர்.

"பிரமாதம் போங்கள். கலைஞர்களுக்கே ஒரு பெருமையைத் தேடிக் கொடுத்துவிட்டார் சிவாஜி."

"சிவாஜி எது செய்தாலும் சிறப்பாக இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. கலைஞர்கள் சார்பில் எனது நன்றி அவருக்கு."

"உங்கள் மனம் பரிசுத்தமானது. அது எனக்கும் தெரியும், அந்த சிவாஜிக்கும் தெரியும். ஆனல்......"

"என்ன ஆனல் போடுகிருய்?"

"உங்கள் 'தம்பி' மார்கள் சிலர் செய்யும் அட்டகாசம்தான் மனம் வருந்தும்படி இருக்கிறது. அவர்களது வாயை அடக்கி, அவர்களது பேனவை மூடி வைக்கச் சொல்லுங்கள். அப்போதுதான் உங்கள் மீதும் உங்கள் கழகத்தின் மீதும் களங்கம் வராது" என்று கூறி, அங்கிருந்து புறப்படலானேன்.

"நிருபரே, சற்று இரும்" என்று என்னை நிறுத்தினர் எம். ஜி. ஆர்.

எழுந்து என் அருகில் வந்தவர் "நாடோடி மன்னன்" பத்திரிகைக் காட்சி அன்று என் பேச்சை..."

"கேட்டேன். மனம் திறந்து பேசினீர்கள், பத்திரிகைக் காரர்களுக்கும் உங்களுக்கும் ஆகாது செய்து

வரும் கருங்காலிகள் ஒழிக" என்று கோஷமிட்டுவிட்டு நகர்ந்தேன்.

மீனம்பாக்கம் விமான நிலயத்திலிருந்து காரில் வந்து கொண்டிருந்தார் கே. சுப்ரமண்யம். என்னைப் பார்த்து, "காரில் ஏறிக்கொள்ளேன்" என்றார்.

"குழந்தைப் பட சம்பந்தமாக பம்பாய் சென்றுவிட்டுத் திரும்பி வருகிறேன்."

"அது சரி, கச்சா பிலிம் விஷயமாக இங்கு நடக்கும் சண்டை......"

"அதைப் பற்றியே பேசாதே. கேட்கவே பிடிக்கவில்லை. இவர்கள் சண்டையில் என் போன்றவர்கள் அவதிப் படவேண்டியதாகிவிட்டது. அதுதான் கண்ட பலன்" என்று சலித்துக்கொண்டார்.

"ஆமாம், இந்த கச்சா பிலிம் நெருக்கடி தீர உங்கள் யோசனை ஏதாவது......?"

"என் யோசனையா? அதை யார் கேட்கப் போகிறார்கள். இருந்தாலும் சொல்கிறேன். ஒவ்வொரு ஸ்டுடியோ வாசலிலும் பிலிம் சேம்பர் ஆள் ஒருவரைப் போடவேண்டும். அங்கு படம் பிடிப்பவர்களுக் கெல்லாம் அவர் கச்சா பிலிம் சப்ளை செய்யவேண்டும். இப்படிச் செய்வதனால் உண்மையில் படம் பிடிப்பவர்களுக்கு பிலிம் கிடைக்கும். படம் பிடிக்கிறேன் என்று பெயர் பண்ணுகிறவர்கள் 'பிளாக் மார்க்கெட்' பண்ணவும் வழியில்லை."

"அருமையான யோசனைதான், ஆனால் நடைமுறையில் அது சாத்தியமா என்பது......"

"பார்த்தாயா? நான் சொல்வது உனக்கேகூட சரியானதாகப் படவில்லை" என்று அவர் கூறும்போது, "நான் வருகிறேன்" என்று காரை நிறுத்தச் சொல்லிக் கீழே இறங்கிக் கொண்டேன்.

நவராத்திரி விற்பனை!

உயர் ரக கொள்ளே காலம் பட்டுச் சேலைகள், சோளி பீஸ்கள், பாவாடைகள்.

ஏராளமாக புதிதாக ஸ்டாக் செய்துள்ளோம்

வாடிக்கையாளர்களின் சௌகரியத்தை முன்னிட்டு எமது ஷோ ரூம் நன்கு விஸ்தரிக்கப்பட்டு, ஜவுளி ரகங்களை சௌகரியமாகத் தேர்ந்தெடுக்க வசதி செய்துள்ளோம்.

ஆரணி ஸில்க் ஹவுஸ்
(பட்டுச்சேலை உற்பத்தி மற்றும் விற்பனையாளர்கள்)
5, ஸன்னதி தெரு — மயிலாப்பூர் — மதராஸ் 4.

டெலிபோன் நெ. 71349

KRC

ஞானத்திலே பர மோனத்திலே உயர்
மானத்திலே அன்ன தானத்திலே
கானத்திலே அமுதாக நிறைந்த
கவிதையிலே உயர் நாடு

இது மகாகவி பாரதியின் வாக்கு. அப்படிப்பட்ட பாரத நாட்டை கடந்த மாதம் 11, 12ம் தேதிகளில் எட்டையபுரத்தில் காண முடிந்தது என்றால் அது மிகையாகாது. அந்தப் பெரும் பாக்கியம் கிடைக்கப் பெற்ற லட்சம்பேரில் நானும் ஒருவன்.

அந்த இரண்டு நாட்களிலும் கலைமகள் வெள்ளைத் தாமரைப் பூவிலும், வீணை செய்யும் ஒலியிலும் இருந்திருக்க மாட்டாள். எட்டயபுரத்து பிரம்மாண்டமான கொட்டகையிலே கலைஞர்களும், கவிஞர்களும் கலந்த குழுவைக் கண்டு, தமிழ் மொழியின் புகழ் பாடப்பட்டது கேட்டு ஆனந்தக் கண்ணீர் உகுத்திருப்பாள்.

பாட்டுக்கு ஒரு புலவனும் பாரதிக்கு, எழுத்துப் புலவனும் "கல்கி"யின் முயற்சியிலே எட்டையபுரத்திலே உருவாயிற்று மணி மண்டபம். ஹாஸ்யப் புலவர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் எளிய முறையிலானாலும், சிரத்தையுடன் அங்கு விழாக் கொண்டாடினார். அவர்கள் செய்த தொண்டின் பாதையிலே நடிப்புப் புலவன் சிவாஜி கணேசன் இந்த ஆண்டு விழாவைச் சிறப்பாக நடத்தி, "கலைஞர்களே. என்னைப் பின் பற்றுங்கள்" என்று சொல்லாமல் சொல்லிவிட்டார்.

இந்த விழாக் குழுவின் வருகையைப் பற்றி முன்கூட்டியே தெரிந்திருந்தமையினால் வழி நெடுக ரஸிகர்கள் இரு பக்கமும் கூடி நின்று, "வாழ்க பாரதி நாமம், வாழ்க சிவாஜி கணேசன்" என கோஷமிட்டனர்.

ரஸிகர்கள் அனுபவம் பற்றி எவ்வளவோ கூறலாம். ஆனால்நட்சத்திரங்கள் அல்லாத எங்கள் போன்ற விருந்தாளிகளைப் பார்த்து விட்டு அந்த ரஸிகர்கள் கொடுத்த பட்டங்கள் இருக்கின்றனவே, அபாரம்!

காருக்குள் ஆவலாக எட்டிப் பார்ப்பார்கள். நட்சத்திரம் யாரும்

போட்டோக்கள் : என். கே. பாலகிருஷ்ணன்

இல்லை என்று தெரிந்ததும், "டேய் இது வெத்து வேட்டு," "சோத்து அமுக்கிகள்," "வித் தவுட்டு — இப்படி இன்னும் ஆனந்தம் உண்டு.

பன்னிரண்டு மணிக்கு திருச்சி எல்லையை அடைந்து விட்டோம். ஆனால், திருச்சி ரஸிகர்கள் கூட்டத்தில் சிக்கிய எங்கள் கோஷ்டி, திருச்சி சங்கிலியாண்டாபுரத்திலுள்ள சிவாஜி கணேசனின் வீட்டை அடையும் போது மணி மூன்ருகி விட்டது.

சிவாஜி கணேசன் ஒரு சிறந்த நடிகர் என்று மட்டும்தான் நினைத்திருந்தேன். நம் நாட்டுக்கே—அதுவும் விசேஷமாக தமிழ் நாட்டுக்கே ஏகபோக உரிமையான விருந்தோம்பல் குணத்திலே தன் நிகரற்றவர் அவர் என்பதையும் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. சென்னையை விட்டுப் புறப்பட்டது முதல் மீண்டும் எட்டையபுரத்திலிருந்து சென்னைக்குப் புறப்படும் வரை ஒவ்வொரு நாளும் சிற்றுண்டி நேரம், சாப்பாட்டு நேரம் அவரே நேரில் இருந்து அனைவரையும் உபசரித்தார். பத்திரிகாசிரியர்களையும் கலைஞர்களையும் மட்டும் அவர் உபசரித்துவிட்டு நின்றுவிடவில்லை; டிரைவர்களிடமும், பணியாட்களிடமும் அதே பரிவைக் காட்டிய பெருந்தன்மையை அவரிடம் கண்டேன்.

திருச்சி ரஸிகர்களிடமிருந்து ஒருவாறு சமாளித்துக்கொண்டு மதுரையை நோக்கிப் பயணப்பட்டோம். மதுரை ரஸிகர்களிடையே மிதந்து சென்று, மதுரை நகரசபை ஏற்பாடு செய்திருந்தவரவேற்புக்குப் போய்ச் சேர்ந்தோம். அவர்கள் மாலை 5-30 மணிக்கு ஏற்பாடு செய்திருந்த சிற்றுண்டியை 8-30 மணிக்கு முடித்துக் கொண்டு, பிரயாணத்தைத் தொடங்கினேம்.

விருதுநகரிலே விருந்துக்கு உட்கார்ந்தபோது மணி சரியாக பதினென்று. விருதுநகர் வாசியான நடிகர் வி. கே. ராமசாமிதான் அன்று விருந்துஅளித்தவர். விருதைநகர் மக்கள் சார்பிலே சிவாஜி கணேசனுக்கும், எங்கள் குழுவைச் சேர்ந்த பலருக்கும் மாலைகள் போடப்பட்டன.

சென்னையிலிருந்து கிளம்பும் போது இருபத்தியேழாக இருந்த கார்களின் எண்ணிக்கை திருச்சியில் முப்பதாகி, மதுரையில் முப்பத்திரண்டாகி, மேலும் ஏ. பி. ஸி. போடவேண்டிய அளவுக்கு விரிந்து விட்டது, கோயில் பட்டியை அடைந்தபோது.



பத்தாம் தேதி காலை சிற்றுண்டியை முடித்துக் கொண்டு சிலம்புச் செல்வர் ம. பொ. சி. தலைமையில் எங்கள் கோஷ்டி சுற்றிவரப் புறப்பட்டது. எட்டயபுரம் சென்று பாரதி மணி மண்டபத்தையும், விழாவுக்காப் போடப்பட்ட பந்தலையும்



பார்த்துக் கொண்டோம், கார்கள் பாஞ்சாலங் குறிச்சியை நோக்கி விரைந்தன. வீரபாண்டிய கட்டபொம்மன் தொழுத ஜக்கம்மா கோயிலையும் அவன் ஆட்சி செய்து இன்று பாழடைந்து பூமிக்குள் மறைந்து விட்ட கோட்டை கொத்தளங்களையும், கண்டு களித்தோம். ம. பொ. சி. அவர்கள் கூட இருந்து எங்களுக்கு எல்லாவற்றையும் விவரமாக விளக்கிச் சொன்னார்.

வருகிற வழியில் ஒட்டப்பிடாரனில் தியாகி வ. உ. சிதம்பரம் பிள்ளையின் வீட்டையும் நாங்கள் பார்த்து ஒரு கும்பிடு போட்டு விட்டுத் திரும்பினோம்.

மறுநாள் காலை காருகுறிச்சி அருணாசலத்தின் நாதசுர இசையுடன் பாரதி பட ஊர்வலத்துடன் முதலமைச்சர் கே. காமராஜ் தொடங்கி வைக்க பாரதி விழா ஆரம்பமாயிற்று.

இங்கு முக்கியமான, சிறப்பான ஒரு செய்கையைக் குறிப்பிட விரும்புகிறேன். உதிர்ந்து போகும் மலர் மாலைகளுக்கு பதில் கதர் துப்பட்டாக்களைப் பயன் படுத்தியது மிகவும் பாராட்டத்தக்க ஒரு செயல். சிவாஜி கணேசன் அன்று வரவேற்புரையை வாசித்து அளித்தார். இன்று அவர் நடத்திய பாரதி விழாவைப்பற்றிக் குறை கூறுவோருக்கு, அவரது நோக்கம் குறித்து குறுகிய எண்ணம் கற்பிக்கும் ஏடுகளுக்கு முன் கூட்டியே பதில் அமைப்பது போல "என் மன நிம்மதிக்காக இந்த விழாவைக் கொண்டாடுகிறேன்" என்று சொன்னபோது "வாழ்க சிவாஜி கணேசன்" என்று பல்லாயிரம் குரல்கள் வானமுகட்டை எட்டின. டி.கே. சண்முகத்தின் தலைமை உரையிலே கருத்து நிறைந்திருந்தது. முக்கியமாக "நாத்திகம் தமிழர் பண்பன்று" என்பதை ஆணித்தரமாக எடுத்துக் கூறி யிருந்தார் அவர் உரையில்.

தன்னைப்பற்றிக் குறைவாகவே மதிப்பிட்டுக் கொள்வதில் என்ன தான் ஆனந்தம் இருக்க முடியும். 'தமிழ் வளரவில்லை' என்ற முறையில் பேசினார் நிதி மந்திரி. ஆனால், "தமிழ் வளர்ந்து வருகிறது; இதோ உதாரணத்திற்கு இங்கே கல்கி" என்று பொருள் பட கல்கி படத்தைத் திறந்து வைத்த எஸ். எஸ். வாசன் பேசியது மந்திரிக்கு அவர் அளித்த சரியான பதிலாகும்.

கலைவாணர் படத்தைத் திறந்து வைத்த சிவாஜி கணேசன் 'இவன் பெரியவன், அவன் சின்னவன்' என்று கலைஞர்களைப் பாகுபாடு செய்ய வேண்டாம்" என்று உள்ளம் உருகக் கேட்டுக்கொண்டார். அப்



படிச் செய்தே தங்கள் பிழைப்பை நடத்தி வரும் கோஷ்டியினர் யாரும் அதைக்கேட்க அங்கு இல்லையே என்ற குறை எல்லோருக்குமே ஏற்பட்டது.

பிற்பகலில் பாரதியின் கவிதைகள் பற்றிப் பலர் சொற்பொழிவாற்றினார்கள். கலைஞர் ஏ.பி. நாகராஜன் பேசியதில்லை "ஒண்ணுமில்லை" — சிறப்பாக இருந்தது. சின்ன அண்ணமலை பழைய ஹாஸ்ய வெடிகளை எடுத்து விட்டார். என்றாலும் அவர் சொன்ன முறை சிரிக்க வைத்தது. ப. ஜீவானந்தம் பாரதியை கம்யூனிஸ்டாகக் கண்டார். ம. பொ. சி. கவியை சமாதான தூதராகப் பார்த்தார். சிலம்புச் செல்வர் பேசுகையில் இலக்கியத்தின் சில செல்வங்களை நம் முன் கொண்டு வந்து நிறுத்தினர்.

"இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா?" என்று தோற்றமளிக்கும் படாதிபதி எம். ஏ. வேணு இந்திய சர்க்கார் தென்னாட்டவர் விஷயத்தில் காட்டும் அலட்சியம் பற்றி அன்று பேசியபோது அவருக்கு ஆவேசமே வந்து விட்டது.

இரண்டாம் நாள் விழா தூய இலக்கிய விழாவாகவே இருந்தது. பேராசிரியர் அ. சீனிவாச ராகவன் போன்றவர்களின் கருத்து மிக்க சொற்பொழிவுகள் இடம் பெற்றன.

இலக்கிய விழாத் தலைவர் ம. பொ. சி அன்றும் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர். "இலக்கியமும் கலையும் இரு நதிகள். அவைகளின் சங்கமமே இந்த விழா"

என்று குறிப்பிட்டார். சினிமாத் தொழில் பற்றிய சில தவறான விவரங்களையும் அவர் வெளியிடத் தவறவில்லை.

இரண்டு நாட்களிலும் நிகழ்ச்சி நிரல்களின் இறுதிக் கட்டமாக கலை விழா இடம் பெற்றது. இரண்டாவது நாள் விழாவில் சிவாஜி கணேசன் பாரதியாகத் தோன்றி, ரஸிகர்களின் பாராட்டுதலைப் பெற்றார்.

'நம் நாட்டிலே, ஏன், உலகசரித்திரத்திலேயே ஒரு மகா கவிக்கு இவ்வளவு விமரிசையான முறையிலே அஞ்சலி செலுத்தப்படவில்லை' என்று கூறும்படி விழாவைச் சிறப்புற நடத்திவிட்டார் சிவாஜி. அதற்கு அவருக்கு உற்ற துணையாக உழைத்தனர் பல கலைஞர்களும் நண்பர்களும். ஏ. பி. நாகராஜன் ஆரம்ப முதல் விழா முடியும்வரை சிவாஜியின் வலது கையாக இருந்தார் என்றால் அது மிகையாகாது.

பெரியண்ணன் என்பவர் பெயரளவில் அப்படியிருக்கவில்லை. சிவாஜிக்கு உடன் பிறந்த பெரியண்ணன் போல் விழாவின் வெற்றிக்கு உதவினர். முறுக்கிவிட்ட மீசையும், கையில் இடுக்கியதோல் பையுமாக சிவாஜியின் சகோதரர் தங்கவேலு பம்பரமாகச் சுழன்றார். மற்றும் எம். ஆர். சந்தானம், டி. என். சிவதாணு, யதார்த்தம் பொன்னுசாமி, தேவி நாடக சபா ரத்தினம் ஆகியோரும் மற்றும் பலரும் அளித்த ஒத்துழைப்பை அளவிடவே முடியாது.

எனக்குப் பிடித்த வேஷங்கள்

குமாரி வனஜா



வனஜாவுக்கு நாராயணசாமி மேக்கப் செய்கிறார்.

"அஞ்சு வயதினிலே அறியாப் பருவத்திலே" நான் கால்களில் சலங்கை குலுங்க, ஆட ஆரம்பித்து, இன்று இந்த நிலைக்கு உயர்ந்தமைக்கு எம்பெருமான் முருகன், அருள்தான் காரணம். ஆகவே, வள்ளிக் கணவன் பெயரை நினைத்தாலும் என் உள்ளம் பக்தியில் நிரம்பி வழிகிறது. அவர் வேடத்திலே தோன்றுவதில் அலாதி இன்பம் காண்கிறேன்.

மேனி மினுக்கிடவே மேனாட்டு உடை என்றாலும் மச்சகந்தியாக செம்படவப் பெண்ணை உடை உடுக்கும் போது நம் நாட்டுக் கலைப் பண்பு அதில் நன்கு தெரிகிறது.

நடனத்தையும், நடிப்பையும் மறந்து கொஞ்ச நேரமாவது நிம்மதியாக உலவ நினைக்கும் சொற்ப நேரம்தான் இந்த மாதிரி உடையை அணிந்து நான் அனுபவிக்க முடிகிறது.

"குண்டூசி" வாசகர்கள் எனது வேஷங்களை ரஸித்துப் பாராட்டுகிறார்கள்: இதோ நான் எனது நன்றியை மேக்கப், நாராயணசாமிக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போட்டோக்கள்:
வி. கோபாலகிருஷ்ணன்.

பிளாக்குகள்:
கிளான் அண்டு பெர்ல், சென்னை.

"குண்டூசி" தீபாவளி விசேஷ இதழ்

தீபாவளி அன்று எங்கும் கிடைக்கும்.

விலை ரூ. 1-25

தபாலில் தனிப் பிரதி வேண்டுவோர் பதிவுத் தபால் கட்டணத்துக்கும் சேர்த்து 1-75 அனுப்புதல் வேண்டும்.

பிரபல நட்சத்திரங்களின் கட்டுரைகள். விசேஷ புகைப் படங்கள், இருவர்ண, மூவர்ணப் படங்கள் பல புதிய அம்சங்களுடன் வழக்கமான பகுதிகளும் இருக்கும்.

200 பக்கங்கள் கொண்டது.

ஏஜண்டுகள் தேவையான பிரதிக்கு 20% கமிஷன் கழித்து மலர் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் அக்டோபர் மாதம் 20-க்குள் முன்னதாக பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

மானேஜர்.

கடவுளை தூஷணையாகப் பேசும் குறிப்பிட்ட ஒரு வசனத்தைப் பேச மறுத்தமையினால் மேகலா பிக்சர்ஸ் தயாரித்துவரும் "குறவஞ்சி" என்ற படத்திலிருந்து ராஜசுலோசனா நீக்கப்பட்டார் என்ற செய்திகள் கொஞ்ச நாட்களுக்கு முன் அடிபட்டன. நான் சமீபத்தில் அந்த நடிகையைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்த போது அது பற்றிக் கேட்டேன்.

"பேச மறுத்தது என்னமோ உண்மை. காரணம், அது கடவுளை தூஷிக்கும் வசனம் என்பதனால் அல்ல; ஆனால், சரியான சந்தர்ப்பத்தில், கட்டத்தில் அந்த வசனம் இல்லை என்பதுதான் என் மறுப்புக்கு உண்மைக் காரணம். ஒரு நடிகை என்ற முறையில், அசந்தர்ப்பமான கட்டத்தில் அவசியமற்ற ஒரு வசனத்தைப் பேசி, ரஸிகர்களின் ஏச்சுக்கு ஆளாகாமல், நான் என் பெயரையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமல்லவா?" என்று தெரிவித்தார் நடிகை. அவர் கூறிய சமாதானம் எனக்கு நியாயமானதாகவே பட்டது.

* * *

இடையிலே சிறிது காலம் இடுகாடு அமைதியாகி விட்டிருந்த ஜெமினி ஸ்டுடியோ அங்கு கலர் ரஸாயனசாலை ஆரம்பமான தினத்தன்று கோலாகலமாகக் காட்சி அளித்தது. பட உலகம் மறந்து போய்விட்ட பிரமுகர்கள் பலர் உட்பட பட உலகமே அன்று அங்கு பிரசன்னமாயிருந்தது எனலாம்.

"இதென்ன இது? ஆடி மாதத்தில் போய் ஆரம்பிக்கிறாரே?" என்று பலர் அன்று அதிசயித்தனர்.

"வாசன் துணிச்சல்காரப் பேர்வழி என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம்" என்று யாரோ ஒருவர் பதில் கொடுத்தார்.

"ஆமையையும் அமீனாவையும் விடக் கொடிய சிலர் அவரிடம் வேலை பார்த்தனர்; அவர்கள் இருந்தே வாசனை ஒன்றும் செய்ய முடியாத போது, இந்த ஆடிமாசம் எம்மாத்திரம்?" என்று அங்கலாய்த்தார், வாசனின் மாஜி ஊழியர் ஒருவர்.

மேற்கண்ட இருவர் கூறியதையும் அன்று அங்கு கூடியிருந்த பலரும் ஆமோதித்தனர்.

* * *

ஜெமினியின் கலர் ரஸாயன சாலையை ஆரம்பித்து வைத்த கோபால்ரெட்டி, அன்று பல தமாஷ்களை உதிர்த்தார். ஜெமினியின் சின்னமான குழல் ஊதும் இரட்டையர்கள் ஆணா பெண்ணா என்ற சந்தேகம் அவருக்குஏற்பட்டு விட்டது ஒரு தமாஷ். அவர் அந்த இரட்டையர்களை "சமாதானம்—சந்துஷ்டி இவைகளின் சின்னம்" என்று சொன்னதைவிட, "ஸ்ரீவாஸன் சொல்வது போல ஒன்று கல்வி, மற்றொன்று பொழுது போக்கு" என்று சொன்னபோது, தாமே உணர்ந்து கொள்ளாத உண்மை பொதிந்த அந்தப் புது வியாக்கியானத்தைக் கேட்டு வாஸனே தம்மை மறந்து கைதட்டி விட்டார்.

* * *

"நாடோடி மன்னன்" பத்திரிகைக்காரர்களுக்கான 'விசேடக் காட்சி' விஜயாவில நடந்தபோது பல ரஸமான விஷயங்கள் நடந்

நவீன வேலைப்பாடமைந்த
வைரம், தங்க
நகைகளுக்கு

நம்பிக்கையான இடம்
கௌரி
ஜுவல்லரி மார்ட்
தங்களுக்குத் தேவையானபடி
பல மாதிரி நகைகள்
தயார் செய்து தரப்படும்
72/75, பைக்ராப்ட்ஸ் ரோடு
திருவல்லிக்கேணி, சென்னை-5.

தன. அக் காட்சிக்கு பிரத்தியேக மாக நடிகர் நம்பியாரும்—திருமதி நம்பியாரும் நடிகை சரோஜாதேவி யும் வந்திருந்தனர். படம் ஓடிக் கொண்டிருந்தது. நம்பியாருக்கு அருகே இருந்த ஒரு பத்திரிகாசிரி யர், "கலர் காட்சிகள் எப்பொழுது வரும்?" என்று கேட்டார்.

"ரோஜான்னு கலர் இல்லாமல் இருக்குமா? (சரோஜாவுக்காகத் தானே கலரே. அவர் வருமபோது கலர் தானே வரும்" என்று நம்பி யார் பதில் கொடுத்ததைக் கேட்டு, அவர் அருகே அமர்ந்திருந்த நடிகை பி. சரோஜாதேவி உட்பட அனைவருமே நகைத்தோம்.

* * *

"கன்னித் தீவிலே நடைபெறும் இரவுக் காட்சி. (பி. சரோஜாதேவி) இளவரசி நாடோடியின் (எம். ஜி. ராமச்சந்திரன்) அருகேதான் தூங்கு வேன் என அடம் பிடிக்கிருள். நாடோடிக்கு அது இஷ்டமில்லை. எனினும் சந்தர்ப்ப வசத்தால்— ஒரு பாமபு செய்த உதவியினுல்— இளவரசியின் கட்சியே ஜெயிக் கிறது. உடனே படத்தில் நாடோ டியும்—இளவரசியும் காதல் புரிவது போன்ற 'கனவுக் காட்சி' காட்டப் படுகிறது. அது முடிந்ததும் தூங் கிய இருவரும் விழித்துக்கொள்ளும் காட்சி வருகிறது.

திரையில் இந்தப் பகுதி முடிந்த தும், படம் பார்த்துக் கொண்டிருந்த பி. சரோஜாதேவி, "சீ, இவ்வளவு கலாட்டாவும் பண்ணிவிட்டு கடைசி யிலே தூங்கிப் போயிட்டேன்" என்று கன்னடத் – தமிழில் சலித்துக் கொண்டார்.

* * *

பரணி ஸ்டுடியோவில் நடை பெற்ற அரசு பிக்சர்ஸின் "தேடி வந்த செல்வம்" பத்திரிகைக் காட்சி யின் அழைப்பிதழைப் பார்த்து மூனை

யைக் குழப்பிக் கொண்டவர் இன்னும் குழப்பம் நீங்காது இருப்பவர் ... பலர் உண்டு. காரணம், படத்தின் பெயர் அழைப்பு இதழில் "தேடி உந்த செலவும்" என்று ஆங்கிலத்தில் அச்சாகியிருந்ததுதான். பிறகு பார்த்ததில் ஆங்கிலத்தில் பெயர் போடப்பட்டுள்ள பெரும்பாலானவற்றில் அப்படித்தான் இருந்தது தெரிந்தது. நிச்சயமாக அது அச்சுப் பிழையாக இருக்க முடியாது என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. டைரெக்டர் ப. நீலகண்டனே ஒரு காலத்தில் பத்திரிகாசிரியராயிருந்து பிழைகள் நிறையத் திருத்திப் பழக்கப் பட்டவர் தானே!

படத்தின் தயாரிப்பாளர்-டைரெக்டரிடமே அதைக் கேட்டுத் தெளிவதென்ற எண்ணத்துடன் அவரை நாடிப் போனேன். நான் சென்ற சமயம், "தேடி வந்த செல்வம்" என்று சரியான உச்சரிப்பு வரும்படி ஆங்கில வார்த்தைகளை அமைத்து எழுதிய ஒரு விளம்பர ஒப்பந்தத்தைக் கையெழுத்துப் போட அவரிடம் கொண்டு வந்து கொடுத்தார், பிரபல விளம்பர ஆலோசக் கம்பனி ஆசாமி ஒருவர். அதைப் பார்த்த ப. நீலகண்டனின் முகம் சுருங்கியது. "படத்தின் பெயரை எழுதும் முன்னர் நீங்கள் என்னைக் கேட்டுவிட்டு எழுதியிருக்க வேண்டும்" என்று அந்த ஆளிடம் சொல்லிவிட்டு, "தேடி வந்த செல்வ"த்தை "தேடி வுந்த செல்வு"மாக அடிதது எழுதிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து அனுப்பினர்.

"நீங்கள் நியூமராலஜி (எண்குறி சாஸ்திரம்) யில் நம்பிக்கை உள்ளவர்" என்று நான் சொன்னேன்.

"உண்மைதான், நீங்கள் அதை எப்படித் தெரிந்து கொண்டீர்கள்" என்று அவர் ஆச்சரியப் பட்டுக் கேட்டார்.

அவருடைய "தேடி வுந்த செல்வும்" என்ற உச்சரிப்பு எனக்கு

என். வையாபுரி — ராஜேஸ்வரி

இவர்கள் திருமணம் சமீபத்தில் சிறப்பாக நடந்தது.

அந்த உண்மையை வெளிப்படுத்தியதைக் கூறினேன்.

ஆங்கில எழுத்துக்களில் ஏக்கு (A) ஒன்று (B) பிக்கு இரண்டு, ஸிக்கு (C) மூன்று என எண்கள் கொடுத்து, அவைகளின் கூட்டுத் தொகை அவருடைய அதிருஷ்ட எண்ணை வரவேண்டும் என்ற எண்ணமே தமிழில் "தேடி வந்த செல்வ"மானது ஆங்கிலத்தில் "தேடி வுந்த செல்வுமாக" முடிந்துவிட்டது.

* * *

"தேடி வந்த செல்வத்"தைப் பற்றிச் சொன்னதும் சமீபத்தில் நடந்த ஒரு ரஸமான சம்பவமும் நினைப்புக்கு வருகிறது.

"தேடி வந்த செல்வம்" படம் வெளியான பிறகு ஒரு நாள். கல்கத்தாவுக்குப் போய் விட்டு அன்று தான் ப. நீலகண்டன் திரும்பியிருந்தார். நான் அவரை அவரது வீட்டில் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தேன்.

வீட்டு வாசலில் ஒரு சிறு களே பாரப. கூர்க்கா யாரையோ உள்ளே விட மறுத்தான். டைரெக்டர் அவனைக் கூப்பிட்டு அங்கே "என்ன விஷயம்?" என்று கேட்டார்.

'ஒரு கிழவர் வாசலில் வந்திருக்கிறார். எவ்வளவோ சொல்லியும்கூட அந்தக் கிழவர் டைரெக்டரைப் பார்க்க வேண்டுமென ஒரே பிடிவாதமாக இருந்தார்.' அதுதான் கூர்க்கா தெரிவித்த செய்தி. டைரெக்டர் கிழவரை உள்ளே அனுமதிக்கும்படி சொன்னார்.

உள்ளே வந்த கிழவரின் தோற்றம் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. கண்ணீர் ஆறாகப் பெருக, துக்கம் தொண்டையை அடைக்க "சார், உங்க படம் என் கண்ணைத் திறந்து விட்டது" என்று சொன்னார். டைரெக்டர் "என்ன விஷயம்?" எனக் கேட்டார்.

அந்தக் கிழவர் மதுரை ஜில்லாவில் ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர். தாம் வளர்த்து வந்த ஒரு பையனைக் கோபத்தில் அடித்து விரட்டி விட்டார். "தேடி வந்த செல்வம்" படத்தைப் பார்த்திருக்கிறார். வளர்த்த மகனை அலட்சியப் படுத்திய கொடுமை அப்போதுதான் அவர் மனத்தைச் சுட்டிருக்கிறது. இது கிழவர் கூறியதன் சாராம்சம்.

தம் கதையைக் கூறி முடித்த அந்தக் கிழவர்; "சார், உங்கள் கதையில் அமிர்தலிங்கத்திற்கு அவனுடைய வளர்ப்பு மகன் சிதம்பரம் திரும்பக் கிடைத்துவிட்டான். இந்தப் பாபிக்குக் கிடைப்பானா?" என்று கூறி விக்கி விக்கி அழுதுவிட்டார்.

ப. நீலகண்டன் அன்று அந்தக் கிழவரை சமாதானப்படுத்தி அனுப்புவதற்குள் போதும் போது மென்றாகிவிட்டது.

"கண்டிப்பாகக் கிடைப்பான்" என்று நம்பிக்கை வார்த்தை சொன்னதுடன் நில்லாமல், அந்தக் கிழவரின் வளர்ப்புப் பையனின் அங்க அடையாளங்களையும் கேட்டு குறித்து வைத்துக் கொண்டார்.

கிழவர் வந்து போன பிறகு டைரெக்டரின் முகத்தில் "நாம் படம் நல்லது செய்து விட்டது" என்ற பெருமை பளிச்சிட்டதை கண்டேன்.

மதுரையில் ஜவுளி மாளிகை

ஸ்ரீ ராதாகிருஷ்ணா ஸ்டோர்ஸ்

உயர்ந்த ரக வேலைப்பாடுகள் அமைந்த பட்டு சேலைகள், ஜார்ஜெட், கிரேப், பனாரஸ் பட்டுதினுசுகள், வேஷ்டிகள், துப்பட்டாக்கள் மற்றும் எல்லா விதமான மில் ஜவுளி தினுசுகளும் எம்மிடம் ஏராளமாய் எப்பொழுதும் கிடைக்கும்.

ஒரே விலை விற்பனை

காட்சிசாலை:

6/8, மேல கோபுர வீதி, மதுரை.

கலைக் கூடங்களில் கடந்த மாதம்

கிருஷ்ணா பிக்சர்ஸின் "மாங்கல்ய பாக்கிய"த்திற்காக கற்கதவின் முன்னால் பாடிக் கதறிய கௌரி (ராகினி)க்கு அம்மன் அருள்கிட்டுகிறது.

அச்சாபீஸ் முதலாளி வரதராஜ முதலியாருக்கு ரொம்ப நாளாக பார்வதியின்மீது ஒரு கண் உண்டு. பார்வதி, அவருடைய அச்சாபீஸ் தலைமை குமாஸ்தா சுந்தரத்தின் அருமை மனைவி. போதாத காலம் குமாஸ்தா சுந்தரம், விபத்துக்கு உள்ளாகி ஆஸ்பத்திரியில் கிடக்கிறான். அவனுக்கு டிபன் ஸெட்டில் சாப்பாடு எடுத்துக் கொண்டு போகிறாள் மனைவி பார்வதி. வழியில் அவளை மடக்கி, அவளிடம் தனக்குள்ள காதலைத் தெரிவிக்கிறான் அந்தக் காதகன்.

"கெட்டுப்போகிற காலம் வந்துடுச்சா உனக்கு" என்று தன் கையிலுள்ள் டிபன் காரியரை ஓங்குகிறாள் பார்வதி.

இந்தக் காட்சியும், இதனுடன் சம்பந்தப்பட்ட மற்றும் சில காட்சிகளும் வாஹினி ஸ்டூடியோவில் நல்ல முறையில் படமாயின.

மேற்படி காட்சிகளில் வில்லன் அச்சாபீஸ் முதலாளி வரதராஜ முதலியாராக அசோகன், ஹெட் கிளார்க் சுந்தரமாக நரசிம்ம பாரதி, பார்வதியாக ஸ்ரீ ரஞ்சனி ஆகியோர் உணர்ச்சியுடன் நடித்தார்கள்.

அசோகா பிக்சர்ஸ் ஆரம்ப பூஜை போட்ட கையோடு படத் தயாரிப்பிலும் விறு விறுப்பாக இறங்கியுள்ளனர். "பொன் விலங்கு" எனப் பெயரிட்டுள்ள அவர்களின் இப் படத்தின் கதை-வசனத்தை முகவை ராஜமாணிக்கம் எழுதியிருக்கிறார்.

எம். என். ராஜம்—ஜெமினி கணேசன் பிரதமபாகத்தில் நடிக்கும் இப் படத்தை ஸி. பத்மநாபனின் உதவியுடன், விட்டலாச்சாரி டைரெக்ட் செய்து வருகிறார். படத்தின் சங்கீத டைரெக்ஷனை வேணுவும், ஒளிப்பதிவை விஜயமும் கவனித்து வருகின்றனர்.



தயாரிப்பாளர், கதை-வசன கர்த்தா முகவை ராஜமாணிக்கம், டைரெக்டர் விட்டலாச்சாரி, உதவி டைரெக்டர் சி. பத்மநாபன் ஆகியோர் மத்தியில் அசோகன் ஸ்ரீரஞ்சனி—அசோகா பிக்சர்ஸ் “பொன் விலங்கு” படப்பிடிப்பில்.

‘விஷச் சிலைக்கு’ அடியிலே அளவிட முடியாத பொற் காசுகள் புதைக்கப்பட்டிருக்கின்றன. அதை அடைய வேண்டுமானால் ஒரு அழகியைக் கொண்டு சந்திர கிரஹணத்தன்று விஷச் சிலைக்கு நூறு குடம் தண்ணீர் கொட்டச் செய்ய வேண்டும். இது தெரிந்துவிடுகிறது பணப் பேய் பிடித்த ஒரு மந்திரவாதிக்கு. சுமதியைக் கடத்திக் கொண்டு போய்விடுகிறான் அவன்.

கதாநாயகன் சந்திரனுக்கு, காணாமற் போன தன் தங்கை சுமதி மந்திரவாதியின் குகையில் அடைபட்டுக் கிடக்கும் விஷயம், மந்திரவாதியின் சிஷ்யன் மூலமாகவே தெரிகிறது. சந்திர கிரகணத்து அன்று சந்திரனுக்கு அபாயம் இருக்கிறது என்பதை அவன் காதலி கௌரி எச்சரித்தும்கூட அவளுக்குத் தெரியாது தன் தங்கையை மீட்டு வரக் கிளம்பிவிடுகிறான். குகைக்குள் நுழைந்த கதாநாயகன், அவன் நண்பன் வேணு, மந்திரவாதியின் சிஷ்யனின் காதலி, அனைவரையும் தன் மந்திர சக்தியால் மந்திரவாதி அங்குள்ள தூண்களில் கட்டிப் போட்டுவிடுகிறான்.

தன் காதலனைத் தேடி ஓடி வருகிறாள் கதாநாயகி கௌரி. யானை, பாம்பு, நெருப்பு, கற்கதவு இவைகள் வழி விட்டாலல்லவா அவள் உள்ளே போகமுடியும்? கௌரி ஒவ்வொரு வாயிலும் கண்ணீர்விட்டுக் கதறி தேவியை வேண்டுகிறாள். வழிகள் திறந்து கொள்ள குகைக்குள் போய்விடுகிறாள்.

கிருஷ்ணா பிக்சர்ஸின் துரிதத் தயாரிப்பான “மாங்கல்ய பாக்கியத்”

தில் வரும் உச்சநிலைக் கட்டம் இது. அந்த குகையைப் பார்த்தபோது உண்மையிலேயே பயங்கரமாக இருந்தது. ஒரு பக்கத்தில் கபால ஓடுகள் குவிந்து கிடந்தன. வாயைத் திறந்து கண்களை வெருட்டி விழித்தன பல விசித்திர பயங்கர உருவங்கள். இவைகளுக் கெல்லாம் நாயகனை அந்த மந்திர வாதி (ஓ. ஏ. கே. தேவர்) யைப் பார்த்தபோது குலையே நடுங்கியது.

மேற்படி காட்சிகள் அனைத்தும் விஜயா ஸ்டுடியோவில் டி. ஆர். ரகுநாத் டைரெக்ஷனில் படமாயின. கதாநாயகன் சந்திரனுக பாலாஜியும் கதாநாயகி கௌரியாக ராகினியும், மந்திரவாதியின் சிஷ்யனுக தங்க வேலுவும், அவன் உள்ளம் கவர்ந்த மங்கையாக எம். சரோஜாவும், சுமதியாக குசலகுமாரியும், நண்பன் வேணுவாக பக்கிரியும் நடித்தார்கள். இப்படத்தின் ஒளிப்பதிவின் பெரும் பகுதியை சம்பத்தும், விசேஷப் பகுதிகள் ஒன்றிரண்டை ரஹ்மானும் தயாரித்துள்ளனர். பாலய்யா போலீஸ் இன்ஸ்பெக்டராக நடித் துள்ள இந்தப் படத்தில் பத்மினி யின் நடனம் ஒன்றும் இடம் பெறப் போகிறது.

* * *

பரிசுத்தமானவர்களும் கூட சூழ் நிலையினுலும், சந்தர்ப்பங்களினுலும் தீயவர்கள் ஆக்கப் படுகிருர்கள். இதற்கு உதாரணமாகச் சொல்ல லாம் காசியை. அவன் தங்க மானவன். தீயவர்களுடன் சேர்ந்து குடிகாரனுகிருன்.

நல்ல குடிபோதையில் "சாதி இரண்டொழிய வேறில்லை" என்று பாடியபடி வீடு திரும்புகிருன். அவன் கையில் மது நிரம்பிய ஜாடி ஒன்று இருக்கிறது. அவன் ஆபத்து எதுவுமின்றி வீடு திரும்பவேண்டு மென்ற கவலையோடு காத்திருந்த அவன் மனைவி மாலா, அவன் கையி லிருந்து அந்த மது ஜாடியைப் பிடுங்கிக் கொள்கிருள். அதைக் கொடுக்கும்படி சத்தம் போடுகிருன். அவளோ, "என் உயிரைத் தருகிறேன். வேண்டுமானுல் இந்தப் பாத்திரம் நிறைய என் ரத்தம் தருகிறேன். ஆனுல், மதுவைத் தரமாட்டேன்" என்று,

சாரதா பிலிம்ஸின் பெயரிடப்படாத தமிழ்த் தயாரிப்பின் படப் பிடிப்பு சமயம், உதவி டைரெக்டர் நாகர்கோயில் கே. பத்மநாபன், அஞ்சலிதேவி, ஏ. நாகேஸ்வர ராவ், தங்கவேலு, முத்துலட்சுமி ஆகியோர்.

கண்ணீர் வடிக்கிருள். குடிகாரனுக்கு மனேவியின் தூய அன்பு தெரியவா போகிறது? அவளே அடித்துக் கீழே தள்ளிவிட்டு மது ஜாடியுடன் வீட்டைவிட்டு வெளியேறுகிருன்.

மயக்கமுற்றுக் கீழே விழுந்த மாலாவைத் தூக்கி வந்து கட்டிலில் போடுகின்றனர் அவள் வேலேக்காரி ரத்தினமும், காசியின் நண்பன் ஹரியும்.

லட்சுமியும், நண்பனுக தங்கவேலுவும் அன்று நடித்தார்கள். வசன கர்த்தா நாகர்கோயில் பத்மநாபனின் உதவியுடன் பி. புல்லய்யா டைரெக்ட் செய்துவரும் படம் இது. தமிழ்—தெலுங்கு இரு பாஷைகளிலும் தயாராகி வரும் இப்படத்தின் சங்கீத டைரெக்‌ஷனே பெண்டியாலா ஏற்றிருக்கிருர்.

* * *



டைரெக்டர் ஸ்ரீதர் குறிப்புப் புத்தகத்தில் கவனம் செலுத்தும் சமயம், விஜயகுமாரி சரோஜாதேவியின் கூந்தலே சரி செய்கிருர். வீனஸ் பிக்சர்ஸின் "கல்யாணப் பரிசு" படப்பிடிப்பு சமயம் நிகழ்ந்தது.

சாரதா புரொடக்‌ஷன்ஸாரின் பெயரிடப்படாத அவர்கள் தயாரிப்பில் இடம் பெறப் போகும் மிகவும் உருக்கமான காட்சி இது குடிகாரனுக நடித்த ஏ. நாகேஸ்வர ராவ் 'தேவதாஸை' ஒரு பிடி மிஞ்சுவது போல் நடித்தார். உத்தம மனேவி மாலாவாக அஞ்சலியும், உண்மை வேலேக்காரியாக டி. பி. முத்து

"சுருதியும் ராகமும் உறவாடல் போல"
"இந்த நாளே என்னும் போது இதயம்
துள்ளுது ஆனந்தத்தாலே"

இந்த காதல் கீதம் விஜயா ஸ்டுடியோவின் ஒரு கொட்டகையிலிருந்து புறப்பட்டது. உள்ளே எட்டிப் பார்த்தேன் கொட்டகைக்குள் மலேயையும், அருவியையும், சிறு

ஓடையையும் தத்ரூபமாக சிருஷ்டித்திருந்தார் கலை டைரெக்டர்.

தனது பேண்டை முழுங்கால் வரை மடித்து விட்டுக் கொண்டு ஓடைத் தண்ணீரில் நின்றபடி, அருவிக் கரையில் நடக்கும் அந்தக் காதல் காட்சியை படமாக்கிக் கொண்டிருந்தார் ஒளிப்பதிவாளர் ராமமூர்த்தி.

அசோகனும் எம். ஆர். ராதாவும் பேசுவதை வசனகர்த்தா முகவை ராஜமாணிக்கம், டைரெக்டர் கே. வி. ஸ்ரீனிவாஸன், கல்யாணி பிக்சர்ஸ் பாகஸ்தர் எஸ். ஆர். நடராஜன் பலரும் கவனிக்கின்றனர்.

தனிமையை நாடிவந்த புது மணத் தம்பதிகளாகத் தோன்றியது. அந்தக் காதலர்களைப் பார்த்தபோது. படத்தில் அப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பம்தான் அது என்று படத்தின் டைரெக்டர் ராமமூர்த்தி விளக்கினர்.

மனேகர் கோஷ்டியினுல் நாடகமாக நடிக்கப்பட்டு வரும் "உலகம் சிரிக்கிறது" நாடகத்தை படமாக்கி வருகின்றனர் பிரபு பில்ம்ஸார். இதில் வரும் காதல்காட்சிதான் இது. படத்தின் பெயர் "உலகம் சிரிக்கிற" தாக இருக்காது என்பதை தயாரிப்பாளர் ஆர்.டி.கோவிந்தன் கூறினர்.

மருதகாசி எழுதியுள்ள மேற்படி காதல்கீதத்திற்கு வாயசைத்து, மேற்படி காதல் காட்சியில் பிரேம்நஸீரும் சௌகார் ஜானகியும் காதலர்களாக அன்று நடித்தனர்.

இவர்கள் தவிர எம். ஆர். ராதா, முத்துராமன், காகா ராதாகிருஷ்ணன், லட்சுமி காந்தம், பி. எஸ். வெங்கடாசலம் ஆகியோரும் முக்கிய பாத்திரங்களில் இந்தப் படத்தில் நடித்து வருகின்றனர்.

சௌகார் ஜானகி சம்பந்தப்பட்ட காதல் காட்சியைப் படமாக்குவதில் முனைந்துள்ளனர் டைரெக்டர் ராமமூர்த்தியும், ஒளிப்பதிவாளர் ராமமூர்த்தியும்.

தலை குனிகிறோம்

சினிமாத் தொழிலில் ஆபாசம் எந்த அளவுக்குப் போக முடியும் என்பதற்கு சமீபத்தில் வெளியான "சாரங்கதரா" விளம்பர போஸ்டர்களில் ஒன்று ஒரு உதாரணமாகும். மேற்படி படத்திற்காக பல போஸ்டர்கள் தயாரித்திருக்கிறார்கள். அவைகளில் ஒன்றில் பானுமதியின் உருவத்தைத் தீட்டியிருக்கிறார்களே, அந்த கோரத்தை நினைத்தாலும் மனம் கூசுகிறது. அந்த மாதிரி போஸ்டர் எழுதச் சொன்ன படாதிபதி, எழுதிய சைத்ரீகர் இவர்கள், உலகத்தில் பெண் வர்க்கம் என்று ஒன்று இருப்பதையே மறந்துவிட்டார்களோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. அவமானம், பெருத்த அவமானம்!

பாகீரதி ஜயாராமன்,
அலமேலு அப்பாத்துரை,
ஸ்ரீமதி கணேசன் —தென்னூர்.

அழியட்டும்!

வியாபாரத்திற்கு விளம்பரம் அவசியம்தான். ஆனால், அந்த விளம்பரம் விபசாரப் பலகையாக மாறும்போது நம் மனமும் மாறத்தானே செய்யும். "சாரங்கதரா" படத்திற்கான விளம்பரம் ஒன்றை சமீபத்தில் பார்க்கும் துர்ப்பாக்கியம் எனக்கு ஏற்பட்டது. அதைப் பார்த்து நான் வெட்கித் தலை குனிந்தேன். அப்படியானால் அதைப் பார்க்க நேரும் சகோதரிகளின் மனம் என்ன பாடுபடும்? வேண்டாம் இத்தகைய விளம்பரம்.

ஜி. கார்த்திகேயன்,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

எப்படித் துணிந்தார்?

பல வருஷங்களுக்கு முன்பு நான் கிருஷ்ணலீலா நாடகம் பார்த்தேன். அந்த நாடகத்தில் பூதகி பால கிருஷ்ணனுக்கு பால்கொடுக்கும் கட்டம்தான் என் நினைவுக்கு வந்தது, "சாரங்கதரா" வின் ஒரு விளம்பர போஸ்டரைப் பார்த்தபோது. படாதிபதிகள்தான் பணத்திற்கென எதுவும் செய்யத் துணிபவர்கள். என்றாலும், பானுமதி போன்ற ஒரு கௌரவமான நடிகை இம்மாதிரி தம்மை அலங்கோலப் படுத்த எப்படி மனம் துணிந்தார் என்பதுதான் தெரியவில்லை.

ஸ்ரீமதி ராஜாராம்,
திருக்காட்டுப்பள்ளி.

வருந்துகிறேன்.

மனித குலத்தில் உதித்த ஒரு அழகி என்று பானுமதியை இதுவரை எண்ணியிருப்போர் "அவள் புராணகால அரக்கியின் தோற்றம் பெற்றவர்" என்று எண்ணும்படி செய்துவிட்டார்கள் "சாரங்கதரா" படத்தயாரிப்பாளர்கள். அவர்களது அந்த விளம்பர போஸ்டரைப் பார்த்தபின் வேறு எப்படித்தான் எண்ணுவது? பண்புமிக்க, நாகரீகம் தெரிந்த, கல்வி அறிவு பெற்ற நடிகை பானுமதிக்கு இந்த அவமானம் நேரிட்டிருப்பதற்கு மிக மிக வருந்துகிறேன்.

ஆர். சந்திராபாய்.
சேலம்.

வரவேற்கத்தக்க மாறுதல்

"ஒழித்துக் கட்டி விடுகிறேன் பார்" என்று சினிமா மீது பாய்ந்து வந்த குழந்தை அம்மாள் எம். எல். ஏ. "ஆபாசப் படங்களை ஒழித்துக் கட்டுகிறேன்" என்று இப்போது கூறி வருகிறார். இந்த மாறுதலை வரவேற்கிறேன். அது மட்டுமில்லை

ஏ. எல். எஸ். புரொடக்
ஷன்ஸ் "திருடாதே"
படத்தில் ரஸிகர்களின்
உள்ளத்தைத் திருடும்
காட்சிகள் பல உண்டு.



சுதந்திர பாரதத்தின் பெருமை வாய்ந்த ஸப்த நதிகள் அல்ல—கேசவர்த்தினியால் கூந்தலை விருத்தி செய்து வரும் இந்தியப் பெண்மணிகளே, இவர்கள்.

இளமையும், அழகும் கூந்தலுக்குத் தந்து கூந்தலை மனோஹரமாக்குவது கேசவர்த்தினி ஒன்றே! முக அழகை கூந்தலினால் அழகுபடுத்துங்கள். உங்கள் கூந்தலைக் கேசவர்த்தினி கொண்டு அழகுபடுத்திக் கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாத்து, விருத்தி செய்து அழகுபடுத்துவது!

.... தயாரிப்பவர்கள் ....

கேசவர்த்தினி பிராடக்ட்ஸ்

கிராஸ்கட் ரோட்,

கோயமுத்தூர்.

GP.

அவரது அந்த முயற்சிக்கு ரஸிகர்களின் ஆதரவு என்றும் உண்டு என உறுதிமொழியும் அளிக்கிறேன்.

வி. பத்மநாபன்,
செஞ்சி.

வீண் கலகம்

ஜெமினி கணேசன்—சிவாஜி கணேசன் ரஸிகர்களிடையே சமீபத்தில் கைகலப்பு நடந்ததாகப் பத்திரிகையில் செய்தி படித்தேன். இது வீண் கலகம். அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட பாத்திரத்தில் நடிப்பதில் சிறந்தவர்கள். அதை விடுத்து அவர்களைப் பிரித்து அலசிப் பேசி வீண் கலகம் செய்வது புத்திசாலித்தனம் அல்ல. தவிரவும் அந்த இரு நடிகர்களும் சிறந்ததைப் பாராட்டும் பண்புடையவர்கள். அவர்கள் பெயரில் ரஸிகர்கள் நடத்தும் இந்தச் சண்டையினால் அவர்கள் மனம்தான் புண்படும்.

டி. ஸி. லட்சுமணன்,
சென்னை-1.

ரஸிகன் விரும்புவது

வட இந்தியப் பிரபல நடிகர் ராஜ்கபூருடன் ஒரு படத்தில் வைஜயந்திமாலாவும், மற்றொரு படத்தில் பத்மினியும் நடித்து வருவதாகத் தெரிகிறது. இது ரஸிகர்களுக்கு மகிழ்ச்சிகரமான ஒரு விஷயமாகும். சிவாஜி கணேசன் என்றால் பத்மினி, ஜெமினி கணேசன் என்றால் சாவித்திரி, எஸ். எஸ். ராஜேந்திரனோ, பிரேம் நஸிரோ என்றால் எம். என். ராஜம் அல்லது ராஜசுலோசனா என்று ஆகிவிட்டது இங்கே. ரஸிகர்களுக்கு இந்த ஜோடி பார்த்துப் பார்த்துப் புளித்துவிட்டது. ரஸிகர்கள் விரும்புவது புது முகங்களை மட்டுமல்ல; புது ஜோடிகளையும்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஜி. பி. சங்கரன்,
கவரப்பட்டு.

தங்கப் பதுமை

நீண்ட நாட்களுக்குப் பின் ஜூபிடரிலிருந்து வெளிவரப் போகிறது அவர்களது "தங்கப் பதுமை". இப் படத்தில் கதா நாயகனை சிவாஜி கணேசனும், அவன் அன்புக்குப் பாத்திரமான வளாக பத்மினியும், காதலித்து அதில் தோல்வி கண்டு வில்லி-

---

சௌகார் ஜானகி வழிமேல் விழி வைத்துப் பார்ப்பது யாரை என்பது விக்ரம் புரொடக்ஷன்ஸ் "ராஜா மலைய சிம்மனை"ப் பார்த்தால் தெரியும்.

யாக மாறும் கதாபாத்திரமாக எம். என். ராஜமும் நடிக்கின்றனர். சமீபத்தில் இப்படத்திற்கென பல வெளிப்புறக் காட்சிகளை குற்றாலம், பாபநாசம் ஆகிய இடங்களுக்குச் சென்று தயாரித்திருக்கிறார்கள். ஏ. எஸ். ஏ. சாமி டைரெக்ஷனில் பெரும் பகுதி தயாராகியுள்ள இப் படத்தில் மற்றும் டி. ஆர் ராஜகுமாரி, என். எஸ். கே. மதுரம், நம்பியார், ராஜ கோபாலன், டி பி முத்துலட்சுமி, புளிமூட்டை ஆகியோரும் முக்கிய கதாபாத்திரங்களாக நடித்து வருகின்றனர். இப்படத்தின் வசனங்களை அரு. ராமநாதன் எழுதியுள்ளார்.

மாமியார் மெச்சின மருமகள்

ஏவி. எம். ஸ்டுடியோவில் பட உலக ரெட்டையர்களான கிருஷ்ணன்–பஞ்சு தயாரித்துவரும் படத்திற்கு "மாமியார் மெச்சின மருமகள்" என்று பெயர் கொடுத்துள்ளனர். இப் படத்தில் மாமியாராக ஜி. வரலட்சுமியும், மருமகளாக எம். என். ராஜமும் நடித்து வருகின்றனர். படத்தின் கதாநாயகனை எஸ். எஸ். ராஜேந்திரன் நடிக்கிறார். இவர்கள் தவிர தாம்பரம் லலிதா, அப்பா துரை சாமி, பக்கிரி, கே. என். கமலம், சுசீலா, கொட்டாப்புளி ஜயராமன், பங்கஜம், நம்பிராஜன், டி. வி. நாராயணசாமி ஆகியோரும் நடித்து வருகின்றனர். படத்தின் வசனத்தை கலைப்பித்தனும், பாட்டுக்களை உடுமலையாரும் கவி ராஜகோபாலும் எழுதியுள்ளனர். டைரெக்ஷனை கிருஷ்ணன்–பஞ்சுவும், சங்கீத டைரெக்ஷனை சுதர்சனமும் கவனித்து வருகின்றனர். படத்தின் ஒளி, ஒலிப்பதிவுகளை முறையே எஸ். மாருதிராவும், ராமனாதனும் செய்து வருகின்றனர்.

மாதா பிதா குரு தெய்வம்

ஹாஸ்ய நடிகர்களான ஏழுமலையும்—பி. டி. சம்பந்தமும் கூட்டாக ஆரம்பித்துள்ள ஏழுமலையான் பிக்சர்ஸின் முதல் தயாரிப்பாகும் "மாதா பிதா குரு தெய்வம்". இந்தப் படத்தில் வக்கீலாக சௌகார் ஜானகியும், டாக்டராக எம். என். ராஜமும் நடிக்கின்றனர். முறையே அவர்களது காதலர்களாக எஸ். எஸ். ராஜேந்திரனும், பிரேம் நஸீரும் நடித்துவருகின்றனர். இவர்களுடன் ஜானகியின் தந்தையாக பாலய்யாவும், ராஜத்தின் தந்தையாக வி. கே. ராமசாமியும், மற்றும் ஏழுமலை, சம்பந்தம், கண்ணம்பா ஆகியோரும் நடிக்கின்றனர். இந்தப் படத்தின் தயாரிப்பிலே பட உலக நால்வரான (வசனம்) ஏ. பி. நாகராஜன், (பாட்டுகள்) மருதகாசி, (சங்கீத டைரெக்ஷன்) கே.வி. மகாதேவன், (டைரெக்ஷன்) கே. சோமு ஆகியோர் ஒத்துழைக்கின்றனர். படம் பிலிம் சென்டர் ஸ்டூடியோவில் பெரும் பகுதி உருப்பெற்று விட்டது.

சங்கிலித் தேவன்

ஏற்கெனவே வெளிவந்துள்ள "பம்பாய் மெயில்" படக் கதைதான் "சங்கிலித் தேவன்" திரைக் கதையும். என்றாலும் புதிய முறையிலே கதையை அமைத்து வசனங்களையும் எழுதி யிருக்கிறார் சக்தி கிருஷ்ணசாமி. ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸின் துரிதத் தயாரிப்பாகும் இது. பி. ஆர். பந்துலு டைரெக்ட் செய்து வரும் இந்தப் படத்தில் சங்கிலித் தேவனாக எஸ். எஸ். ராஜேந்திரன் நடிக்கிறார். மற்றும் வி. ஆர். ராஜகோபால், டி. எஸ். பாலையா, எஸ். ஏ. நடராஜன், டி. வி. நாராயணசாமி ஆகியோரும் நடித்து வருகின்றனர். இப்படம் ஏ. எல். எஸ். நிர்வாகத்திலுள்ள பரணி ஸ்டுடியோவில் வளர்ந்து வருகிறது.



"கிட்ட நெருங்கினே இந்த டிப்பன் காரியர் உன் மண்டையைப் பதம் பார்த்து விடும்" என்று ஸ்ரீரஞ்சனி அசோகனை மிரட்டுவது அசோகா பிக்சர்ஸ் "பொன் விலங்கு"க்காக.

அறிவாளி

டைரெக்டர் ஏ. டி. கிருஷ்ணசாமியின் தயாரிப்பு ஸ்தாபனமான ஏ. டி. கே. புரொடக்ஷன்ஸின் "அறிவாளி" அதிக சத்தம் போடாமல் வேகமாகப் படமாகி வருகிறது. இப் படத்தின் சகல உரிமைகளையும் பாபு பிரதர்ஸார் பெற்றுள்ளனர். இப் படத்தின் திரைக் கதையை அமைத்து வசனங்களை எழுதியிருப்பதுடன் படத்தை டைரெக்ட் செய்தும் வருகிறார் ஏ. டி. கிருஷ்ணசாமி. சிவாஜி கணேசன், பாலையா, தங்கவேலு, டி. ஆர். ராமச்சந்திரன், கே. சாரங்கபாணி, பானுமதி, டி. பி. முத்துலட்சுமி, வேணுபாய், எம். சரோஜா ஆகியோர் நடித்து வருகின்றனர். சங்கீத டைரெக்ஷனை எஸ். வி. வெங்கட்ராமன் கவனித்து வருகிறார்.

மாதவி

சேலம் எம். ஏ. வி. பிக்சர்ஸாரும், வள்ளியப்பா புரொ

"சுறுசுறுப்புக்கும் விறுவிறுப்புக்கும் சினிமா அகராதியில் அர்த்தம் சாயி - சுப்புலட்சுமி" என்பதை உறுதிப் படுத்தும் "சுமங்கலி" யில் வரும் அவர்கள் ஆட்டம்.

டக்ஷன்ஸும் கூட்டாகத் தயாரிக்க ஏற்பாடான "மாதவி" என்ற சமூகப் படத்தை எம். ஏ. வி. பிக்சர்ஸாரே இப்போது தனியே தயாரித்து வருகிறார்கள். இப்படத்தில் மனோகர், சௌகார் ஜானகி, தேவிகா, முத்துலட்சுமி, பக்கிரிசாமி, வி. கோபாலகிருஷ்ணன், யதார்த்தம் பொன்னுசாமி பிள்ளை, ராஜேஸ்வரி மற்றும் பலரும் நடித்து வருகிறார்கள். இதை கிருஷ்ணராவ் டைரெக்ட் செய்து வருகிறார். கதை - வசனத்தை வெங்கடராமானுஜமும், பாடல்களை காமு ஷெரீபும் எழுதியுள்ளனர். சங்கீத டைரெக்டர் கே. வி. மகாதேவன். இந்த துரிதத் தயாரிப்பை தயாரிப்பாளர்கள். தீபாவளியன்று திரையிட எண்ணியிருக்கிறார்கள்.

புதுமைப் பெண்

கஜலட்சுமி பிக்சர்ஸின் "புதுமைப் பெண்" பெருமளவு பாரமௌண்ட் ஸ்டுடியோவில் படமாகிவிட்டது. படத்தின் வசனங்களின் பெரும் பகுதியை பி. ஏ. குமார் எழுதியிருக்கிறார். எஸ். எஸ். ராஜேந்திரன், மனோகர், டி. எஸ். பாலய்யா, சுப்பையா, வி கே. ராமசாமி, எம். என். ராஜம், ராஜசுலோசனா, ஜயந்தி கமலா இப்படிப் பலர் நடித்துள்ள இப் படத்தை எம். திருவேங்கிடம் டைரெக்ட் செய்துவருகிறார். இப் படத்தின் சகல உரிமைகளையும் ஸ்ரீ சேஷாசலம் பிக்சர்ஸார் பெற்றுள்ளனர். புதுமைப்பெண் திரையிலே காட்சி அளிக்கும் நாள் அதிக தூரத்தில் இல்லை என்றும் தெரிகிறது.

வசீகர தோற்றத்திற்கும், பட்டுப் போன்ற மேனிக்கும், இன்றியமையாதவை.

RAJA BAR SOAP for easy washing.

MFRS : MANYAM & CO., BANGALORE-3.

GP.

பசந்த் பிக்சர்ஸ்
ஜிம்போ
முழுநீள கேவா கலர்
தமிழ்ப்படம்
வாடியா பிரதர்ஸ்
தயாரிப்பு
உரிமையாளர்:
ஸ்ரீ ராமா பிலிம்ஸ்,, சென்னை 2.







‘தமிழிலே டார்ஜான் போன்ற படங்கள் இல்லையே’ என்ற ரஸிகர்களின் ஏக்கத்தைப் போக்குவதாக இருக்கிறது இப்படம்.

கடல் விடு தூது

"அசோக்"

"**சா**ர், உங்களைப் பார்க்க யாரோ வந்திருக்கிறான்!"

"யார் அது?"

"யாரோ தெரியவில்லை. பார்க்கப் பைத்தியக்காரன் போலிருக்கிறான். அவன் யாசகத்திற்கு வரவில்லையாம். நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன், விரட்டியும் பார்த்தேன். போகும் வழியா யில்லை. 'துரையை அவசியம் பார்க்கணும்' என்று கெஞ்சுகிறான். அவனைப் பார்க்கப் பரிதாபமா யிருக்கிறது."

"சரி, வரச்சொல்!"

பியூனும் அவனைத் தொடர்ந்து பைத்தியக்காரன் கோலத்திலிருந்த மனிதனும் உள்ளே வந்தனர். துரை, வந்த மனிதனை ஏற இறங்கப் பார்த்தார்.

மெலிந்த சரீரம், ஒட்டிய கன்னங்கள், ஆழமான குழிகளில் பதுங்கிய கண்கள், நீண்ட தாடி, கிழிந்த ஆடைகளுடன் பரிதாபமாகக் காட்சியளித்த அவனைப் பார்க்கவே துரைக்கு அருவருப்பாக இருந்தது.

"யார் நீ?" என உரத்த குரலில் கேட்டார்.

"நான்...... நான் தான்! என்னைத் தெரியவில்லையா?" என்று தடுமாற்றத்துடன் பதிலளித்தான் அந்த ஏழை.

துரை அவனைக் கூர்ந்து பார்த்தார். "பார்க்கப் பிச்சைக்காரன் போலிருக்கிறான், நாடறிந்த மன்னன் போல், 'என்னைத் தெரியவில்லையா' என்று எவ்வளவு பெருமையுடன் அறிமுகம் செய்து கொள்கிறானே?" என்று எண்ணிய துரை தம்முள் சிரித்துக் கொண்டார்.

"நீ யார் என்று சொல்லாமல் எப்படித் தெரிந்து கொள்வது?"

அவன் சற்று நேரம் மௌனமாயிருந்தான். அந்த சில விநாடிகளுள் அவனுள் பொங்கிய சோகத்தின் குமுறல் தொண்டையை அடைத்து அவனைப் பேசவிடாமல் தடுத்தது. இரண்டொரு நிமிடங்களுக்குப் பின் தன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டவனாக துரையை ஏறிட்டுப் பார்த்து, தழு தழுத்த குரலில், "நான்...... நான் தான் துரைசாமி" என்று சொல்லும் போதே அவனுடைய மனவேதனையெல்லாம் கரைந்து கண்ணீராய் மாறி அவன் கன்னங்களின் மேல் தாரை தாரையாக வடிந்தது.

'துரைசாமி'.... 'துரைசாமி' என்று முனகியவாறே, அவனை நோக்கினார் துரை. அவர் பார்வை அந்த ஏழையின் ஆழமான கண்களை ஊடுருவிப் பாய்ந்தது. மனம் சிந்தனை அலைகளுக்கிடையில் சுழன்று கொண்டிருந்தது. திடீரென்று ஒரு நினைவு அலை மின்னல் வேகத்தில் அவர் மூளையைத் தாக்கியது. அந்த அதிர்ச்சியில் ஒரே ஒரு கணம் திகைத்தார். மறு கணம் ஆசனத்தை விட்டுத் துள்ளி எழுந்தார்.

"ஆ நீ......நீ துரைசாமியா? உண்மையில் நீதானா துரைசாமி? என்னால் நம்பமுடியவில்லையே?" என்று கூறிக்கொண்டே இரண்டடி முன் வைத்து மீண்டும் அவனைக் கூர்மையோடு பார்க்கலானார். அந்தப் பைத்தியக்காரனின் வேடம் கலைந்தது.

கண்ணாடிபோல் மின்னும் கன்னங்கள். பெரிய கண்கள். விசாலமான நெற்றியில் விபூதிப் பட்டை, நடுவில் வாசம் வீசும் ஜவ்வாதுப் பொட்டு. அதன் கீழ் சந்தனப் பொட்டு. வாலிபப் பருவத்தின் ஆரம்பதசையை அறிவிக்கும் அரும்பு மீசை. அதைக் கேலி செய்யும் மிடுக்கான புன்னகை. பள பளவென்று வாரிவிட்ட சுருள் கேசம். பகட்டான பட்டாடைகள். அகன்று விரிந்த மார்பில் ஒளிவீசும் ரத்தினஹாரங்கள், முத்து மாலைகள் முதலிய அலங்காரங்

களுடன் பால் மணம் கமழும் பதினைந்தே வயதான சின்ன மருதுவின் செல்ல மைந்தன் துரைசாமி தோன்றினன்.

"துரைசாமி! நீயா இப்படி உருமாறி தளர்ந்து, மூப்படைந்தவனைக் காணப் படுகிருய்?" என்று பெருமூச்சு விட்ட துரையின் குரலில் ஏக்கம் தொனித்தது.

துரைசாமி மௌனமாய் நின்றிருந் தான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் அருவி போல் வடிந்து கொண்டிருந்தது.

"உன்னை இந்நிலையில் இங்கு காண் பேனென்று நான் ஒரு போதும் கனவு கூடக் காணவில்லை. உன்னைக் கண்ட பின் பழைய நினைவுகளெல்லாம் என் இதயக் கடலில் கொந்தளிக்கின்றன. என்னை எதற்காகப் பார்க்க விரும்பினய்?"

"துரையே! இந்த அவல நிலையி லிருக்கும் என்னை நீங்கள் அடையாளம் காண முடியாதென்றே நினைத் திருந்தேன். என்னைக்கண்டு கொண்டது பற்றி மிக்க மகிழ்ச்சி."

"இங்குநீ சௌக்கியமா யிருக்கிருயா? என்னைக் காணவந்த காரியம் என்ன?"

"நீங்கள் இங்கு வந்திருப்பதாகக் கேள்விப் பட்டேன். உங்களைப் பார்த்து விட்டு என் மனத்திலுள்ள ஓர் ஆசையை நிறைவேற்றிக் கொள்ளலாமென்று வந்தேன். என் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்களென்ற நம்பிக்கை யோடுதான் வந்திருக்கிறேன். என் தந்தை மருதுபாண்டியர் உங்களுக்கு அத்தியந்த நண்பராக இருந்த காலமும் உண்டு. இறந்து விட்ட என் தந்தையை நீங்கள் நண்பராகக் கருதி ஞலும் சரி. அல்லது விரோதியாகக் கருதினலும் சரி. ஒரு சமயம் உற்ற நண்பரா யிருந்தவரின் மகன் என்ற முறையில் தயவு செய்து எனக்கு உதவி புரியவேண்டும்."

"துரைசாமி! உன் பேச்சின் உட் கருத்து விளங்குகிறது. இதோ பார், நீ கூறியதுபோல் உன் தந்தையாரின் அன்புக்குப் பாத்திரமான நண்பனக இருந்த காலமும் உண்டு. அந்த இனிய நாட்களை நான் ஒரு போதும் மறக்க முடியாது. ஆனல் எதிர்பாராத கார ணங்களும், சூழ்நிலையும், கம்பெனியின் அதிகாரமும் சேர்ந்து சற்றும் எதிர் பாராத சந்தர்ப்பங்களை உண்டுபண்ணி விட்டன. அதை நினைத்து என்ன பயன்? நான் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஊழி யன். அதன் சட்டதிட்டங்களுக்கு உட் பட்டு நடக்கக் கடமைப்பட்டவன். நீ விரும்புவது போல், அதாவது உனக்கு விடுதலைதர இயலாதவனு யிருக் கிறேன்."

"சார், என்னைத் தவருகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். என் விருப்பம் அதுவல்ல!"

துரைசாமியின் இந்தப்பதிலைக் கேட்ட தும் துரையின் புருவங்கள் ஆச்சரி யத்தில் உயர்ந்தன.

"என்ன? உன் விடுதலையை நீ கோர வரவில்லையா? பின் எதற்காக என்னைப் பார்க்க விரும்பினய்? நல்ல உணவு, உடை இவை போன்ற சலுகைகளை வேண்டுகிருயா?"

இதைக் கேட்டதும் துரைசாமி வாய் விட்டே சிரித்து விட்டான். அந்தச் சிரிப் பின் ஒலியிலும் அவனுடைய மன வேதனை பிரதிபலித்தது.

"இல்லை, இல்லை. அதெல்லாம் எனக்குத் தேவையில்லை. உரிமை

யிழந்து வாழும் இந்த உணர்ச்சியற்ற உடலுக்கு உணவும், நல்ல ஆடை யும் வேண்டியதில்லை. ஆனல் ஒரே ஒரு விருப் பம். நான் எவ்வளவு முயற் சித்தாலும் அது என்

மனத்தை விட்டகலாமல் என்னைத் துன்புறுத்திக் கொண்டே வருகிறது. என் இந்த அசைக்க முடியாத ஆசையை நிறைவேற்றினால் போதும். நான் விடுதலை பெற்ற அளவிற்கு மகிழ்வேன்.''

''உன் விருப்பத்தைச் சொல்லாமல் எதை எதையோ, சொல்லிக்கொண்டு போகிறாயே? என்ன வேண்டும், சீக்கிரம் சொல்!''

"என் தாயகத்தில் வாழும் உறவினர்களுடன் கடிதப்போக்குவரத்து வைத்துக்கொள்ள வசதி செய்ய வேண்டும். இது என் நெடுநாளைய வாஞ்சை! இந்த உதவியைச் செய்தால் நான் மறுபடியும் என் தாய் நாட்டில் பிறவி எடுத்த அளவிற்கு மகிழ்வேன்."

துரைசாமின் இந்த வேண்டுகோள் துரையின் மனத்தை என்னவோ செய்தது. உள்ளத்தின் அடித்தளத்தில் பச்சாத்தாபம் பிறந்தது. சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தார். எப்படிப்பட்ட நெருக்கடியான நேரத்திலும், ஈஸ்ட் இண்டியா கம்பெனியின் ஆணையை நீ மீறக்கூடாது என்றே துரையின் 'வெள்ளை இதயம்' அவருக்கு அறிவுறுத்தியது.

''துரைசாமி! உன் நிலையைக் காண வருந்தமாகத்தான் இருக்கிறது. ஆனாலும் நான் என்ன செய்யமுடியும்? இந்த உதவியை உனக்குச் செய்ய முடியாதவனாயிருக்கிறேன். ஆமாம், உன் உற்றார் உறவினர்களெல்லோரும்தான் இறந்து விட்டார்களே? நீ யாருடன் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ள விரும்புகிறாய்?".

''இல்லை. சாகடிக்கப் பட்டனர். மிஞ்சிய நாங்கள் தாய் நாட்டைவிட்டுப் பிரிக்கப்பட்டு, உற்றார் உறவினரை இழந்து மனைவி மக்களைப் பிரிந்து தூரக் கடல் தாண்டி, கண் காணாத இந்தத் தீவில் சாகாமல் அணுவணுவாகச் செத்துக் கொண்டிருக்கிறோம்! ஆயினும் நாங்கள் பிறந்து வளர்ந்த எங்கள் தாய்நாடு, தனிச் சிறப்பு வாய்ந்த தமிழ் நாடு உயிருடன் இருக்கிறதல்லவா? தன்னலமற்ற தமிழ் இனம் இன்னும் அழிந்து போக வில்லையே? அவர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வது தவறா? எங்கள் பெற்றோர்களுக்கு அளித்தது போல் எங்களுக்கும் தூக்குத் தண்டனையை ஏன் விதிக்கவில்லை? புனிதமான எங்கள் தாயின் மடியில் புன்னகை பூத்த முகத்துடன் தாய் நாட்டின் உரிமைக்காகப் போரிட்டு மடியவும் அனுமதிக்கவில்லையே ஆங்கில ஆதிக்கம், தளபதி! சொல்லுங்கள். அவர்களோடு சேர்த்து எங்களையும் தூக்குமரத்தில் ஏற்றாமல் ஏன் இப்படிச் சித்திரவதைக்கு உள்ளாக்கினீர்கள்?" துரைசாமியின் ஒவ்வொரு வார்த்தையும் துரையின் இதயத்தைப் பிளக்கச் செய்தது. அவருடைய கல்நெஞ்சில் பிறந்த ஓர்வித உணர்ச்சி உடலெல்லாம் பாய்ந்து அவரைத் திணறடித்து விட்டது. அந் நிலையை ஒருவாறு தாங்கிக் கொண்டார். "துரைசாமி! ஆத்திரப்படாதே! அப்போது நீ விவரம் அறியாத சிறுவன். மற்றோர்களும் அதிகமாகக் குற்றம் புரியாதவர்கள். உன்னையுட்பட எழுபது பேரை, கருணைகூர்ந்தல்லவா ஆங்கில ஆட்சியா துரை. துரைசாமியின் எதிர்



ளர் உங்கள் உயிருக்கு உலை வைக்காமல் இந்தத்தீவில், உயிர் வாழும் படி விட்டிருக்கின்றனர்!''

"துரையே, போதும், போதும். இரக்கமுள்ள உங்கள் கும்பினியாரின் ஆட்சி முறையை விளக்கவேண்டாம். என் வேண்டுகோளுக்கு உங்கள் மனம் இரங்கவில்லையே?"

''துரைசாமி! உன் மனக்கிளர்ச்சியை நன்கு அறிந்தேன். ஆனால் நான் என்ன செய்யட்டும்? இதற்குச் சட்டம் சம்மதிக்காது."

''ஆம், துரையே, நீங்கள் கூறுவது சரிதான். உங்களால் உருவாக்கப் பெற்ற சட்டங்களுக்கே நீங்கள் அடிமையானால் என்ன செய்ய முடியும்? இவ்வளவு நேரம் என்னுடன் பேசியதற்கு மிக்க நன்றி. நான் வருகிறேன்" என்று கூறி விடை பெற்ற துரைசாமியின் முகத்தில் ஒரு விதமான சலனமும் தோன்றவில்லை. அவன் அங்கு வரும் போது இருந்த அதே அமைதியான வதனத்துடன் திரும்பிச் சென்றான்.

துரைசாமி சென்ற திக்கைப் பார்த்துக் கொண்டே பெருமூச்சு விட்டார் துரை. துரைசாமியின் எதிர்பாராத சந்திப்பினால் துரையின் மனக்கடலில் கொந்தளிப்பு எழுந்தது.

அன்றிரவு வெகுநேரம் வரை துரைக்குத் தூக்கம் வரவில்லை. கடந்த கால நினைவுகளெல்லாம், கூரிய ஈட்டிகளாக அவர் இதயத்தில் பாய்வது போன்ற வேதனை உணர்ச்சியைத் தோற்றுவித்தன. மெத்தையில் புரண்டு, புரண்டு படுத்தார். கண்களை இறுக மூடிக் கொண்டு தூங்க முயற்சித்தார். பழைய சம்பவங்கள் கருநாகங்களின்

'இனிமேல் என்னை யாரும் புதுமுகம் என்று குறிப்பிடக் கூடாது' என முறைக்கிறாரோ? — "பெரிய கோயிலி'ல் பிரேம் நஸீர்.

வடிவில் அவர் கண்முன் ஒரு கணம் நர்த்தனமாடின. மறுகணம் அவையெல்லாம் ஒரே உருவமாக மாறி பயங்கரமாய்ச் சீறிக்கொண்டே அவர் மேல் பாய வந்தன. பீதியால் நெஞ்சு படபடக்கக் கண் விழித்தார் துரை. பயத்தால் மருண்ட துரையின் கண்களுக்குக் கருநாகம் தென்படவில்லை. அதன் சாயலைப்போல் அறை முழுதும் இருண்டு கிடந்தது.

"ஆஹ்ஹ்ஹ்ஹா"! என்ற பேய்ச் சிரிப்பு அந்தக் காரிருளைக் கிழித்துக் கொண்டு பயங்கரமாக ஒலித்தது.

துரையின் சப்த நாடிகளும் ஒடுங்கி விட்டன. உடல் முழுதும் வியர்த்துக் கொட்டியது. அந்த அகால வேளையில் ஒலித்த பயங்கரச் சிரிப்பைக் கேட்டுப் பதறிப் போனார் தளபதி. மிகுந்த பிரயாசத்துடன் தைரியத்தை வரவழைத்துக் கொண்டார்.

"யார் அது?" என்று அவர் அதட்டிய குரலில் நடுக்கம் தொனித்தது.

"கர்னல் வெல்ஷ்! எங்கே மிரள மிரளப் பார்க்கிறாய்? இதோ நான் இங்கேதான் இருக்கிறேன். பார் என்னை!" "ஆஹ்ஹ்ஹ்ஹா!" மீண்டும் அதே சிரிப்பு.

"ஐயோ! இதென்ன பேய்ச் சிரிப்பு? நீ யார்? இந்த அகால வேளையில் இங்கு ஏன் வந்தாய்?"

"ஓகோ! என்னையே 'நீ யார்' என்று வினவுகிறாயா? நான் யார் என்பதை முடிவில் அறிந்து கொள்வாய். நீ மறந்துவிட்ட, இல்லை...... இல்லை. நீ மறக்க முயற்சித்துக் கொண்

டிருக்கும் இரண்டொரு நிகழ்ச்சிகளை நினைவுப் படுத்தி உன் கடமையைத் தூண்ட வந்திருக்கிறேன்.

''ஏறக்குறைய இருபத்து நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த சம்பவம்; நீ கிழக்கிந்தியப் படையில் தென்னிந்தியாவில் பணியாற்றிக் கொண்டிருந்த காலம். அதாவது, கி. பி. 1795-ம் ஆண்டு, பிப்ரவரி மாதம். நீ உன் வாழ்நாளிலேயே மாபெரும் வீரர்களாகிய மருது சகோதரர்களை மறவர் சீமையென்று போற்றப்படும் தமிழ் நாட்டில் சந்தித்தாய். நீ அன்னிய நாட்டவனாக இருந்தாலும் அந்த மறவர் சீமையின் காவலர்கள் உன்னை உள்ளன்புடன் வரவேற்று உபசரித்து விருந்து நடத்தினர்கள். தம்முடைய அரண்மனையில். அவ்விரு சகோதரர்களின் உளங்கனிந்த நட்பிலும், விருந்து தடபுடலிலும் நீதிக்கு முக்காடிட்டு விட்டாய். அன்று முதல் நீயும் சின்ன மருதுவும் அத்தியந்த நண்பர்களாகி விட்டீர்கள்.

''சின்ன மருதுவின் அஞ்சா நெஞ்சத்தையும், ஆற்றல் மிக்க வீரச் செயல்களையும்கண்டு பன்முறை நீவியந்தது உண்டு. அந்த வீரரிடமிருந்து இந்திய நாட்டுப் போர்ப் பயிற்சியையும் பெற்ருய். வளரி வீசவும், ஈட்டி எறியவும் கற்றுக் கொண்டாய்.

''வேட்டைப் பிரியரான பெரிய மருதுவுடன் நீ ஒருநாள் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றிருந்தாய். அப்போது நீ ஒரு வேங்கையைச் சுட்டாய். ஆனல் குறி தவறியது. தீப்பிழம்பு போல் பிரகாசித்துக் கொண்டிருந்த அதன் கண்ணின் ஓரத்தில் உன் குண்டு பாய்ந்தது. அடிபட்ட வேங்கை ஆக்ரோஷத்துடன் உன்மேல் பாய வந்தது. அந்நேரத்தில் பயத்தால் செயலற்று நீ நின்று விட்டாய்......என்ன, நினைவிருக்கிறதா?

"ஊம், அப்போது நடந்ததை முழுதும் சொல்லி விடுகிறேன். வேங்கை உன் அருகில் வந்துவிட்டது. அது சீற்றத்தோடு உன்மேல் பாய்ந்து, பழிதீர்க்க விருந்த தருணத்தில்...... சற்றும் எதிர்பாராத வண்ணம் அந்தக் காட்டு வேங்கையின் மேல் நாட்டு வேங்கை ஒன்று பாய்ந்தது. இரு வேங்கைகளுக்கும் சில நிமிடங்கள் உக்கிரமான போர் நடந்தது. ஒரு

சூழ்நிலையையும், சுற்றுவட்டாரத்தையும் மறந்து காதலில் லயித்திருக்கின்றனர். லலிதகலா பிலிம்ஸ் "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"



வி. கே. ராமசாமியின் கூச்சலைக் கேட்டு பிரேம் நஸீர் மிரளுவதை எம். என். ராஜமும், பி. டி. சம்பந்தமும் ரஸிக்கின்றனர். தினகரன் பிக்சர்ஸின் "ஆஸ்திக்கொரு ஆணும், ஆசைக்கொரு பெண்ணும்."

மூச்சில் வேங்கையின் வாலைப் பிடித்துக் கரகரவென்று இழுத்துச் சுற்றித் தரையில் பலமாக வீழ்த்திஞன் மறக்குல வீரன். நீ ஆச்சரியத்துடன் நின்று கொண்டிருந்தபோது மற்ருேர் அதிசயம் நடந்தது.

"உயிர் இழந்து வீழ்ந்து கிடக்கும் வேங்கையின் வாயைப்பிளந்து அதன் பற்களைத் தன் கையாலேயே பிடுங்கிஞன் மருதுபாண்டியன். அந்த அற்புதமான செயலைக் கண்டு மெய்சிலிர்க்க பிரமித்து நின்று விட்டாய். நினைவிருக்கிறதா? அடிபட்டு ஆத்திரத்துடன் சீறி வரும் வேங்கையிடமிருந்து உன்னைக் காப்பாற்றிய, நீ வாழ் நாள் முழுதும் கடமைப்பட்டிருக்க வேண்டிய நீ, பின்னர் நடந்து கொண்ட விதம் எப்படிப்பட்டது? உன் உயிரைக் காப்பாற்றிய நண்பனுக்கு நீ எந்த விதமாக நன்றியைச் செலுத்திஞய்? நினைத்துப் பார்!.

"ஊஹூம்! அதையும் ஞாபகப் படுத்திவிடுகிறேன். பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மஞல் துவக்கப்பட்ட உரிமைப்போர் ஊமைத்துரையாலும், மருதுசகோதரர்களாலும், மறவர் சீமையில் உக்கிர ரூபமெடுத்து, கம்பெனிப் படைகளின் தளபதிகளில் நீயும் ஒரு தளபதியாய் மறவர் சீமைமேல் படையெடுத்தாய். தாய் நாட்டின் மானத்தைக் காக்கவும், தம் சுதந்திரவாழ்வைப் பாதுகாக்கும் நோக்கத்தோடும், தன்மான உணர்ச்சி பொங்க, குமுறும் எரிமலையிலிருந்து கிளம்பும் அக்கினி ஜுவாலை போல் புரட்சி வீரர்கள் வீறு கொண்டெழுந்து ஆங்கிலப் படையைச் சிதறடித்துப் பின்வாங்கச் செய்தனர். மறக்குல வீரர்களின் ஆற்றல் மிக்க தீரச் செயல்களைக் கண்டு கதிகலங்கியது ஆங்கிலப் படை. நாட்டின் உரிமையைக் கருதி, தம் உயிரைத் துச்சமாக மதித்து அவர்கள் செய்த வீர தீர, பராக்கிரமச் செயல்கள் உங்களை நடு நடுங்க வைத்துவிட்டன. இனிமேல் சுதேசிகளுடன் நேருக்கு நேர் நின்று வெல்லமுடியாதென்று நினைத்த கம்பெனியார், நேர்மையற்ற முறையில் சூழ்ச்சி செய்தனர். சூழ்ச்சி பலித்தது.



இவ்வளவு சாதுவான மனிதரா படங்களில் வில்லனை வெளுத்து வாங்குகிருர்?.—டி. எஸ். பாலய்யா.

பாழடைந்த கோட்டையில் பதுங்கியிருந்த மாபெரும் வீரர்களை வஞ்சித்து பிடிக்க முயன்றீர்கள். நடு நிசியில், ஆழ்ந்த நித்திரையில் இருந்த வீரர்களின் நெஞ்சைக் குறிவைத்துச் சுட்டீர்கள்.

"உனக்கு அன்போடு அன்னமிட்டு, சுவைமிக்க பழங்களைத் தந்து, போர்த்திறமையையும் சொல்லித்தந்த அன்பர்களின் தொடையில் துப்பாக்கியால் சுட்டுப் புண்படுத்திச் சிறைப்பிடித்து அவர்களைத் தூக்குமரத்தில் ஏற்றிக் கொல்லும் வரைக்கும் நீ கம்பெனிக்கு உறுதுணையாயிருந்தாய். தூக்குமரத்தில் ஏற்றியவர்கள் போக மிஞ்சிய எழுபது சுதேசி வீரர்கள் 'பிரின்ஸ் ஆப் வேல்ஸ்' தீவிற்கு ஜீவாந்திரம் அனுப்ப உன் பொறுப்பில் விடப்பட்டிருந்தனர். அவர்களில் பால் மணம் மாறாத பதினைந்தே வயதான துரைசாமியும் ஒருவன். நீ நினைத்திருந்தால் அவனைத் தப்புவித்திருக்கலாம் அல்லவா?"

"போகட்டும், இனி நடப்பதையாவது கவனிக்கலாமல்லவா? மாலையில் உன்னைச் சந்தித்த துரைசாமி என்ன விரும்பினான்? அவன் தன் தாய்நாட்டுடன் கடிதங்களின்மூலம் சிறுதொடர்பு வைத்துக் கொள்ள மட்டும் தானே கேட்டுக்கொண்டான்? அவனுடைய விருப்பத்தை நீ எப்பாடு பட்டாவது தீர்க்கக் கடமைப்பட்டவன் இல்லையா?"

"என்னைச் சும்மா துன்புறுத்த வேண்டாம். நான் எத்தனையோ விஷயங்களில் என் மனத்திற்கு விரோதமாய் நடந்து கொள்ள நேர்ந்தது. நீ நினைவுறுத்தியது போல் என் கடமையைச் செய்ய முயற்சிக்கிறேன்."

"'நீ' 'நீ' என்றே அழைக்கிறாயே? இன்னும் என்னைத் தெரியவில்லையா?"

"ஆம்....! ஆமாம், ஆமாம் தெரிந்து கொண்டேன். நான் தான் நீ. நீதான் நான். அதாவது என் மனச்சாட்சி!" என்று கூறிய துரை நீண்ட பெருமூச்சு விட்டவாறே மெத்தையில் சாய்ந்தார்.

நீல வானை விட்டுச் சூரியன் விரைவாகக் கடலில் மூழ்கிக் கொண்டிருந்தான். அந்நேரத்தில் துரைசாமி கடலை நோக்கி வந்தான். அவனை வரவேற்கும் வண்ணம் கடல் அலைகள் அவன் பாதங்களைத் தொட்டு முகமன் கூறின. கடல் அலைகளுடன் அவன் பேசலானான்.

"சமுத்திர ராஜனே! உன்னிடம் ஓர் காரியமாய் வந்துள்ளேன். உன்னிடம் நான் கேட்கும் உதவிக்கு நீ அதிசயம் கொள்ளமாட்டாயென்று நினைக்கிறேன். புவி எங்கும் பரந்து கிடக்கும் பொங்கு மாங்கடலே! நான் உன் மூலம் என் தாய் நாட்டிற்குச் செய்தி விடுக்கப்போகிறேன். துயர் நிரம்பிய என் கதையைக் கேள்! எல்லாவற்றையும் இழந்து ஜீவாந்திரவாசியாக வாழும் எனக்கு என் தாய்நாட்டிற்குக் கடிதம் எழுதும் உரிமையையும் அளிக்க மறுத்து விட்டார் துரை! ஆனாலும் என் இதயத்தில் பொங்கும் இந்த ஆவலைக் கட்டுப்படுத்த என்னால் முடியவில்லை. இதோ என் அருமைத்தாய்க்கு எழுதிய

ஓலையை உனக்குப் படித்துக் காட்டுகிறேன். அலை ஓசையைச் சற்று நேரம் தணிய விட்டு, இந்த நிருபத்திலுள்ளதை கவனமாய்க் கேட்பாயாக!" எனக் கூறிய துரைசாமி ஓலையைப் பிரித்துப் படிக்கலானான்.

தவப்பெருமை வாய்ந்த தமிழ்த் தாய் நாடே!

ஆயிரக் கணக்கான மைல்களுக்கப்பால் இருந்தாலும், என்னைப் பெற்றெடுத்த உன் நினைவு என் மனத்தை விட்டு அகலாது நிலைத்துநின்று, நாட்கள் செல்லச் செல்ல நெஞ்சத்தைக் குமுற வைக்கின்றது. உன் மணி வயிற்றிலே பிறந்த நாங்கள், உன் மடியிலேயே தவழ்ந்து விளையாடி, அருஞ் செயல்கள் பல ஆற்றி உன் மடியிலேயே மீளாத் துயில் கொள்ளவும் விதியற்றவர்களாகி விட்டோம்.

"சீரும் சிறப்பும் வாய்ந்த செந்தமிழ் நாடே! உன் உரிமையைக் காக்கும் பொருட்டு, வீரபாண்டிய கட்டபொம்மன், ஊமைத்துரை, மறவர் நாட்டின் மானம் காத்த மருது சகோதரர்கள் தம் உயிரைத் திரணமாய் மதித்துக் கடைசி மூச்சு உள்ளவரை போராடினர்! ஆனால், உன் துர்பாக்கிய வசத்தால் நீ பெற்றெடுத்த, உரிமையுணர்ச்சி அற்ற ஊதாரிகளால், தன் மானமற்ற சண்டாளர்களால் கல்நெஞ்சம் படைத்த கயவர்களால் அவர்கள், காட்டிக் கொடுக்கப் பட்டனர். அவ்வீரர்கள் தூக்குக் கயிற்றிலே தொங்கும் போதும் கூடத் தாய்நாட்டின் சுதந்திர வேள்வியில் தம் உதிரம் முழுவதையும் சிந்தி வீர மரணம் அடைய முடியாமைக்கு மனங் கலங்கினர்.

அன்பும் பண்பும் அமைந்த அன்னையே! கண்காணாத இந்தத் தீவில் துன்புற்று தாயன்புக்காக ஏங்கி நிற்கும் உன் சேய்களின் எண்ணம் ஈடேற, நீ அருள் புரிய வேண்டும்! உன் தமிழ், பண்பாட்டிலே தழைத்தோங்கவேண்டும்! உன் பொற் கரங்களில் அன்னியர் பூட்டிய அடிமைத் தளையைத் தகர்த்தெறிய எங்களுக்கு ஆற்றல் அளிக்க வேண்டும்! இனியும் நீ கோழைகளையும், நயவஞ்சகர்களையும், தன்மானமற்றவர்களையும் பெற்றெடுக்காமல் இருக்க வேண்டும்!

இனி என் வேண்டுகோளை என் தாய் நாட்டிற்கு நீ அறிவுறுத்தி விடுவாயென்று நம்புகிறேன். உன் நன்றியை நான் என்றென்றும் மறக்க மாட்டேன்!" என்று கூறி முடித்த துரைசாமி பக்தியோடு கடலுக்கு அஞ்சலி செய்தான்.

அதுவரை அமைதியாய் துரைசாமியின் துயர் நிரம்பிய உரையைக் கேட்டுக் கொண்டிருந்த சமுத்திர ராஜன், அவன் பணியைச் செய்யும் நோக்கத்துடன் ஆனந்தமாக ஆர்ப்பரித்துக் கொண்டு வந்து, உயரே கிளம்பி துரைசாமியின் தலைமேல் வரைப் பாய்ந்து அவன் இதய தாபத்தைத் தணித்துக் குளிரச் செய்து விட்டு வேகமாய் விடைபெற்றுச் சென்றான்.

கடலலையின் குளிர்ந்த ஸ்பரிசத்தில் தன் மனக்குறை யெல்லாம் மறைந்து விட்டது போன்ற ஓர் அபூர்வ உணர்வு பெற்றான் துரைசாமி. அவன் மனத்தில் அளவிடமுடியாத அமைதி பிறந்தது. தன் காரியம் நிறைவேறிவிட்ட மகிழ்ச்சியில் அவன் முகத்தில் பேரின்ப ஒளி வீசியது! ஆனந்தப் பரவசமான அந் நிலையில் சமுத்திர ராஜனுக்கு மௌனமாய்த் தன் நன்றியறிதலைத் தெரிவித்து விட்டுப் புறப்பட்டான் துரைசாமி.

மனச்சாட்சியால் துன்புறுத்தப்பட்ட வெல்ஷ் துரை அமைதியை விரும்பிக் கடற்கரையை நாடி வந்து கொண்டிருந்தார். அந்தநேரத்தில் அவர் எதிரில் வெற்றி நடையுடன் வேகமாய்த் தலை நிமிர்ந்து செல்லும் துரைசாமியைக் கண்டு திடுக்கிட்டார். ஆச்சரியத்தோடு, "துரைசாமி!" என்று அழைத்தார்.

துரையின் அழைப்புத் துரைசாமியின் காதில் விழவில்லை. தாய் நாட்டிற்குத் தன் வேண்டுகோளை விடுத்த பின்னர், அவனுக்கு இந்த உலகில் வேறு என்ன வேண்டியிருக்கிறது?

தளர்ந்த மனதுடன் வீடு திரும்பிய வெல்ஷ் துரை தம் குறிப்புப் புத்தகதில் கீழ்க்கண்டவாறு எழுதினர்.

"துரைசாமிக்கு என்னால் ஒரு உதவியும் செய்ய முடியவில்லை. ஒரு குற்றமும் செய்து அறியாத அவனுக்கு விடுதலைதர முடியாவிடினும், அவன்படும் அல்லலை நீக்கவாவது கிழக்கிந்தியத்தலைவர் முற்படுவார் என்று நம்புகிறேன்."

துரைசாமியின் கடல்தூது துரை அறியார். ஆனால், நாடு கடத்தப் பட்ட தன் மைந்தனின் வேண்டுகோளை அன்னை நிறை வேற்றியதை நாம் அறிவோம் அல்லவா?

வாழ்க்கை(வி)சித்திரம்
அமைப்பு:
குண்டூசிக் குழு
சித்திரம்
முத்து
தொட்டாவாரம் என்ற
ஊரில் 1924ம் ஆண்டு
செப்டம்பர் மாதம் 7.ம்தேதி
பானுமதி பிறந்தார்
சிறு வயதிலிருந்தே கிராம-
போன் பிளேட்டுகள் கேட்
பதில் பிரியம் உண்டு.
சிநேகிதிகளைக் கூட்டிவைத்
துக்கொண்டு வீட்டிலேயே
நாடகங்கள் நடிப்பார்.
தந்தையின் அனுமதியுடன்
முதல்படம் "வரவிக்ரயம்"
கதா நாயகியின் தங்கை
யாக நடித்தார்


"கிருஷ்ண பிரேமா" படப்
பிடிப்பு சமயம் - உதவி டைர-
க்டர் ராமகிருஷ்ணராவு
டன் காதல் ஏற்பட்டது
அவர்கள் காதலில்
தந்தை குறுக்கிட்டு அனுமதி
மறுக்கிறர்
தந்தையிடம் கோபித்துக்
கொண்டு பானுமதி வீட்
டை விட்டு வெளியேறுகிறர்
1943ம் ஆண்டு பானுமதி-
ராமகிருஷ்ணராவ்
திருமணம் நடந்தது
ஸ்வர்க்க ஸீமா" படத்தின்
மூலம் பாவுரமா பானுமதி
யாகி பட உலகில் நட்சத்
திர பதவி பெற்றர்
முதல்முதல் தமிழ்ப்படம்
ரத்னகுமார்" தொடர்ந்து
பல தமிழ்ப்படங்களில் நடிக்க
லானர்.

பானுமதியின் கார், காலிக
ளால் தாக்கப்பட்டதாக
வதந்தி கிளம்பியது
இறந்து விட்டதாக
பொய்ச் செய்திகள்
வெளியாயின
1950 ம் ஆண்டு தமிழ்-
தெலுங்கு, சிறந்த நடிகை
யென கௌரவிக்கப்பட்
டார்
1950
சண்டி ராணியை தமிழ்-
தெலுங்கு - இந்தி மூன்று
பாஷைகளிலும் தாமே
டைரக்ட் செய்து தயாரித்து
அகில இந்தியப் புகழ் பெற்றர்
சண்டிராணி
தன் அருமை மகன் பரணி
யின் பெயரில் படக்கம்பெனி
யையும், ஸ்டுடியோவையும்
ஆரம்பித்து நடத்தி வருகிறர்.
பட உலகிலிருந்து விலகி
சீக்கிரமே ஓய்வு பெறப்
போகிறர் பானுமதி.

[நடனக் கலையின் உயர்வுக்கென உழைப்பவர், அந்தத் துறையில் ஆராய்ச்சிகள் நடத்தும் வல்லுனர்கள். ஆகியோர் பற்றி இப்பகுதியில் தொடர்ந்து வெளிவரும்—ஆசிரியர்]

பரணி கிருஷ்ணமூர்த்தி

நமது தமிழ் நாட்டில், தஞ்சை ஜில்லா, கலைக்கருவூலமாக, தொன்று தொட்டு விளங்கி வருகிறது. தஞ்சை, இன்றைக்கும், கலைத் துறையில் முதன்மை பெற்று, முக்கியமாக பரதக்கலைக்கு ஒரு பாதுகாப்பு அரணாக அமைந்திருக்கின்றது. தமிழ் நாட்டில், பரத நாட்டிய நிலைகளைத் தாங்கிய சிற்பங்களில்லாத கோவில்களே யில்லை. கோவில்களின் சிற்பக் கலைக்கு மேலும் புது அழகை அளிக்கின்றன பரத நாட்டிய நிலைகள்.

பரதக்கலை தனது அழகு, பெருமை, மேன்மை இவற்றுடன் விளங்க தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த நடன ஆசார்ய பரம்பரையினர் அன்று முதல் இன்றுவரை எவ்வளவோ சேவைகளும் தியாகங்களும் தொடர்ந்து செய்து வருகின்றனர். தென்னாட்டில் மூவேந்தர்களுக்குப் பிறகு, நாயக்கர் வம்சத்தினராலும், மஹாராஷ்டிரர்களாலும், அநேக சமஸ்தானாதிபதிகளாலும், பிரபுக்களாலும், பரத நாட்டியம் ஆதரிக்கப் பட்டு வந்தது. பிறகு கவனிப்பார் அற்று பெருமை இழந்து போற்றுவாரற்று, ஆதரிப்பாரற்று, சின்னா பின்ன மாகியது. இந்நாட்டியக் கலையை ஆயிரமாயிரம் ஆண்டுகளாக காத்து வந்த நடன ஆசார்ய பரம்பரையினர் கோயில்களில் இக் கலையின் மூலம் ஈஸ்வர கைங்கர்யங்கள் செய்து வந்தனர். மிக்க வறுமையிலும், பல இன்னல்களையும் பொருட் படுத்தாது இவ்வுன்னதக்கலை, மறைந்து போகாமல் காத்து வந்திருக்கிறார்கள்.

இக்காலத்தில் பல விதமான மக்களும், சாதி, இன, வர்க்க பேதமின்றி சாஸ்திரீய பரத நாட்டியக் கலையைக் கற்க முற்படுகின்றனர். ஆயினும், ஆயிரமாயிரம் ஆண்டுகளாகப் பரதத்தைப் பேணிப் பயின்று வரும் நடன ஆசார்ய பரம்பரையினரின், கலைத் தன்மை நுணுக்கம், மேன்மை, லக்ஷணம், லட்சியம், ஏனையோருக்கு அவ்வளவாகக் கிடைப்பதில்லை.

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாக, தஞ்சை ஜில்லாவில், வழுவூர் எனப்படும் ஊரில் அத்தகைய நடன ஆசார்ய குடும்பத்தினர் அன்று முதல் இன்றுவரை இடைவிடாமல் தொண்டு புரிந்து வருகிறார்கள் என்றால் அது நமக்கு ஆச்சரியத்தையும் ஆனந்தத்தையும் அளிக்கின்றது.

வழுவூர், தஞ்சை ஜில்லாவில் ஒரு புராதன சிவக்ஷேத்திரமாகும். அவ்வூரில் எழுந்தருளியிருக்கும் ஞான சபேசரைப் பற்றிய புராணக்கதை ஒன்று உண்டு. அதாவது ஒரு சமயம் தாருகா வனத்தில் வசித்துவந்த முனிவர்கள், தங்

களது தபோபலத்தால் தாங்கள் கடவுளைவிடச் சிறந்தவர்கள், சக்திமிக்கவர்கள் என கர்வங்கொண்டிருந்தனர். அதன் பொருட்டு எம்பிரான் ஸ்ரீ ஞானசபேசராக வந்து நவரஸ தாண்டவமாடி அம்முனிவர்களின் கர்வத்தை அடக்கினார் என்று கூறப்படுகிறது. இத்தகைய நடனப் பெருமையுள்ள வழுவூரின் ஆசார்ய குடும்பத்தினர் இத்தனை ஆண்டுகளாக பரதக்கலை வாழ்ந்து, வளர்ந்து தழைத்தோங்க ஆற்றியிருக்கும் அருந்தொண்டுகளும், முயற்சிகளும் கணக்கிட முடியாதவை. நாம் அவர்களுக்கு எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறோம்.

இப் பரம்பரையினருக்கு மற்றொரு புகழும் உண்டு. சோழ தேசத்து இளவரசிகள் இவர்களிடம் சிஷ்யைகளாக இருந்து பரதம் பயின்று வந்திருக்கின்றனர். சுந்தரச் சோழ சக்ரவர்த்தியின் புதல்வியும், ராஜ ராஜச் சோழரின் தமக்கையுமான இளவரசி குந்தவி பிராட்டியார் இக் குடும்பத்தைச் சேர்ந்த நட்டுவனார் ஒருவரிடம் பரத நாட்டியம் பயின்றார். ராஜ ராஜச் சோழர், சக்ரவர்த்தியானவுடன் குந்தவியின் குருவான அந்த நட்டுவனாருக்குச் சில ஏக்கர் நிலத்தை குரு தட்சிணையாகக் கொடுக்க முன் வந்தார். இது அக்காலத்திய வழக்கம். ஆனால், அந்த குருவானவர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. தான் அதனை ஏற்றுக் கொண்டால், பிற்காலத்தில் தனது சந்ததியினர் வீணாக்கி, செலவழித்துவிடுவர் என்று எண்ணினார். ஆகவே அந்நிலத்தை அவ்வூரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஞானசபேசர் ஆலயத்திற்கு எழுதிவைக்கும்படி வேண்டிக்கொண்டார். சக்ரவர்த்தியவர்களும் அதன்படியே குந்தவியின் பெயரில் பிரதோஷக் கட்டளையாக (சந்த்யா தாண்டவம்) எழுதிவைத்தார். இன்றைக்கும் அந்நிலம் வழுவூர் ஸ்ரீ ஞான சபேசர் கோயிலுக்குச் சொந்தமாக இருக்கிறது. மேற் கூறிய சம்பவங்களைப் பற்றி செதுக்கப்பட்ட சிலாசாஸனம் ஒன்று இன்றைக்கும் அக்கோயிலில் காணப்படுகிறது.



வழுவூர் ராமையா பிள்ளை

•

ராமையா பிள்ளையவர்கள் மேற் சொன்ன பெருமைமிக்க பரம்பரையின் இந்நாளைய சந்ததியாக விளங்குகிறார். இந்நாளில் மிக வியாபகமானவரும், தலைசிறந்த பரத நாட்டியவித்துவானுமாக விளங்குகிறார். இவர் தனது ஏழாவது வயது முதற்கொண்டு தனது தாய் மாமாவாகிய வழுவூர் ஸ்ரீ மாணிக்கம் பிள்ளை அவர்களிடம் அனேக வருஷங்கள் குருகுலவாசம் செய்து, பரத நாட்டியக் கலையை முறையோடு பயின்று, அனேக கலை நுணுக்கங்களையெல்லாம் குருமுகமாய்க் கற்று, பல நாட்டிய சாஸ்திர நூல்களை ஆராய்ச்சி செய்திருக்கிறார். நாட்டியக் கலையில் அவருக்குள்ள ஆழ்ந்த ஆர்வத்தாலும், விடா முயற்சிகளாலும், இணையற்ற ஊக்கத்தாலும்,

நாளடைவில் பிராபல்யமடைந்து, இன்று மக்களின் மனதில் ஒரு உயர்ந்த ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறார்.

வழுவூர் ராமையா பிள்ளையவர்கள், நாட்டியக்கலை ஆராய்ச்சிக்காக, பரதகண்டத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கிற்கும் சென்றுள்ளார். தென்னிந்தியாவிலுள்ள அனேக கோயில்களுக்குச் சென்று நாட்டிய நிலைகளில் உள்ள சிற்பங்களைக் கண்டு, அனேக ஆயிரம் வருஷங்களுக்கு முன் பரதக் கலை எவ்வளவு உன்னத முறையில் இருந்தது என்பதை ஆராய்ச்சிகள் பல செய்து, புராதன நாட்டிய சாஸ்திரங்களோடு ஒப்பிட்டு, உடை, நிலை, கலை நுணுக்கங்கள் முதலியவற்றில் உன்னதக் கற்பனைகளோடு சிருஷ்டித்த தனது சிஷ்யர்களுக்குக் கற்பித்து, இக்கலையை புணருத்தாரணம் செய்திருக்கிறார் என்றால் அது மிகையாகாது. இவரது கலை நுணுக்கங்களோடு கூடிய சிற்ப நிலைகள், கச்சேரிகளில் நடனமணிகளின் பாதாதிகேசம் வரை தனி அழகையும், புதுமையையும், பொலிவையும், கவர்ச்சியையும் அளிக்கின்றன. இந் நிலைகளுக்காக இவர் மிக்க கவனத்துடன் முக்கிய பயிற்சிகள் அளிக்கிறார். இவர் இங்ஙனம் ஆராய்ச்சி மூலம் கண்டுபிடித்து கற்பிக்கும் நாட்டியங்கள் நமக்குப் புதுமையாகவும் ஆச்சரியகரமாகவும் தோன்றுகின்றன. ஆனால், அவை புதுமையானவையல்ல, மிக மிகப் பழமையான சம்பிரதாயம் என்பதை ராமையா பிள்ளை அவர்கள் எடுத்துக் கூறுகையில் நாம் வியப்படைகிறோம். பழமையின் பெருமையை எடுத்துக் கூறும் அவரது திறமை மிகவும் போற்றத் தக்கது.

சுமார் இருபது அல்லது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் தமிழ்ப் படங்கள் பூனா, கல்கத்தா முதலிய பிரதேசங்களுக்குச் சென்று எடுக்கப்பட்டு வந்தன. அப்படி எடுக்கப்படும் தமிழ்ப் படங்களில் நடனக் காட்சிகளுக்கு அங்கிருப்பவர்களை வைத்தே படம் பிடிப்பது வழக்கம். மேலும், “டான்ஸ் டைரெக்ட்” செய்ய அதிகம் ஆட்கள் இல்லாத காலம் அது. அப்படிப்பட்ட காலத்தில் அதாவது 1937—38ல் முதன் முதலில் “ஜோதிராமலிங்கம்” “மாயாமச்சந்திரா” முதலிய படங்களுக்கு டான்ஸ் டைரெக்டராக சென்ற முதல் தமிழர் ராமையா பிள்ளை

ஆவர். கல்கத்தாவில் ஈஸ்ட் இந்தியா ஸ்டுடியோவில் ராஜா சந்திரசேகர் படங்களை டைரெக்ட் செய்கையில், முதன் முதலில் டி. எம். பட்டம்மாளுக்கு நடனம் ஆட, டைரெக்ட் செய்தார். அதற்குப் பிறகுதான் நம்மவரும் ஆடலாம், டான்ஸ் டைரெக்ட் செய்யலாம் என்ற நிலைமை ஏற்பட்டது.

மிஸ் மாலினியில் பையனாக பட வாழ்க்கையைத் தொடங்கிய வி. கோபாலகிருஷ்ணன் இன்று ஒரு டஜன் படங்களில் பிரதம பாகங்களில் நடித்து வருகிறார்.

இவரது சிஷ்யைகளில் பலர் இன்றும் பிரபல நடனமணிகளாக விளங்குகிறார்கள். சுமார் 15 வருஷங்களுக்கு முன் 5 வயதாக இருந்த பேபி கமலாவையும் ஆனந்தி ராதா இருவரையும் நல்ல முறையில் நாட்டியம் கற்பித்து, தென்னிந்தியாவிலும் வட இந்தியாவிலும் எல்லோரும் ஆச்சரியப்படும் படி பரத நாட்டியம் ஆடச்செய்தார். பிறகு, அப்போது அதே வயதாக இருந்த வைஜயந்தி மாலாவிற்கும் சிறந்த முறையில் நாட்டியம் கற்பித்து ரஸிகர்கள் மெச்சும்படி ஆடச்செய்தார். இவரது சிஷ்யைகளில் முக்கியமான மற்றவர்கள் ஹேமமாலினி, ஹேமா, விஜயா, உஷாராஜ், சுசீலா மற்றும் இன்று திரையுலகில் தனது நடனத்தால் அனைவரையும் சொக்க வைக்கும் நாட்டிய நட்சத்திரம் குமாரி ஈ. வி. சரோஜா முதலியவர்கள் ஆவார்கள்.

திரைப் படங்களில் ஒவ்வொரு படத்திலும் பல நடனங்கள் இருக்கின்றன. ஆனால் அவை அனைத்தும் மெச்சும்படியாகவும், நினைவில் நிறுத்தும் படியாகவும் அமைவதில்லை. ஆனால் வழுவூர் ராமையா பிள்ளை டைரெக்ட் செய்த நடனங்கள் சிறப்பாக இருப்பதுடன் பல படங்களுக்கு வெற்றியை அளித்திருக்கின்றன. சினிமாகொட்டகையிலேயே 'அப்ளாஸ்' பெறக்கூடிய அளவிற்கு உன்னத முறையில் அமைந்துள்ளன. சமீபத்தில் வெளிவந்த "மாலையிட்ட மங்கை", "திருமணம்" முதலிய படங்களில் நடனத்தைப் போற்றாதவர் எவருமேயில்லை. பழைய படங்களில் "கண்ணகி" "அசோக்குமார்" "நாம் இருவர்" போன்றவைகளில் இவரது நடனஅமைப்பும் பிரமாதமாக இருந்தது.

நமது நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பு, அமர கவி பாரதியார் பாடல்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்த காலத்தில், தைரியமாக அவற்றிற்கு புது வர்ண மெட்டுகளும், ஆட்டமும் அமைத்து, பேபி கமலா, ஆனந்தி, ராதா இவர்களை

மேடைகளில் ஆடச் செய்தார். 1945—46ல் இவர் வர்ண மெட்டு அமைத்து நடனம் கற்பித்த "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே" "வெற்றி யெட்டு திக்கு மெட்டக் கொட்டு முரசே" முதலிய பாடல்கள் திரைப் படத்தில் பேபி கமலா ஆடி பிரபலமாகி, சுதந்திரம் கிடைத்த பிறகு எவ்வளவு பிரபல மாயின என்பது நாம் அறிந்த விஷய மாகும்.

ராமையா பிள்ளை மிகுந்த ஈஸ்வர பக்தியும், தர்ம சிந்தையும், உள்ளவர். அவரிடம் பணக்காரர்கள் மட்டுமல்ல, ஏழை எளியோரும் நாட்டியம் கற்றுக் கொண்டிருக்கின்றனர். மிக்க ஏழ்மையானவர்களுக்கு இலவசமாகவும் பரத நாட்டியம் கற்பிக்கிறார். இப்படி இவரிடம் நாட்டியம் பயின்று எவ்வளவோ பெண்கள் இன்று திரைப் படங்களில் "குருப் டான்ஸி லிருந்து" கதா நாயகிகள் வரை பிரபலமாகி உன்னத நிலையில் இருக்கிறார்கள்.

1948ல் சென்னை காங்கிரஸ் கமிட்டியார் நடத்திய பொருட்காட்சி கலை விழாவில் ரஸிகப் பொது மக்கள் ஒன்று சேர்ந்து டாக்டர் சுப்பராயன் அவர்கள் தலைமையில், சென்னை மாகாண தலைமை நீதிபதி பி. வி. ராஜமன்னர் அவர்களைக் கொண்டு ராமையா பிள்ளை அவர்களுக்கு "நாட்டிய கலா கேசரி" என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தார்கள். இது பரத நாட்டியக் கலைக்கே செய்த பெருங் கௌரவ மாகும்.

இங்ஙனம் பரதநாட்டியக் கலையின் புணருத்தாரணத்திற்கு பெரும் முயற்சிகளும், தியாகங்களும் செய்து வரும் ராமையா பிள்ளை அவர்களுக்கு நீண்ட ஆயுளையும், நல்ல ஆரோக்கியத்தையும், சகல சௌபாக்கியங்களையும் அளித்து, பரதக் கலை மறு மலர்ச்சிக்கு அருள் புரிய எல்லாம் வல்ல ஸ்ரீ ஞானசபேசரைப் பிரார்த்திப்போமாக.

அச்சடிப்பதற்கும் இதர உபயோகங்களுக்கும் ஏற்ற எல்லாவிதமான அட்டைகள், காலிகோ, நியூஸ் பிரின்ட், ஆர்ட் பேப்பர், கிராப்ட் பேப்பர் முதலியவைகள் எம்மிடம் எப்போதும் கிடைக்கும்.

உங்கள் தேவைக்கு உடனே எழுதுங்கள்

★

பி. எஸ். நஞ்சப்ப செட்டி & சன்ஸ்

2/34, தங்கசாலை வீதி, சென்னை - 3.

டெலிபோன்: 55000

“ஸான்டாலின் மணம் எப்படி
"GOKUL"
SANTOL
TOILET POWDER
GOKUL
SANDAL
TOILET POWDER



ராஜேஸ்வரி பில்ம்ஸின் கன்னி முயற்சியான
"சுமங்கலி"யில் ஈ. வி. சரோஜா.

முன்னேற்றப் பாதையில் முதல் அடி..

சிறு குழந்தை நடந்து பழகும்பொழுது எடுத்து வைக்கும் எழிலான முதல் அடி பெற்ற மனதிற்குப் பெரும் மகிழ்வு ஊட்டுவதாகும்.

குழந்தைக்கு அது ஒரு அற்புத அனுபவம். தீரம் மிகுந்த வாழ்விற்கு முதற்படி அது குழந்தை வேகமாக, வலிவும் வனப்பும் மிகுந்த வனாக வளர அவனுக்கு ஆல்விடோன் கொடுங்கள் எல்லா - வைட்டமின்களும் கலந்த உணவு அது. இந்தியாவின் பிரத்யேகமான, ருசியும் சத்தும் மிகுந்த பானம்.

குழந்தைக்கு பால் புகட்டும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், பாலுடன் 2 தேக்கரண்டி ஆல்விடோன் கலந்து கொடுங்கள். ஆனந்தமாகப் பருகுவான் அவன். ஆல்விடோன் பெரியவர்களுக்கும் நல்லது!

ஆல்விடோன்

இந்தியாவின் அபிமான உணவு பானம்—
வேண்டுமென்று கேளுங்கள்

தயாரிப்பவர்கள்:

ஆல்விடோன் லாபாரடரீஸ், மதராஸ்-16.

CHARI

ஏ. எல். எஸ். வெளியீடான "சபாஷ் மீனா"வைப் பார்த்து விட்டுப் பிறகு இவர் நடிப்பைப் பற்றிக் கேளுங்கள்; நன்றாகக் கேளுங்கள். — பி. சரோஜா தேவி

வி. பிரகதீஸ்வரி (குடந்தை.)

ஒரு நட்சத்திரம் படத்தில் கதாநாயகனுடன், காதல் ஸீனில் ஆலிங்கனம் செய்வதைப் பார்த்தால் அந்த நட்சத்திரத்தின் கணவராக இருப்பவருக்கு என்ன தோன்றும்?

'மகா பொறுமைசாலி'களான உணர்ச்சியற்ற கட்டைகள்தான் இந்தப் பதவியில் ஒட்டி கொண்டிருப்பார்கள்.

ஞானமுத்து, (தூத்துக்குடி.)

ஒரு சில நடிகைகள், கல்யாணம் செய்து கொள்ளாமலேயே குழந்தைகளுக்குத் தாயாகி விடுகிறார்களே, அதன் மூலாதாரம் என்ன?

மூலாதாரமாவது மண்ணாங்கட்டியாவது! ரிஷிமூலம், நதிமூலம் என்றுள்ள பழமொழியுடன் சினிமா உலக மூலம் என்பதையும் சேர்த்துக் கொண்டு விடுங்கள். உமது இந்த ஆராய்ச்சிக்கு முற்றுப் புள்ளி வைத்துவிடும் மிஸ்டர் ஞானமுத்து!

என். டி. வடிவேலு (பொள்ளாச்சி)

டைரெக்டர் ஸ்ரீராமுலு நாயுடு ஏன் சும்மா இருக்கிறார்?

சும்மா இருக்கிறாராவது! "மரகத"த்தைப் படமாக்க முனைந்து விட்டாரே அவர்!

ஆர். மருதப்பன் (சென்னை-3.)

மாடி லட்சுமி இனி ...?

மலிவுப் படக் கதாநாயகியாக மாறவேண்டியதுதான்! "நல்ல இடத்து சம்பந்தம்" ஏற்பட்டு விட்டதே!

எம். ஜி. ராமகிருஷ்ணன் (சென்னை-24)

தமிழ்ப் பட உலகில் மிகப் பெரிய நடிகர் யார்?

முன்பு குஞ்சிதபாதம் பிள்ளை, இப்போது கருப்பையாவேதான்!

சு. குருசாமி (தஞ்சை)

வயதாகிவிட்ட ஒரு நட்சத்திரம் யௌவனத்தைப் பற்றியே மறந்துவிட வேண்டியதுதானா?

யார் மறக்கச் சொன்னது? தன் யௌவனப் பருவத்தில் தான் காதலியாக நடித்த பாகங்களை நினைத்துப் பார்த்து அவர் சந்தோஷப் பட்டுக் கொள்ளலாமே.

சிட்டிபாபு (சூளைமேடு)

தமிழ் நாட்டில் கார்ட்டூன் படங்கள் தயாரிக்கப்படுவதில்லையே. ஏன்?

பல வருஷங்களுக்கு முன்பு சேலம் மாடர்ன் தியேட்டர்ஸாரும் சில ஆண்டுகளுக்கு முன்பு ஜெமினியும் இந்த முயற்சியில் இறங்கி துண்டுப் படங்கள் வெளியிட்டன. எடுத்துக் கொள்ளும் சிரமத்திற்குப் போதுமான ஆதரவும், ஆதாயமும் இல்லை என நினைக்கிறேன்.

வி. பாக்கியம் (சென்னை-17)

தமிழ் நாட்டு சினிமா சங்கீதத்திற்கும் வடநாட்டு சினிமா சங்கீதத்திற்கும என்ன வித்தியாசம்?

வடநாட்டு சங்கீத டைரெக்டர்களில் சிலர் ஹாலிவுட் சங்கீதத்தை காப்பி அடிக்கின்றனர். இங்குள்ள சில சங்கீத டைரெக்டர்கள் ஹாலிவுட்டைக் காப்பி அடிப்பதில்லை! 'அவ்வளவு தூரம் போவானேன்?' என்று வட இந்தியாவையே பின்பற்றி வருகிறார்கள்.

துடிதுடிப்பான நடிப்பும், வெடிக்கும் பேச்சும் மனோரமாவுக்கு பட உலகில் ஒரு நிரந்தர ஸ்தானத்தைத் தேடிக் கொடுத்திருக்கின்றன.

எம். ஆர். புருஷோத்தம் (சென்னை-7)

ஒரு படத்தின் தோல்விக்கு, பொதுஜனம், டைரெக்டர், படாதிபதி இவர்களில் யார் காரணம்?

'தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்ற பிடிவாத குணம் படைத்த படாதிபதி; நல்ல நட்சத்திரங்களையும் — சுமுகமான படாதிபதியையும் சரியானபடி பயன்படுத்திக்கொள்ளத் தவறும் டைரெக்டர் இவர்கள்தான் காரணம்; சரியானபடி விளம்பரம் செய்யாத காரணத்தினால் பொதுஜன ஆதரவை இழந்த நல்ல படங்களும் உண்டு.

எஸ். லலிதா (லால்குடி)

பிரபல இந்தி நடிகையான சாந்தா ஆப்தே இறந்துவிட்டதாகச் சொல்லுகிறார்களே, உண்மையா?

தவறு. திரைப்பட உலகிலிருந்து மறைந்திருந்த அவர் நாடகங்களில் நடித்து வருகிறார். தற்போது ஒன்றிரண்டு படங்களிலும் நடிக்க ஒப்பந்தம் ஆகியுள்ளார்.

கே. ராமன் (திருச்சி)

இந்தி நடிகர் டேவிட்டின் உண்மைப் பெயர் அதுவேதானா?

இல்லை; டேவிட் அப்ரஹாம் என்ற அவரது முழுப் பெயரின் சுருக்கம்தான் டேவிட்.

சி. பத்ரிநாதன் (செஞ்சி)

இந்திய சினிமா சரித்திரத்திலேயே "வஞ்சிக் கோட்டை" யில் இடம் பெற்ற வைஜயந்தி குளிக்கும் காட்சி தான் அதிகமான ஆட்சேபணைக்கும் வெறுப்புக்கும் உள்ளான படம் என எண்ணுகிறேன்.

தவறு; கிதார் ஷர்மா என்பவர் தயாரித்த "சித்ரலேகா"வில் இடம் பெற்ற நடிகை மேதாப் குளிக்கும் காட்சிக்குத்தான் 'அந்தப் பெருமை' உரித்தானது.

ஒய். சூரிபாபு (அனகபுத்தூர்)

பள்ளி மாணவர்களுக்கு வருஷம் ஒரு முறை வைத்தியப் பரிசோதனை நடத்துவது போல சினிமாத் தொழிலிலுள்ளவர்களுக்கும் நடத்தினல் என்ன?

'சினிமாத்தொழிலை மூடிவிடுங்கள்' என நீங்கள் மறைமுகமாகச் சொல்லுவதாகவே நான் நினைக்கிறேன்.

என். கே. மூர்த்தி (கரூர்)

சென்னையிலுள்ள ஸ்டுடியோக்களில் சிறந்தது ஜெமினிதான் என்று நான் கூறுகிறேன்.

உமது கூற்று தவறு; நீர் சொல்வது உண்மையாயிருந்தது பல வருஷங்களுக்கு முன்பு. விஜயாவுடன் இணைந்துள்ள வாஹினி சென்னையிலேயே சிறந்தது என்பது மட்டுமல்ல; ஆசியாவிலேயே சிறந்தது என்பதைத் தெரிந்துகொள்ளும். ஜெமினிக்குஇப்போதுள்ளபெருமை அதிலுள்ளது போன்ற கலர் ரஸாயன சாலை இந்தியாவிலேயே சிறந்தது என்பதுதான்.

என். கே. பட்டு (பட்டுக்கோட்டை)

பண்டரிபாயின் தங்கை மைனவதி எந்த ஜாதியைச் சேர்ந்தவர்?

அவர் தமக்கை பண்டரிபாய் என்ன ஜாதியோ அந்த ஜாதியைச் சேர்ந்தவர்.

ஸ்தாபிதம் 1920

உலகமெங்கும் புகழ் பெற்றது பல எக்ஸிபிஷன்களில் மெடல்கள் பரிசு பெற்றது.

P. V. RAJAN'S SUPERIOR MADRAS SNUFF

தந்தி: நஸ்யம் மதருஸ்

நெ. 1 எக்ஸ்ட்ரு ஸ்பெஷல் பட்டணம் பொடி ஒரு தோலா டின்களிலும் கிடைக்கும்.

பி. வி. ராஜன் & கம்பெனி

உயர்ந்த பட்டணம் பொடி

& R. S. சுகந்த மூக்குத்தூள் பாக்டரி

அரக்கோணம் & மதருஸ்

(மற்ற பொடி தினுசுகளுக்கும், விவரங்களுக்கும் எழுதவும்.)

கிருஷ்ணு பிக்சர்ஸின் "மாங்கல்ய பாக்கியம்" அவர்களது துரிதத் தயாரிப்பு என்றாலும், படத்தில் ராகினியின் நடிப்பிலும் ஆட்டத்திலும் ஒன்றும் குறை இருக்காது.

நீலக் கவர்

டக்......டக்......டக் என்ற சப்தம் கேட்டுக் கொண்டே இருந்தது. மைதிலியின் இதயமும் அந்த சப்தத்திற்கேற்ப தாளம் போட்டுக் கொண்டே இருந்தது. அந்தக் கவர்—அவர் அனுப்பும் நீலக் கவர் சப்தம் அளிக்கும் போஸ்டாபீஸ் முத்திரையில் அடிபட்டு தன்னிடம் வந்து சேருமா? அல்லது நேற்றைப் போல் இன்றைக்கும் ஏமாற்றம்தானா?

சற்று நேரத்திற்குப் பின், அவள் தெருவுக்கு வரும் போஸ்ட்மேன் உதட்டைப் பிதுக்கிக் கைகளை 'இல்லை' என்பதற்கு அடையாளமாக

விரித்தான். 'அவரு'க்கு என்ன நேர்ந்துவிட்டது? பொங்கும் துயரை அடக்கிக்கொண்டு வீட்டிற்கு வந்தாள்.

"மைதிலி இன்றைக்கு உன்னைப் பெண் பார்க்க வருகிறார்கள்" என்று சொல்லிக்கொண்டே அறைக்குள் நுழைந்த மகாதேவன், கலங்கிய கண்களோடு நிற்கும் மகளைக் கண்டார். "என்னம்மா" என்றார் பதட்டத்தோடு. "ஒன்றுமில்லை அப்பா. தலைவலி." என்று சமாளிக்க முயன்றாள் மைதிலி. பிறகு, "காலேஜ் படிப்பு முடியட்டுமே" என்றாள் ஈன சுவரத்தில். "பெண் பார்க்க வந்தால் உடனே கல்யாணம்

நடந்துவிட்டதா என்ன? எல்லாம் ஒத்துவரட்டும், பேச்சை எடுக்கும் போதே ஏன் முட்டுக்கட்டை போடுகிறாயாம்" என்றார் அதட்டலாகவே மகாதேவன்.

தந்தை போன பின் மேஜை டிராயரிலிருந்து அந்த நீலக் கவரை எடுத்தாள் மைதிலி. உள்ளே காகிதத்தைக் கிழித்துப் போட்டிருந்தாள் என்றாலும் ஒவ்வொரு வரியும் மனதில் பதிந்திருந்தது. இப்பொழுது மணக்கண்முன் வந்து நடனமாடியது; உடல் புல்லரித்தது; அவள் உள்ளம் துள்ளியது.

ஸி. ஆர். ராஜம்மா

மைதிலியை பெண் பார்க்க வந்தார்கள். ராமச்சந்திரன்பட்டாதாரி; பதவி வகிப்பவன். மைதிலி காலேஜ் மாணவியானாலும் குடும்பப் பண்பாடோடு தந்தையால் வளர்க்கப்பட்டவள். சற்று நேரத்துக்குப் பின் ராமச்சந்திரன் மகாதேவனிடம் கூறினன். "நாங்கள் வயது வந்தவர்கள். வாழ்க்கையி லேற்படும் கஷ்ட நஷ்டங்களைப் புரிந்துகொள்ளும் வயதாகிவிட்டது. மைதிலியிடம் பேசலாம் என்று நினைக்கிறேன். உங்கள் எதிரிலேயேதான்" என்றான் அவன். மகாதேவனுக்கு இது பிடிக்கவில்லை. ஆனாலும் சம்மதித்தார். மைதிலியின் முகத்திலோ கோபம் கொந்தளித்தது. "நீங்கள் பி. ஏ. படிக்கிறீர்களாக்கும்" என்றான் ராமச்சந்திரன் மைதிலியை நோக்கி.

"ஆமாம்."

மேற்கொண்டும் படிக்க உத்தேசம் உண்டா?

"நான் இன்னும் முடிவு செய்யவில்லை. என் தந்தை செய்யும் முடிவைப் பொறுத்தது அது."

"கல்யாண விஷயத்திலும்கூட அப்படித்தானே?" "ஆமாம்" என்றாள் மிடுக்காக மைதிலி.

"வேறு உனக்கு சொந்தமான அபிப்பிராயங்கள் ஏதாவது இருந்தால் சொல்லலாம். எனக்கு உன்னைப் பிடித்துவிட்டது. உனக்கும் அப்படியே என்ற என்னுடைய எண்ணம் தவருக இருக்காது என நம்புகிறேன். வாழ்க்கையில் ஒன்று சேர நேர்ந்தால் எந்த ஒரு விஷயமும் குறுக்கிட்டு கசப்பை உண்டாக்கக்கூடாது என்பது என்னுடைய அபிலாஷை" என்றான் அவன்.

மைதிலி சிறிது நேரம் தயங்கினாள். வாயைத் திறந்து திறந்து மூடினாள். எச்சிலை விழுங்கினாளா? வாயில் வந்துவிட்ட பதிலை சப்த ஒலி கொடுக்காமல் இருக்க விழுங்கினாளா? அது அவளுக்கே தெரியாது. பிறகு "இந்த வருஷப் பரீட்சையை முடித்துக்கொண்டு கல்யாணத்தைப் பற்றி யோசிக்கலாம் என்று இருக்கிறேன்" என்றாள்.

தந்தையின் கண்கள் தன்னை உறுத்து நோக்குவதை மனக்கண் மனதுக்கு அறிவுறுத்தியது. "சரியான யோசனைதான். நான் அதை வரவேற்கிறேன்" என்று சொல்லிவிட்டான் ராமச்சந்திரன். பின் பொதுப்படையாகக் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டுப் போய்விட்டான்.

மகளிடம் வந்து ஆத்திரப்பட்டார் மகாதேவன். "நல்ல வரன். உனக்காக வேண்டி அடுத்த வருஷம் வரை காத்திருப்பானா!" என்றார். மைதிலி ஒன்றும்பேசவில்லை. அவள் மனநிலையே கூட முன்போல இல்லை இப்பொழுது. ஒரு பெண்ணிடம் பேசக் கிடைத்துவிட்டதே என்று கக்கே பிக்கே என்று சம்பந்தமில்லாமல் அவன் ஒன்றும் பேசிக்கொண்டிருக்கவில்லை. சர்ச்சை செய்யவில்லை. மணி மணியாக இரண்டு மூன்று வார்த்தைகளைக் கேட்டு அவளுடைய எதிர்காலத் திட்டத்துக்கு மதிப்புக் கொடுத்தான். அவள் மட்டும் தன் உள்ளக்கிடக்கையை ஒளிக்காமல் சொல்லியிருந்தால்...

மூன்று நாட்களுக்குப் பின் "மைதிலி" என்று மகிழ்ச்சியோடு கூப்பிட்டுக் கொண்டே மகளின் அறைக்கு வந்தார் மகாதேவன். ராமச்சந்திரன் கடிதம் எழுதிவிட்டானம்மா; உன் படிப்பு முடியும் வரை காத்திருந்து கல்யாணம் செய்து கொள்கிருனம் உன்னை" என்றார் அவர். மைதிலி மகிழ்ச்சி அடைவதற்குப் பதில் மனம் புழுங்கினாள் "ஐயோ, எனக்காக, எதற்காக, அவர் காத்திருக்க வேண்டும். மணந்து கொள்ளக் கூடாதா வேறு யாரையாவது" என்று வாய்விட்டே கதற வேண்டும் போல இருந்தது அவளுக்கு.

அப்புறமும் அவள் அந்த நீலக் கவரை எதிர்பார்க்கும் வழக்கம் நிற்கவில்லை. 'இன்று வராதா, நாளை வரலாமோ?' என்றே கழித்தாள் நாட்களை. நீல நிறம் என்றால் உயிர் அவருக்கு. நீலவானத்தைக் கண்டு குழந்தைபோல் ஆர்ப்பரிப்பான். நீல நிற உடையில் அவள் காலேஜுக்குப் போய்விட்டாலோ கேட்கவே வேண்டாம். கடிதங்களைக்கூட நீல உறையில் இட்டா அனுப்ப வேண்டும்! நீலமாக எதைக் கண்டாலும் அவளுக்கு அவன் நினைவு வந்து கௌவிக் கொள்ளும்.

மைதிலி குறிப்பிட்ட கெடு முடிந்துவிட்டது. பரீட்சை பாஸாகி மைதிலி பி. ஏ. ஆனாள். மகாதேவன் மும்முரமாக கல்யாணத்திற்காக வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்தார். பெற்ற தாய் இல்லாவிட்டாலும் சுற்றத்தார்களுக்குக் குறைவொன்றும் இல்லை மைதிலிக்கு. வந்து கூடிவிட்டார்கள். ஒவ்வொருவர் ஒவ்வொருவிதமான புத்திமதிகளைக் கூறினார்கள். மைதிலி எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டாள். மனம் மட்டும் எங்கேயோ இருந்தது.

ராமச்சந்திரனுக்கு பெருமை தாளவில்லை. பட்டதாரியான மனைவி வந்துவிட்டாள். ஆபீஸ் வேலைகளில் உதவி செய்வாள். யோசனை சொல்வாள். குடும்பப் பாங்கு தெரிந்தவளாக இருப்பதால் கிரகலட்சுமி போல் தோன்றுகிறாள். வெளியே போகும்போது அவள் வழியனுப்பும் அந்தப் புன்னகையிலேயே ஆயிரம் வேலைகளைச் செய்துவிடலாம். சாயங்காலம் தன்னை எதிர்பார்த்து நிற்கும் அந்த அன்புப் பார்வைக்காக ஓடோடி வருவான்.

ஏதோ எண்ணி எண்ணி ஏங்கும் மகள் மணம் செய்துகொண்ட பின் மகிழ்ச்சியுடன் வாழ்வாளா என்று எண்ணிய மகாதேவன் மகிழ்ச்சிக் கடலாடினார். கல்யாணத்தையே தன்னுடைய சொந்த கிராமத்தில்

டைரெக்டர் ஏ. கே. வேலன் நடிகை எம். என். ராஜம், மனோரமா, நடராஜன் மூவருக்கும் குறிப்பிட்ட காட்சி பற்றி விளக்குகிறார். இடுப்பில் கை வைத்திருப்பவர் உதவி டைரெக்டர் ராஜரத்தினம்—"பிறந்த நாளி" ல்.

வைத்து நடத்தியவர். நகரத்து வீட்டை வாடகைக்கு விட்டு விட்டு ஊர் சுற்றிப் பார்க்கக் கிளம்பிவிட்டார். 'பேத்தியோ பேரனோ பிறக்கும் போது மறுபடியும் வந்து சேருகிறேன்' என்றார் போகும்போது.

தினக் காலண்டரில் கிழிக்க வேண்டிய தாள்கள் மிகக் கொஞ்சமேதான் பாக்கி யிருந்தன. மைதிலிக்குக் கல்யாணமாகி ஒன்பது மாதங்களுக்குமேல் ஓடிவிட்டது.

அன்று உடம்பு கொஞ்சம் அசதியாக இருக்கிறது என்று ஆபீஸ் போகாமல் வீட்டிலேயே இருந்த ராமச்சந்திரன் வழக்கம்போல் கட்டாக வந்த கடிதங்களை சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடியே பார்வையிட்டுக்கொண்டிருந்தான். 'அன்பார்ந்த மைதிலி' என்ற பெயருடன் ஒரு நீலக் கவரும்கூட இருந்தது.

ராமச்சந்திரன் திருப்பித் திருப்பிப் பார்த்தான். எந்த ஊரிலிருந்து வந்திருக்கிறது என்று தெரிந்து கொள்ள முடியாதபடி கறுப்பு முத்திரைகள் ஒன்றின்மேல் ஒன்றாக விழுந்திருந்தன. சிகப்பு இங்கினால் பல கிறுக்கல்கள்; போஸ்டாபீஸ்காரர்களின் கைங்கரியம் அவைகள். கடிதத்தைப் பிரித்தான் ராமச்சந்திரன். கண்கள் தாவித் தாவிப் பாய்ந்தன எழுத்துக்களில்.

"அன்புமிக்க மைதிலிக்கு கோபாலன் எழுதுவது: என் கடிதம் காணாமல் கலங்கி யிருப்பாய். என்ன செய்யலாம். எத்தனை நாளைக்கு என் நிலமையை மறைப்பது உன்னிடமிருந்து. நீ வருந்துவாயே என்று மறைத்தேன். இனிமேல் மறைக்க முடியாது.

"மைதிலி, என்னை மோசக்காரன் என்றுதான் எண்ணி யிருப்பாய்.

என்ன செய்யலாம் சொல். எலும் புருக்கி நோய் பலமாக என்னைப் பிடித்துக் கொண்டுவிட்டது; ஆஸ்பத்திரியில் சேர்ந்தேன். குணமாகி விடலாம் என்று டாக்டர்கள் தைரியம் கூறினர்கள். என் சொந்தக்காரர்கள் வீட்டில் முக்கிய காரியமாகத் தங்கியிருப்பதாகக் கூறி உனக்கு அன்புக் கடிதங்கள் எழுதினேன். ஆனல் இனிமேல் ஒளிக்க முடியாது. நிலைமை முற்றிவிட்டது.''

அசதியும், ஆத்திரமுமாகச் சேர்ந்து ராமச்சந்திரனின் பொறுமைக்கோட்டைத் தாண்டியது. விஷயம் என்ன என்று புரிந்துகொண்டு விட்ட பின் அதை சவிஸ்தாரமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமா என்ன? அதுவும் இந்தமாதிரியான விஷயங்களை.

'மைதிலி' என வீடே அதிரும்படியாக இரைந்தான் ராமச்சந்திரன். கணவனுக்காக பழச்சாறு பிழிந்து கொண்டிருந்த மைதிலி அந்தக் கண்ணடி சாமான்களுடன் அப்படியே அவன் முன் வந்து நின்ருள். கல்யாணமான பின் அந்தக் குரலில் கடுமையும், கடூரமும் இத்தனை இருக்குமென்று இப்பொழுதுதான் புரிந்துகொண்டாள் அவள். அச்சம் கௌவ அழகுப் பதுமையாக அசையாமல் நின்ருள் அவள். "கோபாலன் என்ற ஒருவன் உனக்கு எத்தனை கடிதங்கள் எழுதியிருக்கிருன். அவன் யார்?" என்ற சொல் இடிபோல் புறப்பட்டது. மைதிலி கலங்கவில்லை, கதறவில்லை; கண்ணடிப் பாத்திரத்தை மெல்லக் கீழே வைத்தாள்.

ராமச்சந்திரன் சடாரென எழுந்தான். அடுத்த நிமிஷம் அவனுடைய ஐந்து விரல்களும் மைதிலியின் கதுப்புக் கன்னத்தில் பதிந்தன. ''என்னை வஞ்சிக்கவா பார்க்கிருய்? துரோகி, போ வெளியே. அந்த கோபாலனைத் தேடிக்கொண்டு போ'' என்று அடிபட்ட சிங்கம்போல் கர்ஜித்துக்கொண்டே அவளைத் தன்

இரவில் தனியாக இருக்கும் போதுதான் பார்த்துக் கொள்ள வேண்டும்.

KASHMIRI SHASTRA

(Private)

காஷ்மீரி சாஸ்திரம்

(இரகசியமானது)

84 படங்களுடன்

விளம்பரத்தில் சரிவரக் கூற முடியாத விஷயங்கள் அடங்கியுள்ளன.

படிக்கிறவர் நன்ருகவும் தெளிவாகவும், விஷயங்களைப் புரிந்து கொள்வார்கள். பல விதமான 84 படங்கள் இருப்பதால் மார்க்கெட்டில் எம்முடைய காஷ்மீரி சாஸ்திரம்தான் மிக நன்ருயிருக்கிறது எனக் கூறப்படுகிறது.

விலை ரூ. 4-00

BED ROOM PHOTOS

படுக்கை அறைப் படங்கள்

உங்களுக்கு படுக்கை அறை காக்ஷிகளையும், அழகு, வேறு உற்சாக மளிக்கும் காரியங்களையும் தெரிந்து கொள்ள விருப்பமிருந்தால் இன்றே 25 படங்கள் கொண்ட ஒரு ஸெட்டுக்கு ரூ. 6-00 அனுப்பிப் பெற்றுக் கொள்ளுங்கள். 12 படங்கள் கொண்ட சாம்பிள் ஸெட் ரூ. 3-50. மணமானவர்கள் மட்டுமே எழுதவும்.

PARIS ART HOUSE

Durgiana (G. M.) Amritsar

னுடைய அறைக்கு வெளியே வராந்தாவில் தள்ளிவிட்டு வந்தான்.

அவன்செய்த அமளியில் நாற்காலிகள் உருண்டு, காகிதங்கள் நாலா பக்கமும் சிதறி, கண்ணடிகள் உடைந்து அறை அலங்கோலமாகி விட்டது. குறுக்கும் நெடுக்குமாக அங்கேயே சிறிது நேரம் நடந்ததில் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனைக் காணப்பட்டான். அடுத்த நிமிஷம் பாய்ந்து சென்ருன் மைதிலியின் அறைக்கு. பெட்டிகளும், பீரோவும் இருவருக்கும் வேறு வேருக இருந்தாலும் சாவிகள் ஒரே கொத்தில் தான் சரணடைந்திருந்தன.

மேஜை டிராயரைத் திறந்து கோழி கிளறுவதுபோல் எல்லாவற்றையும் கிளறிக் கிளறிப் போட்டான். பீரோவைத் திறந்து வெறி கொண்டவன்போல் எல்லாவற்றையும் வீசி வீசி அடித்தான். அடுத்தபடியாக பெட்டியின் பக்கம் தாவிஞன். பட்டுப் புடவைகள் பளபளப்பான நகைகள் எல்லாம் படாத பாடுபட்டன அவன் கைகளில். கடைசியில் நீளமான ஒரு கவர். உள்ளே என்னமோ இருந்தது. பெரிய துப்புக் கிடைத்துவிட்ட சந்தோஷத்தில் பிரித்துப் பார்த்தான். பத்திரிகையில் வெளியான செய்தித் துண்டு அது. சுமார் ஐந்து மாதங்களுக்கு முன் வெளியான செய்தி என்று தேதியைப் பார்த்துப் புரிந்து கொண்டான்.

"சர்வதேச சித்திரக் கண்காட்சிப் போட்டியில் கோபாலனின் சித்திரம் முதல் பரிசைப் பெற்றது. ஆனல் அந்த மகிழ்ச்சிச் செய்தியைத் தெரிந்து கொள்ள அவர் இந்த உலகில் இல்லே. பிறவி ஓவியர் இவர். காலேஜில் படிக்கும்போதே எலும்புருக்கி நோய் இவரைப் பற்றிக்கொண்டது. ஆஸ்பத்திரியில் சேர்ந்து சிகிச்சை பெற்ருர். இருந்தும் இறந்து போனர்."

இறந்த செய்தி எதிரியையே அனுதாபமடையச் செய்யும்போது ராமச்சந்திரன் எம்மாத்திரம். பத்திரிகைத் துண்டு நழுவிக் கீழே விழுந்தது. அழகான சித்திரங்களும் சில இருந்தன. நீலக் கவர்கள் நான்கு இருந்தன. ஆனல் அவைகளில் கடிதமில்லே. தலே குனிந்தபடி தன் அறைக்கு வந்தான். தேடிப் பொறுக்கி கசங்கிக் கிடந்த அந்த நீலக் கவரை எடுத்து மீதி வரிகளேயும் படித்தான்.

"நிலேமை முற்றிவிட்டது. முன் கடிதங்களில் நீ மனே தைரியமாக இருக்கவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி எழுதியிருந்தேன். இந்தக் கடிதத்தில் எழுதுகிறேன். நீ என்னே மறந்துவிடவேண்டும். என் ஆத்ம சாந்திக்காக நீ செய்யும் ஒரே காரியம் இருக்கிறது. உனக்கு

ருசிமிக்க
பல தினுசு ஊறுகாய்கள், சாம்பார் பௌடர்,
ரசம் பௌடர்
முதலியன.

Manufacturers
SRI VENKATA LODGE CONDIMENTS,
KUMBAKONAM. . . . S. INDIA

இலங்கேஸ்வரனின் (மனோகர்) உள்ளங் கலங்கக் காரணம் அருகிலிருக்கும் நங்கை ஜி. சகுந்தலா) கூறிய விஷயமாக இருக்குமோ? — "இலங்கேஸ்வர"னில்

உகந்த கணவனைத் தேர்ந்தெடு; அவர் எப்பொழுதுமே புண்படாத விதத்தில் நடந்துகொள். வாழ்க்கைப் பாதையில் எத்தனையோ சம்பவங்கள் நடக்கின்றன. தான் குறிப்பிட்ட இடத்துக்குச் செல்பவன் மைல் கல்லைக் கடப்பது போல் கடந்து போக வேண்டும். திரும்பி வருவது முட்டாளின் செயல்.

அன்புள்ள கோபாலன்."

கடிதத்தைப் படித்து முடித்த ராமச்சந்திரன் கண்களில் நீர் துளித்தது. நீலக் கவரை வெகு நேரம் கவனித்த பின் கிட்டத்தட்ட ஒரு வருஷத்துக்குமுன் அது தபாலில் சேர்ந்திருக்கவேண்டும் என்று தெரிந்தது. மைதிலியின் காலேஜ் விலாசத்துக்கு வந்த அது, அங்கிருந்து வீட்டுக்கு அனுப்பப்பட்டு அப்புறம் கிராமத்தின்விலாசத்துக்குப் போய் அங்கிருந்துமறுபடியும் அவள்வசித்தநகரத்துக்கே வந்து டெட் லெட்டர் ஊழியர்களின் சுறுசுறுப்பால் இப்பொழுது இங்கே வந்திருக்கவேண்டும்.

"வாழ்க்கைப் பாதையில் முன்னேறுகிறவன் கஷ்டமென்ற கடந்து போன மைல் கல்லை நோக்கித் திரும்பக்கூடாதுதான். அது முட்டாளின் செயல்" என்று முணுமுணுத்தன அவன் உதடுகள்.

ராமச்சந்திரன் அன்பு சொட்ட மனைவியைத் தேடிச் சென்றபோது உரிமையோடு உள்ளே வந்திருந்த அவள் அமைதியாகச் சின்ன கம்பளிச் சொக்காய் ஒன்றைப் பின்னிக் கொண்டிருந்தாள்; "உன் வயிற்றிலிருக்கும் சிசு ஆணாக இருந்தால் கோபாலன் என்று பெயர் வைத்து விடலாம்" என்ற அவன் அதரங்களைப் பொத்திய மைதிலி, "பெண்ணாகப் பிறந்தால் நீலா என்று பெயர் வைத்துவிடலாம். பிள்ளையாக இருந்தாலோ நீலமேகன் என்று கூப்பிடலாம். சரிதானே" என்றாள் களங்கமற்ற குரலில்.

நேயர் விமர்சனம்

[நேயர்கள் அனுப்பும் பட விமர்சனங்களிலிருந்து முக்கியமான பகுதிகள் இங்கு வெளியிடப்படுகின்றன.]

"நாடோடி மன்னன்"

கண்ணைக் கவரும் காட்சி ஜோடனைகள், வண்ணமிகு வர்ண ஜால விசித்திரங்கள், செவிக்கினிய கீதங்கள், சுவையான கதையமைப்பு சொற்செட்டமைந்த வசனம், ரம்ய மான படப்பிடிப்பு, துடிப்புள்ள நல்ல நடிப்பு, மயிர்க்கூச்செறியும் சண்டைக் காட்சிகள் ஆகிய அனைத்தும் ஒருங்கே அமைந்த ஒப்பற்ற படம் "நாடோடி மன்னன்" என்பதற்கு தற்போது தியேட்டர்களில் வழிந்தோடும் ஜனத்திரளே தக்க சான்றாகும்!

த. மு. ராமன், சென்னை-5.

'மனோகரா' வுக்குப் பிறகு மக்கள் உள்ளத்திலே நிலைத்துப் பதியக் கூடியதும் — சிந்தனையைத் தட்டி எழுப்பக் கூடியதுமான ஒரு படம் இதுவரை வரவில்லை என்ற குறையை 'நாடோடி மன்னன்' நிவர்த்தி செய்து, தென்னகத் திரைப்பட உலகிற்கே பெருமையைத் தேடித்தந்து விட்டான். மேலை நாட்டுப் படங்களோடு போட்டியிடும் அளவில் பிரமாதமான காட்சி அமைப்புகளும், நடிப்பும், ஒளிப் பதிவும் பார்ப்போரைப் பரவச மடையச் செய்கின்றன. தென்னகப் பத்திரிகைகள் அனைத்தின் ஒரு முகப் பாராட்டுதலைப் பெற்றுவிட்ட "நாடோடி மன்னனை"ப்பற்றி இன்னும் வேறு என்னதான் கூற இருக்கிறது 'நாடோடி மன்னன்' கண்ணுக்கு விருந்தாக மட்டுமல்லாமல் - கருத்துக்கும் மாமருந்தாய் பவனி வருகிறான்! வாழ்க எம்ஜியார் தொண்டு!

சி. வி. மலையன், சென்னை-24.

சலனப்பட சரித்திரத்திலேயே ஒரு புதுவிதமான புரட்சியை உண்டு பண்ணிவிட்டனர் எம். ஜி ஆர். குழுவினர். "நாடோடி மன்னனை"ப் பார்த்ததும் அவர்கள் பட்ட கஷ்டங்கள் எத்தனை, அவர்கள் செலவழித்த பணம் எத்தனை அவர்கள் எடுத்துக் கொண்ட சிரமம் எத்தனை, எத்தனை என்பதை எண்ணும் போது வியப் பால் பேச முடியாமல் வாயடைத்துப் போகிறது. ஏ. வி. எம். ஜெமினி, வாஹினி போன்ற பெரிய ஸ்டூடியோ சொந்தக்காரர்கள் எடுக்கும் படங்களைப்போல் இருக்கிறது. ஆடை, அரங்க நிர்மாணம், படப்பிடிப்பு, மேக்கப், சிகை அலங்காரம், பாட்டு எல்லாமே அற்புத மாக அமைந்திருக்கின்றன.

பிற்பகுதியில் வரும் கலர் காட்சிகள் கண்ணுக்கு விருந்தாக இருக்கின்றன. இரண்டு எம். ஜி. ராமச்சந்திரன்கள் கைகுலுக்கும் கட்டமும் சரி, இரண்டு எம். ஜி. ஆர் ஒருவரை யொருவர் தழுவிக்கொள்ளும் காட்சியும் சரி, மேனாட்டவர்கள் அதிசயித்து மூக்கின்மேல் விரல் வைத்துக்கொள்ளும்படி தந்திரமாக படம் பிடித்துக் காட்டி இருக்கிறார் ஜி. கே. ராமு.

பி. நாதன், சென்னை-26.

கவிஞர் கண்ணதாஸனும், ரவீந்தரும் சேர்ந்து எழுதிய வசனங்கள் கருத்தாழம் கொண்டதாக இருக்கிறது. உதாரணம்

"இருளைப்போக்கும் விளக்கிற்கு தன் நிழலைப் போக்கிக்கொள்ளும் சக்தி கிடையாது." இதை மறக்க முடியாது.

பாடல்களை இயற்றிய கவிஞர்கள் பாராட்டுக் குரியவர்கள். ஏனெனில் 'தம்பி தூங்காதே' கையிங் காலுந்தானே மிச்சம், சம்மதமா, "கண்ணில் வந்து மின்னல் போல்" போன்ற பாடல்கள் மனதைவிட்டு அகலாமல் ஆழப் பதிந்திருக்கிறது. வெளிப் புறப் படப் பிடிப்புக்காக தேர்தெடுத்திருக்கும் இடம் அழகாக அமைந்திருக்கிறது. உயர இருந்து கொட்டும் நீர்வீழ்ச்சி ஓடும் ஆற்று வெள்ளம், சங்கிலித்தொடர்மலைகள் இவை எல்லாம் கண்ணுக்குக் குளுமையாக கலரில் காண்கிறோம். அளவில்லாத மகிழ்ச்சி. எம். ஜி. ஆரின் அடுத்த தயாரிப்பை ஆவலோடு எதிர்பார்க்கிறோம்.

ரங்கநாதன், பத்மநாபன். சென்னை.

நான் மன்னனுைல் ஜெண்டாக் கைதி இரும்பு முகமூடி மனிதன் போன்ற ஆங்கில படக்கதைகளிலிருந்து எடுத்துத் தொகுக்கப்பட்ட கதம்பம்தான் எம்.ஜியார் பிக்சர்ஸார் (கதை இலாகாவினர்) வெளியிட்டுள்ள நாடோடி மன்னன்-கதை பழையதிலும் பழையது. கொடுக்கப் பட்டிருக்கும் மெருகு தான் புதிது. புரட்சி நடிகர் எம்.ஜி ஆர். இரு வேடங்களில் தோன்றி திறம்பட நடித்திருக்கிறார். மதனுவாக வரும் பானுமதி அழகாக, அநாயாஸமாக, அற்புதமாக நடித்திருக்கிறார். இல்லை, பாத்திரமாகவே மாறிப்போயிருக்கிறார். அவர் பாடிய பாட்டுக்கள் 'சம்

நீங்கள் விரும்புவதை அடையுங்கள்

மாய மோதிரம்

இந்த மாய மோதிரத்தை அணிபவர் யாராயினும் சரி, அவர்கள் காதலில் நிச்சயம் வெற்றிபெறுவார்கள். எவ்வளவு கடின இதயம் படைத்தவரானாலும், அல்லது தொலை தூரத்தில் இருந்தாலும் அவனோ அல்லது அவளோ உங்களிடம் உடனே வருவார். உங்களிடம் கொண்டுள்ள வெறுப்பை அகற்றி அவனோ அல்லது அவளோ உங்களுக்கு பணிந்து நடப்பார்கள். நீங்கள் விரும்பிய சேவைகளைப் பெறலாம். நீங்கள் விரும்பும் ஆணையோ அல்லது பெண்ணையோ மணந்து அஷ்ட ஐசுவரியத்தில் உங்கள் குழந்தைகளுடன் குதூகலமாக வாழ்க்கையை நடத்தலாம். உங்கள் பரீட்சை, வியாஜ்யம், வியாபாரம், எல்லாத் துறைகளிலும் வெற்றி கிட்டும். உங்கள் பக்கம் அதிர்ஷ்டம் திரும்பி நீங்கள் பாக்கியசாலியாவீர்கள். நீங்கள் விரும்பிய தெல்லாம் அடைந்து வாழ்க்கையை சந்தோஷமாகக் கழிக்கலாம்.

ஒரு மோதிரம் விலை ரூ. 1-94. எக்ஸ்ட்ரா ஸ்பெஷல் ரூ. 3-94. இது அபூர்வ சக்தியுடைது. இது மிக்க புனிதமான தினத்தில் தயாரிக்கப்படுகிறது. திருப்தியில்லையேல் பணம் வாபஸ். ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள். அது உங்களைத் திருப்திப் படுத்தும்.

Principal, **BENGAL MESMERISM HOUSE**
(M. G.) JULLUNDUR CITY, (Pb.)

டி. ஜி. ஆர். பிக்சர்ஸின் "இவன் அவனேதா"னில் அம்பிகா.

மதமா' 'கையுங் காலுந்தானே மிச்சம்' போன்றவை இதயத்தில் ஆழப்பதிந்து விட்டன.

க்ரிடிக், கோடம்பாக்கம்.

பானுமதியின் உடல் பருத்து விட்டதே தவிர விஷமச் சிரிப்பும், காதல் போதை தரும் கடைக்கண் பார்வையும் அழியாமல் அப்படியே இருக்கிறது, மகிழ்ச்சி. நாடோடியுடன் தோளுக்குத் தோளாக சுக, துக்கங்களில் பங்கெடுத்துக் கொண்ட மதனவை, மன்னர் ஆட்சி கூடாது மக்கள் ஆட்சி வேண்டும் என்று கூக்குரலிட்டு, புரட்சிசெய்து சிறை சென்ற மதனவை டைரெக்டர் எம். ஜி. ஆர். ஈவிரக்கமில்லாமல் இடைவேளைக்குப் பிறகு காண முடியாமல் சாகடித்து விட்டார்.

'மதனவை' கணமுடியாத ரஸிகர்கள் பெருமூச்சு விட ஆரம்பித்தனர். மதன இல்லாமல் எப்படி மிகுதியைப் பொறுமையோடு உட்கார்ந்து பார்ப்பது?

''பாபன்'', சென்னை-24.

பிற்பகுதியில் காணமல் போன இளவரசியாக வருகிறுர் பி. சரோஜாதேவி. அக்கரைச் சீமைக்காரன் பெட்டியில் அடைத்து அனுப்புவானே குழந்தைகள் விளையாட பொம்மை, அதுதான் நினைவுக்கு வருகிறது. சரோஜாதேவி தமிழ் மொழியின் மேல் தனக்குள்ள கோபத்தைக் குறைத்துக் கொண்டு தமிழை வாழ விட வேண்டும்.

அவருக்கு அளிக்கப் பட்டிருக்கும் உடைகள் கவி காளிதாஸனின் காவியத்தில் காணும் சகுந்தலையை நினைவுக்குக் கொண்டு வருகிறது. கடைசியில் காட்டப்படும் வெள்ளக் க்காட்சிகள் ஒரே வெள்ளமாக இருக்கிறது. இப்படி கரைபுரண்டு ஓடும் வெள்ளக் காட்சிகளை வெட்டிக் குறைத்திருக்கலாம். கயிற்றுப் பாலத்தில் கதாநாயகனும், கதாநாயகியும் அதிகநேரம் தொங்குவது காட்டப் படுகிறது. இந்தக் காட்சியால் கதையும், ரஸிகர்களும் பொறுமை இழந்து (தூங்க) தொங்க நேரிடுகிறது. இதை டைரெக்டர் கவனித்து இருக்கலாம். முற்பகுதி ரஷியா விஞ்ஞானி அனுப்பிய ஸ்பூட்னிக் வேகத்தில் ஓடுகிறது. பிற்பகுதி ஹும்—ஸ்பூட்னிக் இளைப்பாறுகிறது.

பிற்பகுதியில் வரும் கலர்காட்சிகள் காண்போர் மனதை கவரும் வகையில் கவர்ச்சிகரமான முறையில் அற்புதமாகப் படமாக்கப் பட்டிருக்கிறது. கலர்க் காட்சியில் முதலிடம் பெறுகிறது. "கண்ணில் வந்து மின்னல்போல்" என்று கவிஞர் சுரதா இயற்றிய பாட்டு காதில் தேனைப் பாய்கிறது படப் பிடிப்பு. அதைவிட பிரமாதம்—காமிரா நிபுணர் ஜி. கே. ராமு பாராட்டப்பட வேண்டியவர் சொல்லப் போனல் எம். ஜி. ஆர். குழுவினர் ராமுவைப் பொன்னடை போற்றி கௌரவித்தால் வியப்பில்லை.

"நீதிபதி", சென்னை-26

''வாழவைத்த தெய்வ''த்தில் பி. சரோஜா தேவி.



மொராக் - ஸ்ரீனிவாஸ் பிலிம்ஸ்
பாண்டித் தேவன்
டைரக்ஷன்:
K. சுப்ரமண்யம் B.A.B.L.,



ராகினி, ராஜசுலோசனா, பி. எஸ். சரோஜா, டி. பி. முத்துலட்சுமி, டி. கே. பாலசந்தர், சந்திரபாபு, டி. கே. பகவதி, எம். ஜி. சக்ரபாணி ஆகப் பலர் நடிக்கும் இப்படத்தில் மயிர்க் கூச்செரியும் பல காட்சிகளுடன் கவர்ச்சிகரமான நடனங்களும் இடம் பெற்றுள்ளன.



அனுபவ நடிகையான லட்சுமிப்பிரபா இளம் நடிகை குசலகுமாரிக்குத் தோள் கொடுப்பது நியாயம்தானே!— கிருஷ்ண பிக்சர்ஸ் "மாங்கல்ய பாக்கிய"த்தில்.

வடநாட்டில்

தங்க விழா

"ஒரு படம் 'தங்கவிழா'க் கொண்டாடியது" என்ற செய்தி கேட்டு வருஷங்களாகி விட்டன. டைரெக்டர் சாந்தாராமின் சிருஷ்டியான "தோ ஆன் கேன் பாரா ஹாத்" என்ற படம் சமீபத்தில் தங்க விழா வாரம் கொண்டாடியது. இது இந்தியப்பட உலகம் பெருமைப்பட வேண்டிய செய்தியாகும்.

நீட்டாவாக மாறினர்

சாந்தாராம் தயாரித்துள்ள சில படங்களில் நடித்துள்ள நடிகை சந்திரகாந்தா தன் பெயரை நீட்டா என மாற்றிக்கொண்டிருக்கிறார்.

விபத்திலிருந்து தப்பினர்

பிரபல நட்சத்திர நடிகர் ராஜ்கபூர் சென்ற மாதம் ஒரு விபத்துக்கு உள்ளானர். தெய்வதீனமாக எந்தக் காயமும் இல்லாது அவர் தப்பினர். தமது அடுத்த தயாரிப்புக்கான கதை விஷயமாக ஆராய்ச்சி நடத்த புனநகருக்குப் போய்க் கொண்டிருந்தார் அவரது காரும் மற்றொரு வாகனமும் மோதிக் கொண்டதில் விபத்து நேரிட்டது. அவருடன்கூட இருந்த சங்கீத டைரெக்டர் ஜெய்கிஷன், பாட்டு எழுதும் ஷைலேந்த்ரா இருவரும் சிறு காயங்களுடன் தப்பினர்கள்.

பாட்டே இல்லாத படம்

"விஸிடிங் கார்ட்" என்ற பெயரால், ரமேஷ்ராய புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் துப்பறியும் படத்தில் மோனிகா ராய, ஜீத் பிரகாஷ் என்ற இரு புது முகஙகள் முக்கிய பாத்திரங்களேற்று நடிக்கிறார்கள். இந்தப் படத்தின வெளிப்புறக் காட்சிகள் சிலவற்றை சமீபத்தில் மலபார் ஹில்லிலுள்ள 'நேஷனல் பார்க்'கில் படமாக்கினர்கள். உபபாத்திரங்களில் பல புது முகங்கள் நடிப்பார்கள். எஸ்.ஆர் சக்ரவர்த்தி இசை அமைத்து வரும் இப்படத்தில் பாட்டுகளே கிடையாது.

நடிகர் சஜ்ஜன் யோசனை

சினிமாத் தொழிலைத் தேசீயமாக்க வேண்டும் என்று இந்திய அரசாங்கத்தைக் கோரும இயக்கம் ஒன்றை நடிகர் சஜ்ஜன் சுதந்திர தினத்தன்று ஆரம்பித்துள்ளார். "படத்தயாரிப்பையும், வினியோகத்தையும் அரசாங்கம் தன் சொந்தப் பொறுப்பில் ஏற்று நடத்த வேண்டும்" என்ற இவரது கோரிக்கைக்கு ஆதரவாக பம்பாய், மற்று

ஜெராட் ரேடியோ



மாடல் A-95
நிகர விலை ரூ. 250/-
தயாரிப்பவர்கள் :
ஜெராட் எலக்ட்ரானிக் இன்டஸ்ட்ரீஸ்
மதராஸ்-3.
கிடைக்குமிடம் :
ஜே-ஒ-போன கம்பெனி,
13, தங்கசாலை வீதி, சென்னை-3.

ஏவி. எம். தயாரிப்பான "பாப் பேட்டே"யில் ஷியாமா

முள்ள பிரபல நகரங்களிலும் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட ரசிகர்களின் கையெழுத்துகளுடன் தம் கோரிக்கையை ஜனாதிபதியிடம் அவர் சமர்ப்பிப்பார். சினிமாத்தொழிலை அரசாங்கம் மேற்கொள்ளுவதனால் கலை அழகும் கருத்தாழமும் உள்ள கதைகளைத் தகுந்த திறமைசாலிகளைக் கொண்டு தயாரிக்க முடியும் என்பதோடு, தற்போது தொழில் துறையில் உள்ள தில்லு முல்லுகளையும் தவிர்க்கமுடியும் என்பது அவர் அபிப்பிராயம்.

சீனாவில் இந்தியர் படம்

இந்திய சர்க்கார் பிலிம் டிவிஷனில் பிரதமத் தயாரிப்பாளராக இருந்த பவ்னானி சீனாவைப்பற்றிய வரலாற்றுப் படம் ஒன்றைத் தயாரிக்க சீனாவுக்குப் புறப்பட்டுப் போயிருக்கிறார். சீன சர்க்காரின் அழைப்பின் பேரில்தான் பவ்னானி சீனா சென்றிருக்கிறார். சீனாவில் படம் எடுக்க முதல் முதலாக அனுமதிக்கப்பட்ட அந்நிய நாட்டுக்காரர் இவர்தான்.

சினிமாஸ்கோப் படம்

பிரபல படத்தயாரிப்பாளர் நடிகர் டைரெக்டரான குருதத் முதல் முதலாக இந்தியாவில் சினிமாஸ்கோப் முறையில் தனது "காகஸ்கே பூல்" ('காகிதப் பூ') என்ற படத்தைத் தயாரித்து வருகிறார். ஒரு சினிமா டைரக்டரின் வாழ்க்கையை சுற்றிப் பின்னப்பட்ட இக்கதையில் குருதத், வஹிதா ரஹ்மான், சசிகலா, ஜானி வாக்கர் முதலியோர் நடிக்கிறார்கள். சினிமா டைரக்டரின் வாழ்க்கையும் தொழிலும் அவரது பணக்கார மனைவிக்குப் பிடிக்கவில்லை. அந்தத் தொழிலையே விட்டுவிட வேண்டுமென்று அவர்மனைவி விரும்புகிறாள். சினிமா டைரக்டர் படும் கஷ்டங்களையும் சமூகம் அவரை இழிவாகக் கருதுவதையும் பகைப் புலனாக வைத்து குருதத் இப்படத்தைத் தயாரிக்கிறார்.

பம்பாயில் பத்மினி

நடிகை பத்மினிக்கு, பம்பாய் பட உலகில் சந்தர்ப்பங்கள் அதிகமாகி வருகின்றன. தங்கள் படத்தில் நடிக்கும்படி பல இந்தி பட அதிபர்கள் பத்மினியை முற்றுகை போடுகிறார்கள். இப்போது ராஜ்கபூரின் சொந்தப் படத்திலும், அசோக்குமாரின் சொந்தப் படத்திலும் அவர் நடித்து வருகிறார். ஏற்கெனவே சிவாஜி புரொடக்ஷன்ஸ் எடுக்கும் இந்தி படத்தில் ("அமர்தீப்") நடித்து வருகிறார், இந்தப்படத்தில் மற்றும் வைஜயந்தி மாலா, ராகினி, தேவ்ஆனந்த், ஜானிவாக்கர் முதலியவர்கள் நடித்து வருகிறார்கள்.



"நீங்களும் சினிமா நக்ஷத்திரமாகலாம்"

என்று சொல்கிறார் அசோக்குமார்

போட்டி அறிவிக்கப்படுகிறது

"ஹாஸலேன்' ஸ்னோ"வைத் தயாரிப்பவர்களால் ஏற்படுத்தப்பட்ட "நீங்களும் சினிமா நக்ஷத்திரமாகலாம்" என்ற போட்டி பில்மாலேயாவின் சொந்தக்காரரான எஸ். முக்கர்ஜீ மற்றும் நார்கிஸ், சுனில் தத் இவர்களால் தேர்ந்தெடுக்கப்படும்.

> நீங்கள் சினிமா நக்ஷத்திரமாக விளங்க விரும்புகிறீர்களா?
> உங்களுக்கு இஷ்டமான பிரபல சினிமா நக்ஷத்திரங்களுடன் சினிமாவில் நடிக்க உங்களுக்கு விருப்பம் இருக்கிறதா?

உங்களுக்கு இது ஒரு அருமையான சந்தர்ப்பம்— இதை மேலும் படியுங்கள்

இதில் என்ன விசேஷம்

இந்திய சினிமா தொழிலில் நன்றாக நடிக்கக் கூடிய நக்ஷத்திரங்களுக்குத் தற்போது தேவை முக்கியமாக இருக்கிறது. எனவே புதிய நடிகர்களைக் கண்டு பிடிப்பதற்காக "ஹாஸலேன் ஸ்னோ" தயாரிப்பாளர்கள் "நீங்களும் சினிமா நக்ஷத்திரமாகலாம்" என்ற போட்டியை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இப்போட்டியை பெயர்போன சினிமா நக்ஷத்திரங்களான நார்கிஸ், சுனில்தத் மற்றும் பில்மாலேயா என்ற பெரிய பிலிம் கம்பெனியை ஆரம்பித்திருப்பவரான எஸ் முக்கர்ஜீ அவர்களும் தேர்ந்தெடுக்க அநுமதித்து இருக்கிறார்கள்.

இப்போட்டியில் 16 வயது முதல் 30 வயது வரை யாவரும் கலந்துகொள்ளலாம். இதில் கலந்துகொள்ள விரும்புவோர் தலைமுதல் தோள்வரை அல்லது தலை முதல் கால் வரையோ ஒரு போட்டோ எடுத்து அதன் பின்புறம் :-

1. பெயர் மற்றும் விலாசம்.
2. வயது
3. உயரம் மற்றும் எடை
4. எழுதப் படிக்கத் தெரிந்த பாஷைகள்
5. இவைகளை எழுதி அத்துடன் "ஹாஸலேன் ஸ்னோ"வின் காலி அட்டைப்பெட்டிகளில் இரண்டும் சேர்த்து வைக்க வேண்டும்.

பிறகு அதை ஒரு கவரில் வைத்து அதன்மேல் "YOU TOO CAN BE A STAR" COMPETITION — என்று எழுதி அதை நீங்கள் "ஹாஸலேன் ஸ்னோ" வாங்கிய கடைக்காரரிடம் கொடுத்தால் அவர் எங்களுக்கு அனுப்பி வைப்பார்.

நார்கிஸ், சுனில் தத் மற்றும் எஸ். முக்கர்ஜீ ஆகிய மூவரும் அவைகளைத் தேர்ந்தெடுப்பார்கள். அவர்களுடைய தீர்ப்பே முடிவானது. 4 சிறுவர்களும் 4 சிறுமிகளும் இதில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்கள் 8 பேர்களும் "ஹாஸலேன் ஸ்னோ" தயாரிப்பாளர்களின் விருந்தினர்களாக பம்பாய்க்கு அழைக்கப்படுவார்கள்.

பிறகு பம்பாய் பில்மாலேயா ஸ்டுடியோவில் ஒவ்வொருவருக்கும் சினிமாவில் நடிப்பதற்கான பரீக்ஷைகள் நடத்தப்படும். மூன்று தினங்கள் பம்பாயில் ஓய்வு. எல்லாம் இலவசமாக.

நடிப்பதற்கான பரீக்ஷை முடிந்தவுடன் ஒரு சிறுவனும் ஒரு சிறுமியும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவ்விருவர்களுக்கும் சினிமா உலகில் முக்கியமான எதிர்கால வாழ்வு காத்திருக்கும்.

> **ஞாபகமிருக்கட்டும்**
> நீங்களும் சினிமா நக்ஷத்திரமாவதற்கு இது ஒரு சிறந்த சந்தர்ப்பம்
> **இதை நழுவ விடாதீர்கள்**
> **உங்களை சினிமா தொழில் எதிர்பார்க்கிறது**

உங்கள் என்டிரியை இப்பொழுதே அனுப்புங்கள்

நிகழ்ந்த கால நினைவுகள்

தஞ்சை ம. நவநீதம்

அன்று இரவு பத்துமணிக்கு தஞ்சை இராமனுதன் செட்டியார் ஹாலிலே நாடகம். ஏ. கருணாநிதி தலைமை வகிக்கப் போகிறார் என்று விளம்பரமோ செய்தாகிவிட்டது. நீண்ட நாள் பிரயாசைக்குப் பின் அவர் தலைமை வகிக்க இசைந்தார். நாடகதினத்தன்று காலையிலேயே தஞ்சைக்கு வருவதாக அவர் சொல்லியிருந்தார். அவர் சேலம் மார்டன்தியேட்டர்ஸில் இருந்த காலம் அது. "மந்திரிகுமாரி" வெளிவந்த நேரம்.

அன்று, நான் காலையிலேயே புகைவண்டி நிலயத்திற்குச் சென்றுவிட்டேன். பல் வண்டிகள் வந்துபோய்க் கொண்டிருந்தன. காலையும் போய் மாலையும் வந்தது. அதுவரை வரவில்லையே என்ற பயத்தோடு, மாலையில் கடைசியாகவந்த ஒரு ரயிலில் முதல் வகுப்பு வண்டியைப் பார்த்தேன். எழுந்து வந்துகொண்டிருந்தார். அவரைக் கண்டதும் தான் எனக்கு பயம் நீங்கியது. ஏற்கெனவே அவருக்கென ஹோட்டலில் அறை ஏற்பாடு செய்து இருந்தேன். அங்கே அழைத்துச் சென்றேன் அவரை.

நாடகம் ஆரம்பிப்பதற்குமுன் அவரை அழைத்து வந்து, உட்காரவைத்து விட்டுப்போனேன்.நாடகத்தின் இடைவேளையிலே அவர் பேசவேண்டும். என்னை அழைத்து, "என்ன பேசுவது என்றே தெரியவில்லையே, இதுவரை நான் எந்த நாடகத்திற்கும் தலைமை வகித்ததும் கிடையாது!" என்றார்.

"நீங்கள்நாடகத்தையும், நடிப்பையும் பார்த்தீர்களல்லவா, அதைப்பற்றிப் பேசுங்களேன்" என்றேன். பின்னர் அரை மணி நேரம் நாடகக் கதை அமைப்பையும் நடிப்பையும், கருத்துக்களையும் பற்றிப் பேசினர். எனக்கே ஆச்சரியமாக இருந்தது. தலைமை வகித்ததே இல்லை என்றவர், என்ன பேசுவது என்று கேட்டவர், இவ்வளவு அற்புதமாகப் பேசுகிறாரே என வியந்தேன். கூட்டத்திலே சிலர் அவரைப் பாடச் சொல்லி சத்தமிட்டனர். அதற்கு அவர் ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டார். "நாணலைப் போட்டு, நாக்கைப் பொசுக்கினலும் எனக்கு பாட வராது. அடுத்த முறை தஞ்சை வருகிறேன். அப்போது கண்டிப்பாகப் பாடுகிறேன்" என்று சொல்லி தப்பித்துக் கொண்டார்.

மறுநாள் காலை எங்களது வண்டி அரண்மனைக்குச் சென்றது. தஞ்சை சோழ மன்னனின் பழங்கால சித்திரங்களையும், சிலைகளையும் கண்டு வியந்தபடியே, அதற்கதற்கு விளக்கம் கேட்க ஆரம்பித்தார். நானும் சொல்லி வந்தேன். அவரின் இதயத்தைக் கவர்ந்த இடம் தஞ்சை சரஸ்வதி மஹால்ஆகும்.

"ஏங்க, இங்கே இருந்த புஸ்தகங்களையெல்லாம், வெள்ளையர்கள் எடுத்துப் போய் விட்டார்களாமே" என்று கேட்டார்.

"அப்படித்தான் சொல்லிக் கொள்ளுகிறார்கள்" என்றேன் நான்.

வீரனுக்கு (ரஞ்சன்) இரு பக்கமும் மின்னும் மங்கையர் (டி. பி. முத்துலட்சுமி – வனஜா) —"மின்னல் வீரனி"ல்.

ஒவ்வொரு இடமாகப் பார்த்துக் கொண்டு, பல இடங்கள் செல்லுவதற்குள்ளாக, ரசிகர்கள் கூட்டம் கூடிவிட்டது. அதுவும் எங்களைத் தொடர்ந்து வந்தது.

"டோய் கருணாநிதி டோய்," என்று சொல்லிக் கொண்டே, "எங்கடா ஊசியை காணோம்" என்று "மந்திரி குமாரி" வசனத்தைப் பேச ஆரம்பித்து விட்டார்கள்! மாடமாளிகை, கூட கோபுரம் ஏறிப்பார்க்க ஆரம்பித்தோம். அவரும் சுவர் ஏற ஆரம்பித்தார்.

"பழைய கட்டிடங்க, எதுனாச்சும் ஆனா, பத்திரிகையிலே வந்திடுங்க!" என்றார் சிரித்துக் கொண்டே. முதலில் ஏறும் போது மிகவும் பயந்தார். கட்டிடமோ விண்டு இருந்தது. முதலிலே மிகவும் பயந்தார். பிறகு எனக்கே கை கொடுக்க ஆரம்பித்தார். அரண்மனையிலே உற்ற பல இடங்களையும் படம் பிடித்துக் கொண்டார்.

மூன்றாம் நாள் மாலை ஏழரை மணி வண்டிக்குப் போகப் புறப்பட்டார். அம்மூன்று நாட்களில்

"இதென்ன புதுமாதிரி ஆடை அலங்காரம்?" என்று பிரமிக்கிறீர்களா? ஆசாமியே திரைக்குப் புதுமுகம்தான்! –பயனீர் பில்ம்ஸ் "கில்லாடி"யில் ஷோபா.

நாங்கள் இருவரும் நீண்ட நாட்கள் பழகிய நண்பர்களாகி விட்டோம். வண்டியும் வந்தது. சேலம் நோக்கிப் பிரயாணமானார். அன்றிலிருந்து இன்று வரை அவர் என்னை மறந்தது கிடையாது.

மீண்டும் நெடுநாளைக்குப் பிறகு சமீபத்தில் அவரைக் காணச் சென்றேன். அவரது அறையில் பேச்சு சத்தம் கேட்டது. மெதுவாகத் தலையை உள்ளே நீட்டினேன்.

"யாரது? நவநீதமா? வாங்க" என்றார். உள்ளே போனேன். பேசிக் கொண்டிருந்து விட்டு மீண்டும் பிரிந்தேன். சுமார் எட்டு வருடங்களுக்குப் பிறகும் என்னை அவர் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்கிறார் என்றால் அவரின் குணாதிசயத்தை என்னவென்று சொல்வது! எப்பொழுதும் அவரிடம் சிரிப்புத்தான்.

காற்றினிலே நக்ஷத்திர பேட்டி

[கடந்த ஆகஸ்டு மாதம் 31ம் தேதி அன்று "வாய்ஸ் ஆப் அமெரிக்கா" தமிழ் நிகழ்ச்சியில் நேயர்களுக்காக "வாய்ஸ் ஆப் அமெரிக்கா" நிருபர் திரு. சின்னராஜ், பிரபல சினிமா நாட்டிய நட்சத்திரம் பத்மினியைப் பேட்டி கண்டார். பேட்டியின் முழு விவரம் கீழே தரப்படுகிறது]

சின்னராஜ்: வணக்கம் அம்மா! பத்மினி.

பத்மினி: வணக்கம்.

சி: அகில இந்திய, ஏன் உலகப் புகழ் பெற்ற நாட்டிய நடிகையாகிய நீங்கள் வாய்ஸ் ஆப் அமெரிக்கா நேயர்களுக்கு இந்த பேட்டி அளிப்பது குறித்து மிக்க சந்தோஷம். நீங்கள் நாட்டியம் கற்றுக் கொண்டது சினிமாவில் நடிக்க வேண்டும் என்னும் நோக்கத்துடனா அல்லது...

ப: இல்லை. நான் எனது நான்காவது வயதில் நாட்டியம் கற்றுக் கொண்டேன். நாங்கள் திருவாங்கூரில் இருந்தபோது எங்கள் பெரியம்மா மிக்க ஆர்வத்துடன் நாட்டியம் முதலியவற்றைக் கற்றுக் கொடுத்தார். அப்பொழுது நான் மிகவும் ஒல்லியாக இருந்தேன். நாட்டியம் கற்றுக் கொண்டால் நல்ல உடல் நிலை பெறலாம் என்றும் அப்போது கூறினர்.

சி: உங்களுக்கு கலை ஊக்கம் அளித்தவர்கள் யார் யார் என்று கூற முடியுமா?

ப: ஏன்! எங்கள் பெரியம்மா. அவர்தான் எங்களுக்கு நாட்டியம், நடிப்பு முதலியவற்றை யெல்லாம் கற்பித்து, கலை ஆர்வத்தை அதிகம் வளர்த்தவர். நாங்கள் புகழ் பெறவும் அவர்தான் காரணம். அடுத்தவர் உதயசங்கர். அவருடைய படமான "கல்பனா" வில்தான் எனக்கு முதன் முதலில் சான்ஸ் கொடுத்தார்.

சி: உங்களுடைய சிறந்த நடிப்பிற்கு பரத நாட்டியம் காரணமாக இருந்ததென்று சொல்ல முடியுமா?

ப: பரதநாட்டியம் மட்டு மல்ல; எந்த நாட்டியமாயினும் நடிக்க அது மிகவும் உதவுகிறது. டைரெக்டர் சொல்வதை சுலபமாகப் புரிந்து கொள்ளவும் உணர்ச்சியுடன் நடிக்கவும் நாட்டியம் உதவுகிறது.

சி: நாட்டியத்தில் சிறந்தவராகிய நீங்களே ஒரு முழு நீள நடன கலர்ப் படம் தயாரிப்பதைப் பற்றித் தங்கள் கருத்து?

ப: தயாரிக்கலாம். ஆனல் டைம் இல்லை. நல்ல படம் ஒன்றை கூடிய விரைவில் தயாரிக்க வேண்டும் என்று ஆசை எனக்கு உண்டு.

சி: நீங்கள் இன்று சினிமாவில் அடைந்துள்ள புகழ் நாடகத்தில் நடித்திருந்தால் கிடைத்திருக்குமா?

ப: சொல்ல முடியாது. நாடகத்திலும் நடிக்க வேண்டு மென்று தான் ஆசை. ஆனல் நேரமும் சந்தர்ப்பமும் வரவேண்டும்.

சி: எத்தனையோ பாத்திரங்களாக புகழ் பெற நடித்த தாங்கள்

இதுவரை நடிக்காததும், இனி மேல் நடிக்க விரும்புவதுமான பாத்திரம் ஏதாவது உண்டா?

ப: உண்டு. அதாவது, ஒரு ஊமைப் பெண்ணாக நடிக்கவேண்டும் என்று அதிக ஆசை. அந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

சி: தாங்கள் எவ்வளவு இந்தி படங்களில் நடித்திருக்கிறீர்கள்?

ப: நான்கு அல்லது ஐந்து படங்களில் நடித்துள்ளேன்.

சி: தற்போது தங்கள் பம்பாய் பட மார்க்கெட் எப்படி இருக்கிறது?

ப: நிறைய அழைப்பு வருகிறது. ஆனால் அடிக்கடி பம்பாய்க்கும் மதராசுக்கும் போய் வருவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, அதிகம் ஏற்றுக் கொள்வதில்லை.

சி: சில காலத்திற்கு முன் ஐரோப்பா அமெரிக்கா சுற்றுப் பிரயாணம்செய்ய திட்டமிட்டிருந்தீர்களே? அது இப்போது எந்த அளவில் இருக்கிறது?

ப: மூன்று வருடங்களுக்கு முன் அத்திட்டம் இருந்தது. ஆனால், முடியவில்லை. இன்னும் இரண்டு வருடங்களுக்குள் போக வேண்டுமென்று நினைக்கிறேன்.

சி: எப்படியும் அமெரிக்காவுக்குப் போகப் போகிறீர்கள்...

ப: கட்டாயம் போக வேண்டுமென்றுதான் ஆசை.

சி: ஹாலிவுட்டைப் பார்க்கத்தானே போகிறீர்கள். ஹாலிவுட் படங்களைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன என்று கூறுவீர்களா?

ப: ஹாலிவுட் படங்களை நிறையப் பார்க்கிறேன். அதன் மூலம் நடிப்பு, போன்ற எல்லாத் துறைகளிலிருந்தும் நிறைய கற்றுக்கொள்ள முடிகிறது.

சி: ஹாலிவுட்டில் உங்களுடைய அபிமான நட்சத்திரங்கள் யார் என்று கூறுவீர்களா?

ப: நடிகரில் கிரிகரிபெக்கையும் நடிகையருள் ஆவா கார்டினரையும்



எனக்கு மிகவும் பிடிக்கும்.

சி: உங்களுடைய நாட்டியத்துக்கு ஊக்கம் அளிக்கும் ஹாலிவுட் நாட்டிய நடிகை யாராவது உண்டா?

ப: வெராஎல்லனுடைய நடன மென்றால் நான் பார்க்கத் தவறுவதில்லை.

சி: சரி: தமிழ்த் திரையுலகில் தங்களுக்கு எந்தக் கதாநாயகனைப் பிடித்திருக்கிறது?

ப: அதை எப்படிச் சொல்ல முடியும்? எவ்வளவோ பேருடன் நடித்திருக்கிறேன். இருந்தாலும், பாத்திரத்தை நன்கு அறிந்து உணர்ச்சியுடன் நடிப்பவரான சிவாஜி கணேசனை எனக்குப் பிடிக்கும்.

சி: சினிமா உலகிலிருந்து தாங்கள் ஓய்வு பெற்றுக் கொள்ளப் போவதாக இரண்டு மூன்று வருடங்களுக்கு முன் வதந்தியிருந்ததே, அது உண்மையா?

ப: வாஸ்தவம். அந்தமாதிரி வதந்தி யிருந்தது. அப்போது முப்பது படங்களுக்கு ஒப்பந்தம் இருந்தது. மேலும் மேலும் படாதிபர்கள் கேட்டுக் கொண்டே இருந்தனர். ஆகவே அந்த "ஆபர்" களை ஏற்றுக் கொள்ள முடியாது என்றேன். அதனல் அப்படி ஒரு வதந்தி கிளம்பிவிட்டது. அதை ஒரு பொய் வதந்தி என்று கூடச் சொல்லலாம்.

சி: அப்படியானல் இன்னும் நீண்டகாலம் நமது நேயர்களுக்கு தாங்கள் கலைப் பணி புரிவீர்கள் என்று நம்பலாமா?

ப: ஓ!

சி: உங்கள் அக்கா லலிதாவிற்குக் கல்யாணமாகி ஒரு குழந்தையும் உண்டே. உங்கள் கல்யாணம் எப்பொழுது என்று கேட்கலாமா?

ப: (சிரித்துக் கொண்டே) அதைப்பற்றி நினைக்கவே யில்லை. நினைக்க நேரம்கூட இல்லை.

சி : எப்படியாகி லும் வாழ்நாளில் ஒரு நாள் நிச்சயம் கல்யாணம் செய்து கொள்வீர்கள் அல்லவா?

ஆளைப் புரியவில்லையா? ஆம்; நம்ம சிவாஜியே தான். 'சபாஷ்மீனு'வில்.

ப : ...ம்....ம்... கிழவியாவதற்குள் ... (சிரிப்பு)

சி : தங்கள் கணவர் எப்பேர்ப் பட்டவராய் இருக்கவேண்டும் என்று விரும்புகிறீர்கள்?

ப : அதைப்பற்றி நினைக்கவேயில்லை.

சி : நம் வீடுகளில் சாதாரணமாக இரண்டு பெண்களுக்கு மேல் இருந்தால் அநேக சில்லறைத் தகராறுகள் ஏற்படுகின்றனவே. அதற்கு நீங்கள் சகோதரிகள் மூவரும் விதிவிலக்கல்லவே........?

ப : சாதாரண வீடுகளில் தினத்திற்கு நூறு சண்டைகள் நடந்தால் எங்களுக்குள் ஆயிரம் சண்டைகள் ஏற்படும். ஆனால், மறு நிமிஷமே சிநேகமாகிவிடுவோம். அவ்வளவுதான் வித்தியாசம்.

சி : நாட்டிய நடிப்புக் கலைகளில் தேர்ந்த தங்களுக்கு பெண்களுக்கு முக்கியமாகத் தெரிந்திருக்க வேண்டியகலையாகிய சமையற் கலை தெரியுமா?

ப : தெரியும். ஒவ்வொருஞாயிற்றுக்கிழமையும் எங்கள்வீட்டில்சமையல் கலைதான். இப்பொழுதுதான் பழகுகிறேன். சுமாராகச் சமைப்பேன்.

சி : சமைப்பது மட்டுமின்றி சாப்பிடுவதும் ஒரு கலைதான் என்று சொல்லவேண்டும். எமது பெண் நேயர்கள் தங்களுக்கு எவை அதிகமாகப் பிடிக்கும் என்று அறிய விரும்புவார்கள்.

ப : ஊறுகாய், அதிலும் மாங்கா ஊறுகாய் மிகவும் இஷ்டம். மற்றும் அவியல்.... எல்லாமே பிடிக்கும்.

சி : நீங்கள் நடிக்கும் நேரம் தவிர மற்ற ஓய்வு நேரங்களில் என்ன செய்வீர்கள்?

ப : ஓய்வு இருக்காது. அவ்வாறு இருந்தால் போட்டோ எடுப்பேன், டேபிள் டென்னிஸ், ஷட்டில் காக் முதலியவை விளையாடுவேன்.

சி : திரையுலகில் புகழ் பெற்ற தங்களுக்கு இதைத் தவிர வாழ்க்கையில் வேறு ஏதாவது லட்சியங்கள் உண்டா?

ப : நிறைய இருக்கிறது. தினமும் ஒவ்வொரு புது லட்சியம் ஏற்படுகிறது. உலகம் முழுதும் சுற்ற வேண்டும், ஒரு பள்ளிக்கூடம் கட்ட வேண்டும் என்பன போன்ற பல லட்சியங்கள் உண்டு.

சி : நீங்கள் இன்று வாய்ஸ் ஆப் அமெரிக்கா நேயர்களுக்கு அளித்த இந்தப் பேட்டிக்கு நேயர்கள் சார்பில் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம், வணக்கம்.

ப : வணக்கம்

இப்படிப் பேசுவார்களா?

(வடபழனி ஆண்டவன் சன்னிதி. மாலே நேரம். கூட்டம் அவ்வளவாக இல்லே. கண்கண்ட தெய்வம், கலியுக வரதனின் எதிரில் கண்மூடி மெய்ம்மறந்து பாடியவாறு நிற்கிருர். மாஜி நட்சத்திரமான எம். கே. தியாக ராஜ பாகவதர். பத்துப் பதினேந்து பேர் புடைசூழ அங்கு வருகிருர். பிரபல பின்னணிப் பாடகர் டி.எம். சௌந்திர ராஜன். பாகவதரின் பாடல் முடிவடைகிறது. சௌந்திரராஜன் பாடுகிருர்; ஏராளமான கூட்டம் சேருகிறது. பாடி முடிக்கிருர். எல்லோரும் பிரசாதம் பெற்று வெளியேறுகின்றனர். பிராகாரத்தில் வீபூதி பூசியபடி நிற்கும் பாகவதரைக் கண்டதும் சௌந்திரராஜன் வியப் புடன் அவர் அருகே வருகிருர்.)



சௌந்: அடடா, நீங்களா? நான் கவனிக்கவே இல்லேயே? ...

பாக: ஓ...... சௌந்திரராஜனு? வாப்பா! எப்படி சௌக்கிய மெல்லாம்?

சௌந்: ஏதோ உங்க ஆசீர் வாதத்திலே சௌக்கியமாக இருக் கிறேன்...

பாக: (சிரித்து) என் ஆசீர்வாதம் எதுக்கப்பா? தமிழ் நாடே உனக்கு ஆதரவா இருக்கு இன்னிக்கு...

சௌந்: ஏன், உங்களுக்கு இல்லேயா அது?

பாக: இருந்தது; இப்போது இல்லே!

சௌந்: உங்க 'டைம்' அப்படி! என்ன செய்யறது?

பாக: பரவால்லியே! என் 'டைம்' எப்படீன்னு சொல்ற அள வுக்கு உனக்கு 'டைம்' வந்திடிச்சா?

சௌந்: அதையேன் கேட்கி றீங்க? மூச்சு விட நேரம் இல்லே! தூங்கி எழுந்து மறுபடியும் தூங்கப் போகும் வரை ரிக்கார்டிங்... ரிக்கார் டிங்... ரிக்கார்டிங்தான்

பாக: ம்... கேட்டேன்...

சௌந்: எல்லோரும் 'அப்படியே பாகவதர் மாதிரி இருக்கு'ன்னு சொன்னுங்க...

பாக: 'மாதிரி' ன்னுதானே சொன்னுங்க? 'பாகவதரேதா'ன்னு சொல்லலியே?

சௌந்: அந்தப் பெயரையும் சீக்கிரமே வாங்கிவிடுவேன்...

பாக: ஓ... அவ்வளவு நம்பிக்கை இருக்கா?

சௌந்: நிறைய இருக்கு! ... ஆ... அண்ணு!

பாக: என்ன?

சௌந்: சமீபத்திலே உங்க ரேடி யோக் கச்சேரியைக் கேட்டேன்....

பாக: முழுங்காதேப்பா ....

சௌளந்: வருத்தப் படக்கூடாது! இனிமே இந்த மாதிரி கச்சேரி யெல்லாம் வேண்டாம் உங்களுக்கு! பெயர்தான் கெட்டுப் போகும்...

பாக: இனிமே எனக்கு என்னப்பா பெயர் வரணும்? நான் போயிட்டாலும் ஒரு "அம்மையப்பா" "சொப்பன வாழ்வில்" "அம்பா மனம் கனிந்து" இருக்கின்றன. எத்தனை யுகமானாலும் அவைகள் என்னை ஞாபக மூட்டிக் கொண்டிருக்கும். ஆனா நீதான் ஜாக்கிரதையா இருக்கணும்!

சௌளந்: நானா?

பாக: ஆமா! ஆறரைக் கட்டையில் 'அய்யோ'ன்னு கூச்சல் போடறதையெல்லாம் நீ சங்கீதம்னு நினைச்சுக்கிட்டிருக்கே! அத்தோடெ உன் சங்கீத மெல்லாம் சிவாஜி கணேசனோடெ சரி!

சௌளந்: ஏன், எம். ஜி. ஆர், ஜெமினிக்கெல்லாம் கூட நான் பாடறேன்!

பாக: அதாவது மத்தவங்களுடைய புகழ் ஆயுசைப் பொறுத்திருக்கு உன் புகழ் ஆயுசு. உனக்காக சொந்தமா ஒரு அஸ்திவாரம் இல்லே; சக்தி இல்லே......

சௌளந்: உங்க மார்க்கெட்டை நான் பறிச்சிட்டேங்கிற ஆத்திரம் உங்களுக்கு!

பாக: என் மார்க்கெட்டை யாரும் பறிக்கவும் இல்லே; பறிக்கவும் முடியாது! ஏதோ இன்னிக்கு எனக்கு சான்ஸு இல்லேன்னா அதுக்காக என் கலையும் போயிடுச்சுன்னு அர்த்தமா?

சௌளந்: கலை போயிடிச்சோ இல்லையோ, கம்பீரமா இருந்த உங்க சரீரம் சாரீரம் ரெண்டும் போயிடிச்சு!

பாக: அதைப்பத்தி நான் கவலைப் படலேப்பா. ஒன்னை நீ காப்பாத்திக்க. சும்மா இந்த இந்தி மெட்டுக் கெல்லாம் குரல் கொடுக்காதே. கர்நாடக சங்கீதத்தைக் கத்திப் பாடாதே! சங்கீதம்கிறது தொண்டையிலிருந்து வர்ரது இல்லே தம்பி! இதயத்திலிருந்து வர்ரது. அத்தோடெ......

சௌளந்: என்ன?

பாக: இந்த வெத்திலைப் பெட்டியைத் தூக்கிட்டுப் போற பழக்கத்தை விட்டுடு!

சௌளந்: நானாவது வெத்திலை தான் போடறேன், அந்தக் காலத்திலே நீங்க......

பாக: அதுதான் இந்தக் கோலத்திலே இருக்கேன்? உனக்கும் அது வேணும்கிற ஆசையா? வேணாம்ப்பா! புத்திசாலித்தனமா பிழைச்சுப் போ......

சௌளந்: வர்ரேன்...! வணக்கம்!

(இதற்குள் அவர்கள் அங்கிருப்பது தெரிந்த பக்தர்கள் கூட்டம் அங்கு திரும்புகிறது. இருவரும் வெவ்வேறு திசையில் நடக்கின்றனர்.)

[நகைச்சுவையோடு இரண்டு உள்ளங்கள் உறவாடுவதை எடுத்துக் காட்டுவதுதான் இப்பகுதியின் நோக்கம். எவர் மனமும் புண்படுவதற்காக எழுதப்பட்டது அல்ல என்பதே உண்மை.]



நடனம் ஆடினார்

"பரணி"

குமாரி ரேவதி

சமீபத்தில் அடையார் ஆர்ட்ஸ் அகாடமி சார்பில் குமாரி ரேவதியின் பரத நாட்டியக் கச்சேரி நடை பெற்றது. ஸ்ரீமதி கௌசல்யாவின் நல்ல பயிற்சியின் பலனை அன்று கச்சேரியை சபையினர் வெகுவாக ரஸித்தனர். குமாரி ரேவதியும் நாட்டியத்தில் வெகு ஊக்கம் கொண்டு, நாட்டமுடன் ஆடினார். முத்திரை பிடிப்புக்கள், சுத்தமான தாளக் கட்டு, நல்ல முகபாவங்கள், துடிப்பான ஆட்டம் ஆகியவை விசேஷமாக எல்லோரையும் கவர்ந்தன.

குமாரி எஸ். ஜெயா

"ஆடல் காணீரோ'' என்ற பதத்திற்கு அபிநயம் மிகப் பிரமாதம். சுடியான வெட்டுக்கள், அழகிய சிருங்கார நிலைகள் நன்றாக இருந்தன. "நாதர் முடிமேல்" ஆட்டம் பிரமிக்கத் தக்கதாக இருந்தது. ரேவதி சுழன்று சுழன்று உடலை வளைத்து ஆடுகையில் சபையினர் ஆச்சரியப்பட்டனர்.

"குழந்தையை இன்னும் சற்று புஷ்டியாக வளர்க்க வேண்டு" மென்று சில பெரியோர்கள் அன்று அன்புடன் பேசிக் கொண்டார்கள்.

குமாரி பி. ஏ. அனுராதா

சென்ற மாதம் மயிலாப்பூர் சஞ்சீவி காமத் ஹாலில் (ஒய். எம். ஐ ஏ) குமாரி பி. ஏ. அனுராதாவின் அரங்கேற்றம் சிறப்பாக நடை பெற்றது. சென்னை உயர் நீதி மன்றத்து நீதிபதி திரு ஏ. எஸ். பி. ஐயர் தலைமை வகித்தார். தமக்கே உரித்தான சிறந்த கலை விமர்சனப் பாணியில் குமாரி அனுராதாவை வெகுவாகப் பாராட்டினார்.

கச்சேரி முழுவதும் தாளக்கட்டு சரியாக இருந்தது. முக பாவாபிநயங்களில் நல்ல சாமர்த்தியம் வெளிப்பட்டது. தொடர்ந்து பல மேடைகளில் ஆடினால் சிறந்த நாட்டிய நட்சத்திரமாக விளங்குவார். ஆங்கிகத்தில் சாந்தமும், ஆகார்யப் பொருத்தமும் விசேஷமானவை. குறத்தி நடனத்தின் உடை, நடை, ஆட்டம் வெகுவாகப் புகழப்பட்டன.

ஸ்ரீமதி தனமாணிக்கம்மாள் அன்று நட்டு வாங்கம் வகுத்தார். நன்றாகப் பயிற்சி அளித்திருக்கிறார்.

அழகிய சிரித்த முகத்தையுடைய அனுராதா இன்னும் சில பாடங்களைக் கற்றுக் கொண்டால் மிகவும் நல்லது.

குமாரி எஸ். ஜெயா

செப்டம்பர் 6ம் தேதி அடையார் ஆர்ட்ஸ் அகாடமியில் குமாரி எஸ். ஜெயாவின் பரத நாட்டியக் கச்சேரி வெகு விமரிசையாக நடைபெற்றது. ஆங்கிக சுத்தமும், நல்ல ஆகார்ய பொருத்தமும் நவரஸ பாவங்களைக் காண்பிக்கும் முக பாவங்களும் ஒருங்கே சீராக அமையப்பெற்ற கம்பீரத் தோற்றத்துடன் குமாரி எஸ். ஜெயா ஆடினர்.

"பதறி வருகுது" என்ற பதத்திற்கு அபிநயங்கள் வெகு அழகாகவும் பொருத்தமாகவும், கவனத்தைக் கவரும்படியாகவும் இருந்தன. "பிளேட் டான்ஸை" சபையினர் வெகுவாக ரஸித்தனர். இயற்கையிலேயே நல்ல நாட்டிய லக்ஷணங்கள் பலவும் பொருந்திய குமாரிஜெயா இன்னும் சற்று பழமையான, கஷ்டமான சில உருப்படிகள் ஆடுவது நல்லது. ஆதரிக்கப் படவேண்டிய நல்ல நாட்டிய நட்சத்திரம்.

அன்றைய கச்சேரிக்கு புரொபஸர் ஸ்ரீ பி. சாம்பமூர்த்தி தலைமை வகித்து ஜெயாவின் நாட்டியத்தைப் பாராட்டினர்கள்.

குமாரி பி. ஏ. அனுராதா

எங்களிடம் பித்தளை, தாமிர வில்லைகளும், இதர உலோகத் தகடுகளும், பித்தளைக் கம்பிகளும் மலிவான விலைக்குக் கிடைக்கும்.

பெ. சா. நா. சா.
அம்பலவாண செட்டியார் அண்டு கோ.
(பிரைவேட்) லிமிடெட்.

(உரிமையாளர். ஸ்ரீராம் ரோலிங் மில்ஸ்)

14, தங்கசாலைத் தெரு, சென்னை - 3.

தந்தி:— பிராக்கோமெட்டல்.

டெலிபோன்:— ஆபீஸ் 55106 தொழிற்சாலை 61104.

இத்துடன் இணைக்கப்பட்ட ஸ்தாபனம்:

பெ. சா. நா. சா. அம்பலவாண செட்டியார்.

மட்டாஞ்சேரி, கொச்சி.

ஹோமியோபதி

வைத்திய சாஸ்திரத்தை மிகக் குறைந்த செலவில் தங்கள் வீட்டிலிருந்தபடியே தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ படித்து சிறந்த முறையில் டாக்டராகத் தொழில் நடத்தலாம் முழு விபரங்களையும் இலவசமாகவே அனுப்பித் தருகிறோம்.

பாரதத்தின் பிரதான ஹோமியோபதி ஸ்தாபனம்

MEDICAMENTA HOMIOS

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்,

கும்பகோணம்

இனாம்! இனாம்!! இனாம்!!!



எமது நெ. 501 கருப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லா விதமான மயிரும் மைக் கருப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கருப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது. புட்டி ஒன்றின் விலை ரூ. 1-94 3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5-00.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட் வாட்சும், நியுகோல்டு மோதிரமும் அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்:

AMRIT PHARMACY (M. G.) JULLUNDUR CITY

புதுப் படங்கள்

ஜூபிடர் படத்தில்...

ஜூபிடர் பிக்சர்ஸார் அடுத்துத் தயாரிக்க திட்டமிட்டுள்ள "எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்ற படத்தின் மூலக் கதையை லட்சுமணனும், திரைக் கதையை உமாச் சந்திரனும் எழுதி யுள்ளனர். வசனத்தை இருவரும் கூட்டாக எழுதுகின்றனர். இப்படத்தை டைரெக்ட் செய்ய பிரகாஷ் ராவும், படத்தில் நடிக்க ராகினி, எம். என். ராஜம், டி. பி. முத்துலட்சுமி, ஜெமினி கணேசன், டி. கே. பகவதி, நம்பியார், வி. ஆர். ராஜகோபால் ஆகியோரும் ஒப்பந்த மாகியுள்ளனர்.

சித்திரைத் திருநாள்

தற்போது "ஓடிவிளையாடு பாப்பா" வைத் தயாரித்து வரும் ஜகத்ஜோதி பில்ம்ஸார் அடுத்ததாக "சித்திரைத் திருநாள்" என்ற கதையைப் படமாக்க திட்டம் போட்டுள்ளனர். இது ஒரு கிராமியக்கதை. படத்தில் பெரும் பாலோர் புது முகங்களாக இருப்பர். இந்தப் படத்தையும் வி. ஸ்ரீனிவாசனே டைரக்ட் செய்வார்.

கரும்புத் தோட்டம்

"வீட்டுக்கு வந்த வரலக்ஷ்மி" படத்தைத் தயாரித்த மோகேஷ்வரா சித்ரா என்ற படத்தயாரிப்பு ஸ்தாபனம் அடுத்தபடியாக "கரும்புத் தோட்டம்" என்ற படத்தைத் தயாரிக்கத் தீர்மானித்து அதற்கான ஏற்பாடுகளை முடித்துள்ளது. ஈஸ்வர ரெட்டியார் தயாரிக்கும் இப்படத்தின் திரைக்கதை, டைரக்ஷன் இரண்டுமே நடிகர் ரஞ்சன் மேற்பார்வையில் விடப்பட்டிருக்கின்றன. படத்தின் ஸ்டண்ட் காட்சிகள் தயாரிக்கும் பொறுப்பு பிரபல ஸ்டண்டு வீரர் ஷியாம் ஸுந்தரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இதுவரையில் எவரும் கண்டிராத இயற்கைக் காட்சிகளும், வீர தீர வேலைகளும் இப் படத்தில் நிறைந்திருக்கும் எனத் தெரிகிறது.

திலகம்

பிரபல நாடகமான "திலகம்" ஏவி. எம். ஸ்டுடியோவில் அவர்களது தயாரிப்பாக திரைப்படமாகிக் கொண்டிருக்கிறது. டைரெக்ஷன் துறையில் கிருஷ்ணன் - பஞ்சு இரட்டையர்களை வட நாட்டுக்கு அறிமுகப்படுத்திய தயாரிப்பாளர் ஏ. வி. மெய்யப்பன், லட்சுமிநாராயணன், வெங்கட்டராமன் என்ற இரண்டு இளைஞர்களை டைரெக்டர்களாக இப் படத்தின் மூலம் திரைப்பட உலகுக்கு அறிமுகப் படுத்தப் போகிறார். படத்தின் கதை-வசனத்தை நாடகாசிரியர் கே. எம். நாராயணசாமியே எழுதுகிறார். ஏவி. எம்மின் குமாரர்களின் ஒருவ்ரான இளைஞர் எம். குமரன் இப் படத்தின் தயாரிப்பு நிர்வாகி. படத்தில் பிரேம் நஸீர், எம். என். ராஜம், லலிதா, ஸ்ரீரஞ்சனி, வி. கே. ராமசாமி, வி. ஆர். ராஜகோபால் ஆகியோர் நடித்து வருகின்றனர்.

யாரைக் கண்டு இப்படி முறைக்கிறார்? —ஜெயமாருதி பிக்சர்ஸ் "படிதாண்டாப் பத்தினி"யில் கே. கண்ணன்.

கணேஷ் பிரஸாத் மூவீஸ்

புதிதாக ஆரம்பமாகியுள்ள கணேஷ் பிரஸாத் மூவீஸ் என்ற படத் தயாரிப்புக் கம்பெனியார் ரவீந்தர் கதை-வசனம் எழுதியுள்ள ஒரு சமூகப் படத்தைத் தயாரிக்கப் போகின்றனர். இப்படத்தில் சிவாஜி கணேசன்-ஜமுனா காதல் ஜோடியாக நடிப்பார்கள். டி. ஆர். ரகுநாத் டைரெக்ஷனில் இப் படத்தின் உருவக வேலைகள் சீக்கிரமே வாஹினியில் தொடங்க இருக்கிறது.

குப்தாவின் கலர்ப் படம்

பிரபல ஸ்டேட் ஹோட்டல் உரிமையாளரின் முயற்சியில் குப்தாஸ் கலா மந்திர் என்ற படத் தயாரிப்புக் கம்பெனி ஆரம்பமாகியுள்ளது. இவர்கள் பிரம்மாண்டமான முறையில் ஜெமினியில் ஒரு கலர்ப் படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கின்றனர்.

ஜெமினியின் அடுத்தது

ஜெமினி ஸ்டுடியோவின் அடுத்த தயாரிப்பிற்கான ஆரம்ப பூஜை ஆடம்பரமற்ற முறையில் விநாயக சதுர்த்தி அன்று நடைபெற்று அதன் பின் தொடர்ந்து படப் பிடிப்பு நடந்தது வருகிறது. தயாரிப்பாளர் எஸ். எஸ். வாசன், கொத்தமங்கலம் சுப்பு, கி. ரா. ஆகிய மூவரும் இந்த சமூகப் படத்தின் திரைக் கதையை அமைத்துள்ளனர். எஸ். எஸ். வாசன் டைரெக்ஷனில் தயாராகும் இப் படத்தில் வசுந்தராவும் வைஜயந்தியும் தாயும் மகளுமாக நடிக்கின்றனர். இது நிச்சயமாக "தில்லானா மோஹனாம்பாள்" இல்லை. படத்தின் கதாநாயகனாக நடிக்க சிவாஜி கணேசனும், மற்றும் தங்கவேலு, துரைராஜ், ரங்கராவ், சரோஜா தேவி, டி. பி. முத்துலட்சுமி ஆகியோரும் ஒப்பந்தமாகியுள்ளனர்.

பாரசீகப் பைங்கிளி

ஸாயிபாபா பிலிம்ஸார் தாங்கள் எடுத்துவரும் படத்திற்கு "பாரசீகப் பைங்கிளி" எனப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். நடன டைரெக்டர் தங்கராஜ் டைரெக்ட் செய்யப் போகும் இப் படத்தில் ஏற்கெனவே ஏற்பாடு செய்திருந்ததுபோல எம். ஜி. ராமச்சந்திரன் பிரதம பாகத்தில் நடிக்க மாட்டார் எனத் தெரிகிறது.

திரையில் சோழமன்னர்கள்

சரவணபவா - யூனிடி பிக்சர்ஸின் கூட்டுத் தயாரிப்பாக டி. கே எஸ். பிரதர்ஸ் வெற்றி நாடகமான "ராஜ ராஜ சோழன்" படமாகப்போகிறது. நாடகாசிரியர் அரு. ராமநாதனே இப் படத்தின் வசனங்களை எழுதுகிறார். சிவாஜி கணேசன் பத்மினி ஜோடி நடிக்கும் இப் படத்தை பி. புல்லய்யா டைரெக்ட் செய்யவிருக்கிறார்.

அமரர் "கல்கி" யின் "பொன்னியின் செல்வ" னைப் படமாக்கும் உரிமையை எம். ஜி. ராமச்சந்திரன் பெற்றிருக்கிறார். எம்ஜியார் பிக்சர்ஸின் அடுத்த பிரம்மாண்டத் தயாரிப்பு இது. இப்படத்திலும் எம். ஜி. ஆர்., ஜி. கே. ராமு கூட்டாக வேலை செய்வார்கள்.

உங்கள் அதிருஷ்டம் 1958-59 க்கு

உங்கள் பெயரும், முழு விலாசமும் கொண்ட ஒரு தபால் கார்டில் ஏதாவது



ஒரு புஷ்பத்தின் பெயரை எழுதி எங்களுக்கு அனுப்புங்கள். ரூ. 1.25-க்கு (தபால் செலவு தனி) வரப் போகும் 12-மாதங்களுக்கு நாங்கள் உங்களுக்கு எதிர்கால பலன் எழுதி அனுப்புகிறோம். வியாபாரத்தில், லாப நஷ்டம், உத்தியோக மாற்றல், விவாகம், குழந்தை பிறப்பு, சுக துக்கங்கள் ஆகியவை பற்றிய விவரங்களையும், இன்னல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் மார்க்கத்தையும் தெரிவிக்கிறோம்.

Shree Swami SATNARAIN JYOTISH ASHRAM

(M.G.) JULLUNDUR CITY (Pb.)

பத்மினி பிக்சர்ஸ்
சபாஷ்மீனா
டைரக்ஷன்:
பி.ஆர். பந்துலு





புது மாதிரியான கதை அமைப்பைப் பெற்ற படத்திலே சிவாஜி கணேசன், சந்திரபாபு, பி. சரோஜா தேவி போன்ற நட்சத்திரங்களுடன், புது முகங்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்கப் பட்டிருக்கிறது.

டைரெக்டர் பி. ஆர். பந்துலு ஒரு முக்கிய கதா பாததிரமாகவும் நடிக்கிருர்.



நிருபர் படம் பார்க்கிறார்

"நாடோடி மன்னனை"ப் பார்க்கக் கூடிய கூட்டம், பிரபல விளம்பர ஆலோசக ஸ்தாபனமான 'எலிகண்ட் பப்ளிஸிடீஸ்' செய்துள்ள தியேட்டர் அலங்காரத்தைக் கண்டும் பிரமித்தது.

[வெல்லிங்டன் டாக்கீஸ் வாசல். "ஜிம்போ" படத்திற்குச் செல்ல க்யூவில் ஜனங்கள் காத்து நிற்கின்றனர். உயர் வகுப்பு டிக்கெட் 'க்யூ' பக்கம் போனேன்.]

"என்ன ஸார் 'நாடோடி மன்னன்' படம் பார்த்தீங்களா?"

"ஒரு தினுசா டிக்கட் கிடைச்சு, சமீபத்திலே தான் பார்த்தேன். ஜி. கே. ராமுவின் ஒளிப்பதிவுதான் படத்திற்கு உயிர். வேறு என்ன இருக்கு?"

"அதென்ன அப்படிச் சொல்லி விட்டீங்க, எம். ஜி. ராமச்சந்திரன் நடிப்பு..."

"பிரமாதமாத்தான் நடிச்சிருக்காரு."

[இதற்குள் அடுத்த க்யூவில் கசமுசவென ஏதோ தகராறு சப்தம் கேட்கவே அங்கு போனேன்.]

"தூங்காதே தம்பி, தூங்காதே" என்று க்யூவில் நின்றபடி தூங்கி விழுந்த ஒருவனை எழுப்புகிருர், ஒரு சிகப்பு-கருப்புச் சட்டைக்காரர்.

"வந்தனம், நேற்று ராவு எம். ஜி. ஆர். படம் பார்த்தேன். படம் என்னவோ நல்லாத்தான் இருக்கு. ஆனல் நாம் பகுத்தறிவு அது இதுன்னு பிரமாதமாப்பேசறமே..."

"கோழி முட்டையை ஒடைச்சுக் குடிச்ச சந்திரபாபு வாயிலிருந்து குஞ்சு வருவது, பாலத்திலே போராடுகிற காட்சி......"

"இதெல்லாம் பகுத்தறிவுக்குப் புறம்பாத்தான் இருக்குது.... சரி அந்த சரோஜா தேவி எப்படி"

"மெழுகு பொம்மையாட்டமா இருக்கிருங்க, தமிழைக் கொலை பண்ருங்க..."

"அது சரி. மனமுள்ள மறுதாரம் எப்படி?"

கோணம் டி. எஸ். ஆர். கம்பெனியை சேர்ந்த கண்ணன் வந்து கொண்டிருந்தார். ஜெமினி கணேசனைப் பார்த்துப் போக வந்த கண்ணனை, தங்கவேலுவுக்கும அறி

முகப்படுத்திவைத்தேன். படப்பிடிப்பு முடிய 1-30 மணி ஆயிற்று. வெளியில் கிளம்பும் சமயம், முத்துலட்சுமியைத் தேடிக் கொண்டு சமீபத்தில் மணம் செய்து கொண்ட அவரது கணவர் வந்து சேர்ந்தார். எல்லோரு மாய் கொஞ்ச நேரம் ஸெட்டிற்கு வெளியில் பேசிக் கொண்டிருக்கும் போது தெலுங்குப் பட உலக நகைச்சுவை மன்னன் ரேலங்கி வந்து சேர்ந்தார். கொஞ்சநேரம் ஹாஸ்யப் பிரசங்கமாகவே இருந்தது. பிறகு அவர்கள் சாப்பாட்டிற்குக் கிளம்பிப் போனார்கள்.

நாங்கள் சரியாக 2-15 மணிக்கு வீட்டுக்கு வந்து சேர்ந்தோம். பகல் உணவை முடித்துக் கொண்டு ராஜா அண்ணாமலை புரத்தில், தங்கவேலு நாடகக் கம்பெனியின் ஆபீஸ் இருக்கும் வீட்டிற்கு வந்து சேர்ந்தோம். ஆபீஸ் மானேஜர் சேதுமாதவனுடன் அரைமணி நேரம், ஆபீஸ் அலுவல்களை கவனித்து விட்டு சரியாக 4-30 மணிக்கு ஏவி. எம். ஸ்டுடியோவிற்கு வந்து சேர்ந்தோம். அங்கு அன்னபூர்ணா பிலிம்ஸாரின் ஐந்தாவது தயாரிப்பான ஒரு படத்தின் படப்பிடிப்பு.

இதில் ராஜசுலோசனாவுடன் சேர்ந்து நடிக்க வேண்டிய காட்சி. இப்படத்தில் ஒரு ஸ்கூல் மாணவனாக நடிக்கிறார். கார் தகராறு செய்யவே தண்ணீர் எடுத்து வரப்போகும் இடத்தில்ஒரு பெண் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்துக் கொண்டிருக்கிறாள். அவளை தடுத்துக்காப்பாற்றி தான் அணிந்

திருந்த நிஜார், ஷர்ட், தொப்பி இவைகளை அந்தப் பெண்ணுக்கு கொடுத்துவிட்டு தான் ஒரு டிரைவர் மாதிரி ஆடை அணிநது கொண்டு, அந்தப் பெண்ணையும் காரிலேயே சென்னைக்கு அழைதது வருகிறார்.

ஸெட்டிற்கு வெளியல் கொஞ்சம்



ஒய்விற்காக வந்த சமயம், ஸ்டுடியோவில், ஒரே கூட்டமாக இருந்தது. 'என்ன வாத்தியாரே எல்லோரும், பத்திரிகை ஆசிரியர்கள் மாதிரித் தெரிகிறது!'' என்றார் தங்கவேலு.

''ஆமாம் இன்று 'ஜிம்போ' படத்தின் பத்திரிகைக் காட்சி நடக்கப் போகிறது'' என்றேன்.

''ஜிபபோ'' பட உரிமையாளரான ராமா பில்ம்ஸ் ராமசந்திரனும், எலிகண்ட் பப்ளிசிடீஸ் சுப்ரமண்யமும், வாத்தியாரையும, என்னையும் வரவேற்று தியேட்டருக்குள் அழைத்துப்போனார். இருபது நிமிடங்கள் தான்

எடுத்தும் விளக்கி "நாளைக்காலை உங்கள் வீட்டிற்கு, வரப்போகிறேன்" என்றேன் தங்கவேலுவிடம்.

"நல்லது வாத்தியாரே" என்றார் தங்கவேலு.

மறு நாள் காலை சரியாய் 7-30 மணிக்கு நம் போட்டோ கிராபர், கோபால கிருஷ்ணனுடன், மாமபலம் ராஜா பாதர் வீதியிலுள்ள தங்கவேலுவின் வீட்டை அடைந்தேன். என்னைக் கண்டதும், மோஹன் என்ற பையன் உள்ளே ஓடிப் போய் திரும்பி வந்து "ஐயா உங்களை உள்ளேகூட்டி வரச் சொன்னாங்க" என்று சொன்னான்.



குளு குளு அறைக்குள் நாங்கள் நுழைந்ததும், "வணக்கம் வாத்தியாரே, வாருங்கள்" என்றார். "ஏதோ புஸ்தகம் படிக்கிறாப்பலே இருக்கு" என்றேன்.

"இல்லை 'குண்டுசி' தான்" என்றார். "அட்டையிலே என் படம் போட்டிருக்கீங்களே, ஹீரோ, ஹீரோயின் படம் தானுங்களே போடுவாங்கோ, பொதுவாக" என்றார்.

"நீங்கள் நடிக்கும் ஒவ்வொரு படத்திலும்,



"அதிசயத் திருடன்" படப்பிடிப்பு. அதன் டைரெக்டர் பி. புல்லய்யா அவர்களுடன், சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார்.

அப்போது 'ஸெண்டு வாசனை வீசுகிறதே' என்றார் கணேஷ். கும்ப

கதாநாயகனுக்கே ஜீவ நாயகனாக விளங்குகிறீங்களே" என்றேன், சிரித்துக்கொண்டே. "பத்துநிமிஷம் இருங்கள், குளித்து விட்டு வந்துவிடுகிறேன்" என்றார்.

பூஜை அறையில் நுழைந்து ஆண்டவனை வணங்கிவிட்டு, அதற்கு அடுத்தபடியாக அவர் வணங்கிப் போற்றி பூஜித்துவரும் அவர் குருநாதரான என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் படத்தின்முன் இரண்டு நிமிஷங்கள் மௌனமாக நின்று வணங்கிவிட்டு வெளியில் வந்தார்.

தயாராக இருந்த பியட் காரை டிரைவர் சின்னையா திறக்க, காரில் உட்கார்ந்து அவரே ஓட்டிச் சென்றார். கார் வெகு வேகமாய், விஜயா ஸ்டுடியோவிற்குள் நுழைந்தது. நாங்கள் மேக்கப் அறைக்குள் நுழைந்தோம். மேக்கப் மேன் பீதாம்பரம், அரைமணி நேரத்திற்குள் தங்கவேலுவுக்கு ஒரு சிப்பாய் மாதிரி வேஷம்போட்டு வெளியில் கொண்டுவந்துவிட்டார். அன்றைய தினம் ஸாஹினிபுரொடக்ஷன் ஸாரன்,



முக அலங்காரத்தின்
முக்கிய சாதனங்கள்

ஐடெக்ஸ்
கண் மை

அரவிந்த் பிந்தி
குங்கும சாந்து

அரவிந்த் லாபரட்டரீஸ்

மதராஸ்-17

[எங்கிருந்தோ படபடவென கைதட்டல் சப்தம் கேட்கிறது.]

"நம்ம மாறன் டய்லாக்னு திரையிலே காட்டினதும் நான் இப்படித் தான் கை தட்டினேன்."

"படத்திலே 'க்ஷண சித்தம் க்ஷணப் பித்தம்? 'கிரஹக் கோளாறு' இப்படியெல்லாம் வசனங்க அடிபட்டுதும். சீன்னு ஆயிடுத்து. மொத்தத்திலே......"

"மனமுள்ள மறுதாரம், படமா அது?"

"ஹீரோ... சிவாஜியை இமிடேட் பண்ணும நடிச்சாருன்னு தேவலை..."

"கல்யாணத் தரகரா வரவரு நல்லா நடிக்கிறாரு...... ஆனா... அந்த மாதிரிக் காட்சியை பத்து வருஷத்துக்கு முந்திப் பார்த்திருக்கணும்."

[மறுபடி உயர் வகுப்புப் பக்கம் போனேன்.]

"பெரிய கோயில் ஒரு பெரிய ஏமாற்றமா முடிஞ்சிடுத்துங்க."

"தை பிறந்தால் வழி பிறக்கும் வேலனே இல்லீங்க..."

"இருந்திருந்தாப்லே சிங்கம் வருதுங்க...ஒரே வேடிக்கைதான்."

"அவரு ஒருத்தரே எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக்கிட்டதன் பலன்."

"அதோ ஜனங்க வராங்க... என்ன சொல்றாங்க பார்ப்போம்"

["ஜிம்போ" படம் முடிந்து ஜனங்கள் திரும்புகின்றனர். "படம் எப்படிங்க?" என்று க்யூவில் நிற்கிறவர்கள் அவர்களிடம் கேட்கிறார்கள்.]

"தமிழ்ப் படம்ங்கிறதை மறந்துட்டுப் பார்த்தா படம் ஏ ஒன்."

"இதுவரை வந்த கலர்ப் படங்களிலேயே பெஸ்ட்டுங்க."

"என்ன ஸீன்... என்ன டிரஸ்."

"செங்கோட்டை சிங்கம் மாதிரித் தான்... ஆனால், இது நல்லா இருக்கு... புலி... சிங்கம் சண்டையெல்லாம் நிஜமாலுமே எடுத்துக்கிறாங்க."

GP.

தங்கவேலுடன் ஒரு நாள்



ஜூலை மாத குண்டூசி இதழில் பிரசுரிக்கப் பட்டிருந்த ஒரு 'தாடி சாமியாரின்' புகைப் படத்திற்கு, "ஒரு நகைச்சுவை மன்னன்" என்று குறிப்பிட்டிருந்தும், நேயர்களிடமிருந்து வந்த ஏராளமான கடிதங்களில் "சிவாஜியா? ஜெமினியா? எம்ஜியாரா? எஸ்ஸெஸ் ஸாரா? சந்திரபாபுவா?" என்றெல்லாம் தான் எழுதிக் கேட்டிருந்தார்கள். ஆனால் ஒரு சிலர் மட்டும் இந்த அதிசயத் தாடிச் சாமியாரை யார் என்று கண்டுபிடித்து, 'வரும் இதழில் "இவருடன் ஒரு நாள்" புகைப்பட கட்டுரையும் எழுதவேண்டும்' என ஓர் அன்புக் கட்டளையும் விடுத்திருந்தனர். அதன்படியே நகைச்சுவை மன்னன், தங்கவேலு அவர்களைத் தேடிக்கொண்டு விஜயா ஸ்டுடியோவிற்குப் புறப்பட்டேன்.

என்னைக் கண்ட தங்கவேலு "வணக்கம் வாத்தியாரே, வாங்க" என்றார். நான் வந்த விஷயத்தை அவரிடம்

இருக்கும், இதற்குள் அன்னபூர்ணபில்ம்ஸின் டைரெக்டர் ஏ. சுப்பராவ் வந்து விட்டார். ராவுடன் மறுபடியும் ஸெட்டிற்குள் நுழைந்தோம். ராஜசுலோசனுவின் பாகம் ஒன்பது மணிக்கே

முடிந்து விட்டது. அவருடன் தமாஷாகப் பேசி வழியனுப்பி விட்டு, தன் பாகத்தை மிகவும் பொறுமையாகவும், நிதானமாகவும் டைரெக்டர் திருப்தி அடையும் வரை நன்ருக நடித்தார்.

10–30 மணிக்கு ஷூட்டிங்கை முடித்துக் கொண்டு, சரியாக இரவு 11 மணிக்கு வீடு திரும்பினேம். ''இன்றைக்கு வாத்தியாருக்கு ரெபமபவும் சரமம்'' என்றேன். ''இது எங்களுக்குப்' பழக்கமாய்விட்டது. சில நாள், மூன்று மணி, நான்கு மணி, இரவு பூராவும், இப்படி எல்லாம் கூட இருக்கும்'' என்ருர். ''எல்லாம் உங்கள் ஆசீர்வாதம். ஆண்டவன் சித்தம்'' என்ருர். ''வணக்கம், வருகிறேன் வாத்தியாரே'' என்று விடை பெற்றுக் கொண்டு வீடு வந்து சேர்ந்தேன்.

ஏ எல் எஸ்
புரொடக்ஷன்ஸ்
மகிழ்ச்சியுடன் வெளியிடும்
ஹாஸ்ய
சித்திரம்
பத்மினி பிக்சர்ஸ்
சபாஷ்
மீனா
டைரக்ஷன்
B.R.பந்துலு
ஸ்டுடியோ : பரணி
சென்னை
காஸினோ ◦ பாரத்
மஹாலக்ஷ்மி
(பெரம்பூர்)
மற்றும் தென்னாடெங்கும்
நடைபெறுகிறது
ALS
PRODUCTIONS
ARUNA



சாந்தா - சிவஸ்வாமி
மணமகன் நமது இலங்கை ஏஜண்ட்

வாழ்த்துகிறோம்

நமது காரியாலயத்தைச் சேர்ந்த டி. வி. லட்சுமணன், திருமதி சரோஜாவைத் தன் வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றார். அதே தினம் திரு லட்சுமணனின் சகோதரர் திரு டி. வி. ராஜசுந்தரம் திருமதி மீனாட்சியைத் தன் வாழ்க்கைத் துணைவியாக அடைந்தார்.

நமது நாமக்கல் ஏஜண்ட் செல்வன் ஜே. பொன்னுசாமி, செல்வி துளசிபாயைத் தம் மனைவியாக அடைந்தார்.

திருச்சி, மீனாட்சி கார்ப்பரேஷன் நிர்வாக பாகஸ்தர் வி. எஸ். கருப்பையா, தமது புத்திரி செல்வி சரஸ்வதியை கண்ட்ராமாணிக்கம் பிஎல். எம் என். நாச்சியப்பச் செட்டியார் மகன் செல்வன் மெய்யப்பனுக்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

காஞ்சீபுரம் வியாபாரி திரு. என். வரதன் அவர்கள் 15ம் தேதியில் திருமதி லலிதாவைத் தன் வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றார்.

மதராஸ் போட்டோ ஸ்டோர்ஸ், ஆட்டோகிராப் ஆகியவற்றின் முதலாளியான கே. சுந்தரேசன் தம் புத்திரி சௌ. சாந்தலட்சுமியை, பம்பாய் நியூ இந்தியாஅஷ்யூரன்ஸ் கம்பெனியில்பணி புரியும் சிரஞ்சீவி எஸ். விஸ்வநாதனுக்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

பட உலகப் பிரமுகரான விஆர். வி. ஆர். எம். அடைக்கப்பச் செட்டியார் தமது செல்வன் சிரஞ்சீவி ஏ. ராமநாதனின் திருமணத்தை சென்ற மாதம் வெகு சிறப்பாக தேவகோட்டையில் நடத்தினர். மணமகள் செல்வி சீதாலட்சுமி என். கே. எஸ். ஆர்எம். பிஎல். ஏகப்பச் செட்டியாரின் புத்திரி.

நமது திருநெல்வேலி ஏஜண்ட் திரு கோபாலகிருஷ்ணன், செல்வி பாலாம்

மெய்யப்பன்—சரஸ்வதி

ரூபாய் 6/- க்கு ஒரு கடிகாரம்

சங்கிலித் தொடர்பு முறையில் ரூ. 6/-க்கு ஒரு கடிகாரத்தைப் பெறுங்கள். 15 ஜுவல்கள் கொண்ட இக்கடிகாரம் 5 வருஷ உத்திரவாதமுள்ளது. தபால் செலவு 1-25 நயாபைசே தனி. எங்களுடைய பாரடைஸ் சென்டைப் பிரபலப் படுத்தவே, இதை ஆரம்பித்திருக்கிறோம். நீங்கள் விரும்பாவிட்டால் பணம் வாபஸ்.

American Trading Company,
(Watch Suppliers)
(M. G.) JULLUNDER CITY.

நவீன் ரக பட்டாடைகள்

உயர்ந்த வேலைப் பாடுகள் அமைந்த பட்டுச் சேலைகள், ஜார்ஜெட், கிரேப் சேலைகள், சோளி பீஸ்கள், சேலை அகலமுள்ள பாவாடைகள், வேஷ்டிகள் முத

லிய பட்டு & நூல் ஜவுளிகளுக்கு கீர்த்தி பெற்ற நாணயமான இட

ராதா ஸில்க் எம்போரியம்

பெரிய தெரு, கும்பகோணம்

அழியாப் புகழ் பெற்ற
1001 இரவுகள் என்ற

அரபுக் கதைகள்

—புத்தகம் 3

அ. லெ. நடராஜன்
தமிழாக்கியது.

ஓர் இரவு மாப்பிள்ளை கதை, ஒரு நாள் ராஜா கதை, அண்டப் புளுகனும் ஆகாயப் புளுகனும், காதலின் உச்ச நிலை, மகா சோம்பேறி கதை, பேரழகி கதை, ஊடியவர் கூடிய கதை, கை அழகினால் ஏற்பட்ட காதல், பலே திருடன், கைதேர்ந்த திருடன்—இன்னும் பல கதைகள்.

அரபுக் கதைகள்

—புத்தகம் 4

மாயக் குதிரையின் கதை, மந்திரி குமாரி கதை, காதலின் தீவிரம், பள்ளிக்கூடத்திலே காதல், நெறி தவறிய மனைவி, நெறியுள்ள மனைவி, காதல் பித்து, நகை வியாபாரியின் கதை, சிந்துபாத் மாலுமி, பித்தளை நகரக் கதை—இன்னும் அநேகம்.

தனித் தனி ரூ. 1.50

தபால் செலவு
ஒவ்வொன்றுக்கும் ரூ. 0.75

கைவசம் உள்ள
மலிவுப் பதிப்பு நூல்கள்:-

மகாகவி பாரதியார் கவிதைகள்	ரூ. 1.75
காய்கறித் தோட்டம்	ரூ. 1.25
திருக்குறள்	ரூ. 2.00
கம்பராமாயணம் 1. பால காண்டம், அயோத்தியா காண்டம்.	ரூ. 2.00

(தபால் செலவு தனி)

சக்தி காரியாலயம், சென்னை-6.

KRC

இது செய்தி

ஆர்ட்ஸ் அகாடமி விழா

தியாகராய நகரில் நல்ல முறையில் நடைபெற்று வரும் ஆர்ட்ஸ் அகாடமி கடந்த மாதம் வெகு சிறப்பாகத் தனது இரண்டாவது ஆண்டு விழாவைக் கொண்டாடியது. நீதிபதி ஏ. எஸ். 'பி. அய்யர் தலைமை வகிக்க, நகர மேயர் தாரா செரியன் விழாவை ஆரம்பித்து வைத்தார்.

லட்சியவாதி

மயிலை, சாயி கலா மண்டபத்தில், கணேஷ் கலைச் சங்கத்தார் "இலட்சிய வாதி" என்ற நாடகத்தை நடித்தனர். நாடகத்தை ஜி. கார்த்திகேயன் எழுதி

"உந்தன் உள்ளம் கொள்ளைகொண்ட கள்வன் யாரடி?" —"அதிசயத் திருடனில்" சாவித்திரி.

யிருந்தார். உயிருள்ள வசனங்கள். கதையில் சில இடங்களில் தொடர்பு இருந்திருந்தால் மிக நன்றாக இருந்தி ருக்கும். சேகராக நடித்த பாரத்வாஜ் மிகநன்றாக நடித்தார். சேகரின் தந்தை ராமசாமி முதலியாராக நடித்த நாடக ஆசிரியர் கார்த்திகேயனின் நடிப்பு அப்பாத்திரத்தில் கருமித்தனத்தைக் காட்டுவதுமல்லால் சிரிப்பூட்டும் படியாகவும் இருந்தது. இதைத் திறம்பட டைரெக்ட் செய்திருந்தவரும் ஜி.

ஜெமினி கணேசனின் காரியதரிசி வெ. மகாலிங்கத்தின் சகோதரி, சௌ. சாந்தலக்ஷ்மிக்கும், சிர. கோபாலகிருஷ்ணனுக்கும், சமீபத்தில் சென்னையில் விமரிசையாக விவாகம் நடைபெற்றது.

கார்த்திகேயன் இன்னும் சிறிது நன்றாகச் செய்திருந்தால்' பரவாயில்லை என்ற பெயரிலிருந்து அவர் தப்பியிருக்கலாம்.

அதிசயப் பெண்

படாதிபதி-டைரெக்டர் எம். வி. ராமன் பம்பாயில் தனது சொந்த ஸ்டுடியோவில் தமிழில் தயாரித்து வரும் "அதிசயப் பெண்" முடிவடையும் தறுவாயில் இருக்கிறது. இதன் பெரும் பகுதி வர்ணத்தில் எடுக்கப்பட்டுள்ளதால் தணிக்கையான பிறகு பிரதிகள் எடுக்க டைரெக்டர் லண்டனுக்குச் செல்வார். தீபாவளியின் போது தென்னிந்தியா முழுவதும் இப்படம் திரையிடப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. ஜாவர் சீதாராமன் கதை, — வசனம் எழுதியுள்ள இப்படத்தில் வைஜயந்திமாலா, மாதுரிதேவி, மனோகர், நாகேசுவர ராவ், கே. சாரங்கபாணி, ஜாவர் சீதாராமன், எம். எஸ். கருப்பையா முதலியோர் நடிக்கிறார்கள். பாடல்களை வீ. சீதாராமன் எழுதியிருக்கிறார். சங்கீத டைரெக்ஷன்: எஸ். எம். சுப்பையா நாயுடு.

தங்க வாள் பரிசு.

புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனுக்கு இம்மாதம் இரண்டாவது வாரத்தில் மதுரையில் ஒரு தங்க வாள் பரிசு அளிக்க மதுரையிலுள்ள சில சினிமா ரஸிகர்கள் தீவிர ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.



C. L. Mani
ஏவிஎம் புரொடக்ஷன்ஸ்
மாமியார் மெச்சின மருமகள்
தயாரிப்பு: டைரக்ஷன்:
கிருஷ்ணன் பஞ்சு

எம். என். ராஜம்—ராஜேந்திரன் காதல் ஜோடியாக நடிக்கும் இப் படத்தின் கதை ஹாஸ்ய நிகழ்ச்சிகளைக் கொண்டு பின்னப்பட்டுள்ளது.

பாலேத் தன் வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றார்.

கல்யாணி பிக்சர்ஸின் பாகஸ்தர் எஸ். ஆர். நடராஜன் தமது புத்திரன் திருநாவுக்கரசு திருமணத்தை சிறப்பாக நடத்தினர். மணமகள் செல்வி இந்திராணி.

மணமக்கள் அனைவருக்கும் "குண்டுசி"யின் உளமார்ந்த வாழ்த்துக்கள்.

நல்ல பெண்கள் நாட்டின் கண்கள்

வினோபவின் பூதானத்தை அடிப்படையாகக் கொண்டு, நிலப் பிரச்னையைத் தீர்க்கக் கூடிய கதை ஒன்றை சித்ரா மூவிஸ் தயாரிக்கத் திட்டம் போட்டுள்ளனர். "நல்ல பெண்கள்—நாட்டின் கண்கள்" என்று அதற்குப் பெயரும் வைத்து விட்டார்கள். எம். ஆர். ராதா, எம். கே. முஸ்தபா, தர்மராஜ், பி. எஸ். சரோஜா, குசலகுமாரி, கமலா (ஜெயந்தி) சந்தியா முதலியோர் நடிக்கிறார்கள். சங்கீதம் பாண்டுரங்கம். பாடல்கள்: கோவை சபாபதி.

ஜெமினி ஜரூர்

சாதாரணமாக ஜெமினி ஸ்டுடியோவில் இதுவரை வெளியார் படங்கள் அதிகமாகத் தயாரிக்கப்படாமல்தான் இருந்து வந்தது. தற்போது அங்கே வாஸு பிலிம்ஸின் "ஒரே வழி" யும் கண்ணதாசன் பிலிம்ஸின் "சிவகங்கைச் சீமை" யும் படமாகி வருகின்றன.

மணி மண்டபம்

அமரகாவியங்களைப் படைத்த மகா கவியின் எண்ணங்களையும், கருத்துக்களையும் உயரிய சிந்தனைகளையும் அஸ்திவாரமாக வைத்து திரைப்பட உலகில் ஒரு "மணி மண்டபம்" எழுப்ப விக்ரம் புரொடக்ஷன்ஸ் பி. எஸ். ரங்கா ஏற்பாடு செய்துள்ளார். "ராஜா மலய சிம்மனை"த் திரையிடுவதற்கு முன்னமேயே, துரிதத் தயாரிப்பாக இம் "மணி மண்டபம்" தயாராகிவிடும். இப்படத்தின் கதை வசனம் பாடல்களை கவிஞர் கண்ணதாசன் எழுதுகிறார்.

வாழ்க்கை வாழ்வதற்கே.

குமுதம் பிச்சர்ஸ் படக் கம்பெனியார் "வாழ்க்கை வாழ்வதற்கே" என்ற படத்தைத் தயாரிக்கப் போகின்றனர். இப் படத்தின் கதை,—வசனத்தை மாஜினி எழுதுகிறார். டைரக்டர் கே. சுப்ரமணியதின் மகனை எஸ். பாலகிருஷ்ணன் இந்தப் படத்தை டைரக்ட் செய்யவிருக்கிறார். இந்தப்படத்தில் கதா நாயகனை நடிக்க டி. கே. பாலசந்தர் இப்பொழுது ஒப்பந்தம் ஆகியுள்ளார்.

அன்பு எங்கே.?

பிரம்மாண்டமான முறையில் "பார்த்திபன் கனவு" படத்தைத் தயாரித்து வரும் ஜுபிலி பிலிம்ஸார் இடையே குறுகிய காலத் திட்டத்தில் தயாரித்து வரும் சமூகப் படத்திற்கு "அன்பு எங்கே" என்று இப்போது பெயர் வைத்திருக்கிறார்கள். பாலாஜி, எஸ். எஸ். ராஜேந்திரன், சூரியகலா, தேவிகா, டி. ஆர். ராமச்சந்திரன், மைனாவதி, பண்டரி பாய், ரங்கராவ் ஆகியோர் இந்தப் படத்தில் நடிக்கிறார்கள். வசனங்களை மாறன் எழுதியுள்ளார், யோகானந்த் டைரக்ஷனில் படம் கோல்டன் ஸ்டுடியோவில் பூர்த்தி பெற்று வருகிறது.

பார்வதியின் பிரார்த்தனை.

பிரபல வசன கர்த்தவான எஸ். டி. சுந்தரம் தம் சொந்தத்தில் தயாரித்து வரும் படத்திற்கு "பார்வதியின் பிரார்த்தனை" என்று நாமகரணம் செய்திருக்கிறார். இந்தப் படத்தில் டி. ஆர். மகாலிங்கம், எம். என். ராஜம், கண்ணம்பா, கே. சாரங்கபாணி, வி. கே. ராமசாமி, கருணாநிதி முதலியோர் நடிக்கிறார்கள். படத்திற்கென சில பாடல்கள் பாரமௌண்ட் ஸ்டுடியோவில் பதிவாகியுள்ளன.

மனம் போல் வாழ்வு

நடிகை 'லொள் லொள்' ராஜாமணி, நமது சொந்தப் பொறுப்பில் "அமுத கலா மன்றம்" என்ற நாடகக் கம்பெனியைத் தோற்று வித்துள்ளார். அமரா புரொடக்ஷனைச் சேர்ந்த வி. ஆர். ஜனார்த்தனம் தலைமையில் தமது முதல் நாடகமாக "மனம் போல் வாழ்வு" பூஜையை சமீபத்தில் நடத்தினர். இ. ரா. விமலன் எழுதிய இந்த நாடகத்திற்கு நடிகையே பயிற்சி அளிக்கிறார்.

Printed by K. Ganapathiraman at the Vadapalani Press, Madras-26 and Edited and Published by K. Radhakrishnan, 6 Conronsmith Road, Madras-6 for the proprietor of M/s. Nataraja Publications.

For pleasing results. . .
INSIST ON
Klein & Peyerl BLOCKS
30, MOUNT ROAD, MADRAS-2

[illegible]கையில் கிடைக்கும் இடம்: A. V. R. A. LTD., Colombo.
ரேடியோ ஸிலோன் 41-72 மீட்டரில் 'இசை விருந்து'—
வெள்ளிக்கிழமை தோறும், மாலே 6-30 முதல் 6-45 வரை.